# தினபூமி

thinaboomi.com


பூமி: 31 சுற்று: 211 ஆனி 22

Regd. No.TRY/050/2023-2025 RNI Regn. No.61511/94

திருச்சி, ஞாயிறு, ஜூலை 06, 2025

சென்னை | மதுரை | திருச்சி | கோவை | நெல்லை | சேலம் | வேலூர் | புதுச்சேரி

பக்கம் 8 ₹ 3.00

## புதிய வரி விகிதம் ஆக.1 முதல் அமல்: 12 நாடுகளுக்கான வரி கடிதத்தில் கையெழுத்திட்டார் அதிபர் ட்ரம்ப்

...2-ம் பக்கம்

## மத்திய அரசின் வேலைவாய்ப்பு ஊக்கத்தொகை திட்டம் வரும் ஆகஸ்டு 1 முதல் அமல்

...3-ம் பக்கம்

## யு-19 ஒருநாள் போட்டி: அதிவேக சதம் விளாசி சூர்யவன்ஷி புதிய சாதனை

...6-ம் பக்கம்






தி.மு.க. தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின் நேற்று சென்னை அண்ணா அறிவாலயத்தில் 'உடன்பிறப்பே வா' என்ற தலைப்பில் சட்டமன்ற தொகுதிவாரியாக நிர்வாகிகளை தனித்தனியாக சந்தித்து பேசினார்.

### மகாராஷ்டிரா போராட்டம் உற்சாகம் தருகிறது:

### தமிழுக்கு பா.ஜ.க. செய்து வரும் துரோகத்துக்கு

### 'இந்தி' திணிப்பு விவகாரத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் காட்டம்

# தமிழ்நாடு மீண்டும் பாடம் கற்பிக்கும்

சென்னை, ஜூலை 06-

**தமிழுக்கும் தமிழ்நாட்டுக்கும் பா.ஜ.க. செய்துவரும் துரோகத்துக்கு பா.ஜ.க. பரிகாரம் தேட வேண்டும். இல்லையேல், அவர்களுக்கும் அவர்களது புதிய கூட்டாளிகளுக்கும் தமிழ்நாடு மறக்க முடியாத பாடத்தை மீண்டுமொருமுறை கற்பிக்கும்.**

சூறாவளியாக...

இந்தித் திணிப்பை முறியடிக்க திராவிட முன்னேற்றக் கழகமும், தமிழ்நாட்டு மக்களும் தலைமுறை தலைமுறையாக நடத்திவரும் மொழி உரிமைப் போர், மாநில எல்லைகளைக் கடந்து இப்போது மகாராஷ்டிராவில் போராட்டம் சூறாவளியாகச் சுழன்றடித்துக் கொண்டிருக்கிறது. தமிழ்நாட்டுப் பள்ளிகளில் மூன்றாவது மொழியாக இந்தியைக் கற்பித்தால்தான் நிதியை ஒதுக்குவோம் என்று சட்டத்துக்குப் புறம்பாகவும் அராஜகமாகவும் நடந்து கொள்ளும் பா.ஜ.க., தாங்கள் ஆட்சி செய்யும் மகாராஷ்டிராவில் மக்கள் எழுச்சிக்கு அஞ்சி இரண்டாம் முறையாகப் பின்வாங்கி இருக்கிறார்கள்.

**உற்சாகம் தருகிறது...**

இந்தித் திணிப்புக்கு எதிராகச் சகோதரர் உத்தவ் தாக்கரே தலைமையில் மும்பையில் நடந்த வெற்றிக் கொண்டாட்டப் பேரணியின் எழுச்சியும், உரை வீச்சும் மிகுந்த உற்சாகம் தருகிறது. உத்தர பிரதேசத்திலும், ராஜஸ்தானிலும் கற்பிக்கப்படும் மூன்றாம் மொழி என்ன?" என்றும், "இந்தி பேசும் மாநிலங்கள் பின்தங்கி இருக்கின்றன - இந்தி பேசாத முன்னேறிய மாநிலங்களின் மக்கள் மீது ஏன் இந்தியைத் திணிக்கிறீர்கள்?" என்றும் ராஜ் தாக்கரே எழுப்பிய கேள்விகளுக்கு, இந்தியையும், சமஸ்கிருதத்தையும் வளர்ப்பதையே முழுநேர முன்னுரிமையாக வைத்திருக்கிற மத்திய அரசிடம் எந்த பதிலும் இருக்காது என்பதை நன்றாக அறிவேன்.

**மாற்றிக் கொள்ளுமா..?**

மும்மொழிக் கொள்கை என்ற பெயரில் இந்தி - சமஸ்கிருதத்தைத் திணிக்கும் புதிய கல்விக் கொள்கையை ஏற்றுக் கொண்டால் மட்டுமே ஒருங்கிணைந்த கல்வித் திட்ட (சமக்ர சிக்ஷா அபியான்) நிதி ரூ.2,152 கோடியை விடுவிப்போம் என்று தமிழ்நாட்டைப் பழிவாங்கும் போக்கை மத்திய அரசு மாற்றிக் கொள்ளுமா? தமிழ்நாட்டுப் பள்ளிக் குழந்தைகளின் கல்விக்காகச் சட்டப்பூர்வமாக வழங்க வேண்டிய நிதியை உடனே விடுவிக்குமா?

**உணர்வுமயமானது...**

இந்தி ஆதிக்கத்துக்கு எதிராகத் தமிழ்நாட்டு மக்கள் நடத்திவரும் போராட்டம் உணர்வுமயமானது மட்டுமல்ல, அறிவுப்பூர்வமானது. தர்க்கப்பூர்வமானது. இந்தியாவின் பன்மைக் கலாசாரத்தை பாதுகாப்பதற்கானது. வெறுப் பின்பாற்பட்டது அல்ல. இந்தித் திணிப்பால் ஏராளமான இந்திய மொழிகள் அழிந்த வரலாற்றை அறியாமலும், இந்தியாவை இந்தி நாடாக்கும் செயல்திட்டத்தைப் புரிந்துகொள்ளாமலும், "இந்தி படித்தால் வேலை கிடைக்கும்" என்ற பசப்பு வார்த்தைகளைக் கிளிப்பிள்ளைகளைப் போல ஒப்பித்துக் கொண்டிருக்கும் இங்குள்ள அப்பாவிகள் சிலர், இனியாவது திருந்த வேண்டும். மராட்டியத்தின் எழுச்சி அவர்களின் அறிவுக்கண்களைத் திறக்கும்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

> **தமிழுக்கும் தமிழ்நாட்டுக்கும் பா.ஜ.க. செய்துவரும் துரோகத்துக்கு பா.ஜ.க. பரிகாரம் தேட வேண்டும். இல்லையேல், அவர்களுக்கும் அவர்களது புதிய கூட்டாளிகளுக்கும் தமிழ்நாடு மறக்க முடியாத பாடத்தை மீண்டுமொருமுறை கற்பிக்கும். ஒன்றிணைவோம் வா. தமிழ்நாடு போராடும். தமிழ்நாடு வெல்லும்.**
>
> **- முதல்வர் மு.க.ஸ்டாலின்**

### 'உங்களுடன் ஸ்டாலின்' திட்டத்தின் முதல் முகாம்:

## ஜூலை 15-ல் சிதம்பரத்தில் தொடங்கி வைக்கிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின்

சென்னை, ஜூலை 06-

**உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் முதல் முகாமை ஜூலை 15-ல் சிதம்பரத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார். இந்த திட்டத்தின் கீழ் மக்களின் குறைகளை நேரடியாக கேட்டறிய தமிழகம் முழுவதும் 10 ஆயிரம் முகாம்கள் ஜூலை 15 முதல் நவம்பர் மாதம் வரை அனைத்து மாவட்டங்களிலும் நடைபெறும்.**

இதுகுறித்து தமிழ்நாடு அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பில், தமிழ்நாடு முதல்வர் இந்த ஆண்டு சட்டப்பேரவையில் பேரவையில் மக்களின் குறைகளை நேரடியாக கேட்டறியும் பணிகள் துவக்கப்படும் என அறிவித்திருந்தார். முதல்வரின் அறிவிப்பின்படி, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நகர்ப்புற மற்றும் ஊரகப் பகுதிகளில், உங்களுடன் ஸ்டாலின் என்ற திட்டம் துவக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 10,000 சிறப்பு முகாம்கள் நடத்தப்படும்.

உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் நடத்தப்படும் முதல் முகாமினை, வரும் 15.07.2025 அன்று தமிழ்நாடு முதல்வர் கடலூர் மாவட்டம் சிதம்பரம் நகராட்சியில் தொடங்கி வைக்க உள்ளார். இந்தத் திட்டம் ஜூலை 15 முதல் நவம்பர் மாதம் வரை அனைத்து மாவட்டங்களிலும் நடைபெறும். தமிழ்நாட்டில் உள்ள கடைகோடி மக்களுக்கும், அவர்கள் அன்றாடம் அணுகும் அரசுத் துறைகளின் சேவைகள் / திட்டங்களை அவர்கள் வசிக்கும் பகுதிக்கே சென்று வழங்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இத்திட்டத்தின் கீழ் நகர்ப்புறப் பகுதிகளில் 3,768 முகாம்களும் ஊரகப் பகுதிகளில் 6,232 முகாம்களும் நடைபெறும். இந்த முகாம்களில் நகர்ப்புற பகுதிகளில் 13 அரசுத் துறைகளைச் சார்ந்த 43 சேவைகளும், ஊரகப் பகுதிகளில் 15 துறைகளைச் சார்ந்த 46 சேவைகளும் வழங்கப்படும். அத்துடன் முகாம்களுக்கு வருகை தரும் பொது மக்களின் உடல் நலனைப் பேணும் வகையில், மருத்துவ சேவைகளை வழங்க, மருத்துவ முகாம்களும் நடத்தப்படும்.

இத்திட்டத்தின் கீழ், தன்னார்வலர்கள், ஒவ்வொரு வீட்டிற்கும் நேரடியாகச் சென்று, முகாம் நடைபெறும் நாள். இடம் குறித்த விவரங்கள், அங்கு வழங்கப்படவுள்ள பல்வேறு அரசு துறைகளின் திட்டங்கள்/ சேவைகளை விவரித்து, அவற்றில் பயனடைவதற்கான தகுதிகள், தேவைப்படும் ஆவணங்கள் குறித்து தெரிவிப்பதோடு தகவல் கையேட்டினையும், விண்ணப்பத்தினையும் வழங்குவர்.

மேலும் இந்த முகாம்களில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை பெறத் தகுதியுள்ள விடுபட்ட மகளிர் எவரேனும் இருப்பின் முகாம் நடைபெறும் நாளன்று முகாமிற்குச் சென்று தங்கள் விண்ணப்பத்தினை அளிக்கலாம். கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்திற்கான விண்ணப்பம் உங்களுடன் ஸ்டாலின் முகாம்களில் மட்டுமே வழங்கப்படும். இம்முகாம்களில் பெறப்படும் விண்ணப்பங்கள் மீது 45 நாட்களில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இத்திட்டம் குறித்த விபரங்களை பொதுமக்களுக்கு முறையாக தெரிவிப்பதற்காக, உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் தன்னார்வலர்கள் மூலம் வீடு வீடாக சென்று விண்ணப்பம் மற்றும் தகவல் கையேடு வழங்கும் பணி. 07.07.2025 முதல் தொடங்க உள்ளது.

இந்தப் பணி மூன்று மாதங்கள் தொடர்ச்சியாக நடைபெறும். இப்பணிக்காக சுமார் 1 லட்சம் தன்னார்வலர்கள் ஈடுபடுத்தப்பட உள்ளனர். உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தில் உங்கள் பகுதிகளில் நடைபெறும் முகாம்களில் பொது மக்கள் அனைவரும் கலந்து கொண்டு பயன் பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

## அமித்ஷாவின் தமிழக பயணம் ரத்து?

புதுடெல்லி, ஜூலை 06-

**மத்திய அமைச்சர் அமித்ஷாவின் தமிழக பயணம் ரத்து செய்யப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.**

தமிழகத்தில் அடுத்தாண்டு சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் கட்சிகள், தேர்தல் பணிகளில் தீவிரம் காட்டி வருகின்றன. மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா கடந்த ஏப்ரல் மாதம் சென்னை வந்து அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணியை உறுதி செய்தார். பின்னர் கடந்த மாதம் மதுரையில் வந்த அமித்ஷா, பா.ஜ.க. நிர்வாகிகளுடன் ஆலோசனை மேற்கொண்டார்.

தொடர்ந்து நாளை (ஜூலை 7) சென்னை வரவிருந்த நிலையில் தனிப்பட்ட காரணங்களால் அவரது பயணம் ரத்து செய்யப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. எனினும் இதுபற்றிய அதிகாரப்பூர்வ தகவல் இல்லை. பா.ஜ.க. தேசிய தலைமை மாற்றம் தொடர்பான பணிகளில் அவர் மும்முரமாக இருப்பதாகவும் கட்சித் தலைமை நியமனத்திற்குப் பிறகு அவர் தமிழகம் வருவார் என்றும் கூறப்படுகிறது.

# எடப்பாடி பழனிசாமிக்கு 'இசட் பிளஸ்' பாதுகாப்பு

சென்னை, ஜூலை 06-



**அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமிக்கு இசட் பிளஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.**

தமிழக முன்னாள் முதல்வரும், அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், தமிழக சட்டப் பேரவை எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி பழனிசாமிக்கு Z+ பாதுகாப்பு வழங்கி மத்திய உள்துறை அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது. முன்னதாக எடப்பாடி பழனிசாமிக்கு Y+ பாதுகாப்பு வழங்கப்பட்டு வந்த நிலையில், தற்போது அவருக்கான பாதுகாப்பு Z+ ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் அடுத்த ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ளது. இதற்காக 'மக்களை காப்போம், தமிழகத்தை மீட்போம்' என்ற பெயரில் வரும் ஜூலை 7ம் தேதி முதல் தமிழகம் முழுவதும் எடப்பாடி பழனிசாமி சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார். அதற்கான பாடல் மற்றும் லோகாவை நேற்று இ.பி.எஸ். வெளியிட்டார்.

அதனைத் தொடர்ந்து வரும் ஜூலை 7-ம் தேதி கோவை மேட்டுப்பாளையத்தில் இந்த சுற்றுப்பயணத்தை தொடங்குகிறார் இ.பி.எஸ்.. இந்தச் சூழலில் அவருக்கு கூடுதல் பாதுகாப்பு வழங்கும் வகையில், இசட் பிளஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. இசட் பிளஸ் பாதுகாப்பில் 12 கமாண்டோ படை வீரர்கள், 52 காவலர்கள் இடம் பெறுவார்கள். எடப்பாடி பழனிசாமி வீட்டுக்கு அடிக்கடி வரும் வெடிகுண்டு மிரட்டல் எதிரொலியாக இசட் பிளஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

## மேற்கு வங்காளத்தில் குண்டுவெடிப்பு: ஒருவர் பலி

கொல்கத்தா, ஜூலை 06-

**மேற்கு வங்கத்தில் நாட்டு வெடி குண்டு வெடித்ததில் ஒருவர் பலியான நிகழ்வு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.**

மேற்கு வங்க மாநிலம், புர்பா பர்தமான் மாவட்டத்தில் உள்ள ரஜோவா கிராமத்தில் வீடு ஒன்றில் நேற்றிரவு 8.30 மணியளவில் நாட்டு வெடி குண்டு திடீரென வெடித்தது. தகவல் அறிந்ததும் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த போலீஸார் வீட்டின் உள்ளே இருந்து ஒரு எரிந்த உடலை மீட்டனர். மற்றொரு நபர் படுகாயமடைந்த நிலையில் உள்ளூர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

குண்டு வெடிப்பு நடந்த சமயத்தில், உள்ளூர் சமூக விரோதி ஒருவர், நாட்டு வெடிகுண்டுகளை வீட்டிற்குள் தயாரிப்பதற்காக ஒரு கும்பலை அழைத்து வந்ததாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

அந்த வீடு வெடிகுண்டு தயாரிக்கும் மையமாக பயன்படுத்தப்பட்டதா அல்லது வேறு தொடர்புகள் உள்ளதா என்பது குறித்து விசாரித்து வருகிறோம் என்று போலீஸ் அதிகாரி ஒருவர் கூறினார்.

உடல் உடற்கூராய்வுக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. மேலும் குண்டுவெடிப்பு நடந்த இடத்தை தடயவியல் குழு ஆய்வு செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நாட்டு குண்டுகளை தயாரிப்பதற்காக சமூக விரோதிகள் அடிக்கடி வந்து செல்லும் கைவிடப்பட்ட வீடு ஒன்றில் வெடிப்பு ஏற்பட்டதாக உள்ளூர்வாசிகள் தெரிவித்தனர்.

### மொஹரம் பண்டிகை:

## வரும் 7-ம் தேதி அரசு விடுமுறை என பரவும் தகவலுக்கு மறுப்பு

சென்னை, ஜூலை 06-

**மொஹரம் பண்டிகை ஜூலை 6-ம் தேதிதான் என்றும், இந்தப் பண்டிகையை முன்னிட்டு ஜூலை 7, 2025 (திங்கட்கிழமை) அரசு விடுமுறை என்ற தகவல் தவறானது என்றும் தமிழக அரசின் உண்மை சரிபார்ப்பகம் உறுதி செய்திருக்கிறது.**

ஜூலை மாதம் பிறந்தது முதலே, மொஹரம் பண்டிகை குறித்த பல்வேறு தகவல்களும் வெளியாகி வந்தது. ஆனால், மொஹரம் பண்டிகை ஜூலை 6ஆம் தேதி என்று உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

இது குறித்து வெளியிடப்பட்டிருக்கும் தகவலில், மொஹரமை முன்னிட்டு ஜூலை 7 அன்று அரசு விடுமுறை என்று பரவும் தகவல் வதந்தி. ஹரமை முன்னிட்டு ஜூலை 7, 2025 (திங்கட்கிழமை) அரசு விடுமுறை என்ற தகவல் சமூக வலைத்தளங்களில் அதிகளவில் பகிரப்பட்டு வருகிறது. இது தவறான தகவலாகும்.

"கடந்த 26-06-2025 அன்று மொஹரம் மாத பிறை காயல்பட்டினத்தில் காணப்பட்டது. ஆகையால் 27-06-2025 தேதி அன்று மொஹரம் மாத முதல் பிறை என்று ஷரியத் முறைப்படி நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. எனவே யொமே ஷஹாதத் ஞாயிற்றுக்கிழமை 06-07-2025 ஆகும்." என்று தமிழ்நாடு அரசு தலைமை காஜி அறிவித்துள்ளார். வார விடுமுறையான ஞாயிற்றுக்கிழமை அந்த நாள் அறிவிக்கப்பட்டுள்ளதால் 07-07-2025 திங்கட்கிழமை அரசு விடுமுறை இல்லை. எனவே தவறான தகவலை பரப்பாதீர்கள் என்றும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

### அரசு மருத்துவ கல்லூரி டீன் நியமனம்:

## தனி நீதிபதியின் உத்தரவை உறுதி செய்தது ஐகோர்ட்

சென்னை, ஜூலை 06-

**அரசு மருத்துவ கல்லூரி டீன் நியமனம் தொடர்பாக, தனி நீதிபதியின் உத்தரவை சென்னை ஐகோர்ட் உறுதி செய்துள்ளது.**

தமிழகத்தில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரிகளில் முதல்வர் பதவிக்கு தகுதியானவர்கள் எனக் கூறி 26 பேராசிரியர்கள் கொண்ட பட்டியலை தயாரித்த தமிழக அரசு ஆட்சேபனை கோரியது. ஆனால், ஆட்சேபனைகள் தெரிவிக்கும் முன்பே 14 பேராசிரியர்களுக்கு பதவி உயர்வு வழங்கி முதல்வர்களாக நியமித்து, 2024 அக்டோபர் 3ம் தேதி அரசு உத்தரவிட்டது.

அரசு உத்தரவை எதிர்த்து பேராசிரியர் மனோன்மணி உள்பட நான்கு பேர் சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடுத்தனர். அந்த வழக்கை விசாரித்த தனி நீதிபதி, மனோன்மணி தரப்பு வாதத்தை ஏற்று 14 அரசு மருத்துவ கல்லூரி முதல்வர்கள் நியமனத்தை ரத்து செய்து உத்தரவிட்டார்.


இந்த உத்தரவை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு வழக்குகளை விசாரித்த நீதிபதிகள், 14 பேரின் நியமன உத்தரவை, தனி நீதிபதி ரத்து செய்தது சரி என்று கூறி, மேல் முறையீட்டு மனுக்களை ரத்து செய்து உத்தரவிட்டனர். மேலும், தனி நீதிபதி பிறப்பித்த உத்தரவின் அடிப்படையில், நான்கு வாரங்களில் அரசு மருத்துவ கல்லூரிகளுக்கு முதல்வர் பதவி உயர்வுக்கான பட்டியலை தயாரித்து, நியமனம் வழங்க வேண்டும் என தமிழக அரசுக்கு சென்னை ஐகோர்ட்டு உத்தரவிட்டுள்ளது.

**மார்க்கெட் விலை நிலவரம்**

| BSE | NSE | தங்கம் | வெள்ளி | டாலர் | பெட்ரோல் |
|---|---|---|---|---|---|
| 193.42 | 55.70 | 1 சவரன் ₹72,480 | 1 கிலோ ₹120,000 | ₹85.50 | ₹102.63 |
| பாயின்ட் 83,432.89 | பாயின்ட் 25,461.00 | 1 கிராம் ₹9,060 | 1 கிராம் ₹120.00 | | டீசல் ₹94.24 |

### புதிய வரி விகிதம் ஆகஸ்ட் 1 முதல் அமல்:

# 12 நாடுகளுக்கான வரி கடிதத்தில் கையெழுத்திட்டார் அதிபர் ட்ரம்ப்



**வாஷிங்டன், ஜூலை 06-**

வரி விகிதம் தொடர்பாக 12 நாடுகளுக்கான கடிதத்தில் தான் கையெழுத்து இட்டு விட்டதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார். மேலும் புதிய வரி விகிதம் ஆகஸ்ட் 1 முதல் அமலுக்கு வரும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனவரியில் அமெரிக்க அதிபராக மீண்டும் பதவியேற்ற டொனால்ட் ட்ரம்ப், பல்வேறு நாடுகளுக்கான இறக்குமதி வரியை கடுமையாக உயர்த்தினார். இதற்கு அனைத்து நாடுகளும் கடும் அதிருப்தி தெரிவித்தன. இதையடுத்து, பல்வேறு விதமான வரி விகிதங்களை மாற்றி 90 நாட்களுக்கு தற்காலிக அடிப்படை வரியாக 10%-ஐ நிர்ணயித்து ட்ரம்ப் உத்தரவிட்டார். இந்த காலக்கெடு முடிவடைவதற்குள் அமெரிக்கா உடன் ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொள்ள ட்ரம்ப் அழைப்பு விடுத்தார்.

இதையடுத்து, பல்வேறு நாடுகளும் அமெரிக்கா உடன் பேச்சுவார்த்தை நடத்தின. பிரிட்டன் உடனான பேச்சுவார்த்தை மட்டுமே முடிவுக்கு வந்தது. பிரிட்டனில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 10 சதவீதம் வரி உயர்வு மட்டும் விதிக்கப்படும் என்ற ஒப்பந்தம் எட்டப்பட்டது. ஐரோப்பிய ஒன்றியம், இந்தியா உள்பட பல நாடுகள் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றன. 90 நாட்கள் காலக்கெடு ஜூலை 9-ம் தேதியுடன் முடிவடைய உள்ளதால், அதற்குள் ஒப்பந்தத்தை மேற்கொள்ள பல நாடுகள் தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன.

நியூ ஜெர்சி செல்லும் வழியில் விமானத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அதிபர் டொனால்ட் ட்ரம்ப், “12 நாடுகளுக்கான வரி கடிதங்களில் கையெழுத்து இட்டு விட்டேன். அந்த நாடுகள் எவை எவை என்பது திங்கள் கிழமை வெளியிடப்படும். இதை எடுத்துக்கொள்ளுங்கள் அல்லது விட்டுவிடுங்கள் என்பதே அமெரிக்காவின் அணுகுமுறையாக இருக்கும். ஒப்பந்தத்தில் கையெழுத்திடாத நாடுகளுக்கு வரி விகிதம் அதிகரிக்கப்படும். அது அதிகபட்சம் 70% வரை இருக்கும். புதிய வரி விகிதம் ஆகஸ்ட் 1 முதல் அமலுக்கு வரும். என தெரிவித்துள்ளார்.

# கனமழை காரணமாக இமாசலில் 69 பேர் பலி

**சிம்லா, ஜூலை 06-**

இமாசல பிரதேசத்தில் மிக கனமழைக்கான சிவப்பு எச்சரிக்கையை இந்திய வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ளது.

இமாசலில் பருவமழை தீவிரமடைந்துள்ள நிலையில், கடந்த ஒரு வாரமாக பல்வேறு இடங்களில் மேக வெடிப்பு ஏற்பட்டு கன மழை பெய்துவருகின்றது. மேக வெடிப்புகளால் இது வரை 69 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் 37 பேர் காணாமல் போயுள்ளனர்.

இதற்கிடையில் ஜூலை 6, 7 ஆகிய தேதிகளில் காங்க்ரா, சிர்மௌர் மற்றும் மண்டி மாவட்டங்களில் கனமழை முதல் மிக கனமழை வரை பெய்யும் என சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது. உனா, பிலாஸ்பூர், ஹமீர்பூர், சம்பா, சோலன், சிம்லா மற்றும் குலு ஆகிய மாவட்டங்களுக்கு ஆரஞ்சு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது, குடியிருப்பாளர்கள் மற்றும் அதிகாரிகள் அதிக எச்சரிக்கையுடன் இருக்குமாறு இந்திய வானிலை எச்சரித்துள்ளது. ஜூலை 5 முதல் 9 வரை மாநிலத்தில் கடுமையான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக ஐஎம்டியின் சிம்லா மையம் வெள்ளிக்கிழமை தெரிவித்தது.

கடந்த 24 மணி நேரத்தில், தனிமைப்படுத்தப்பட்ட இடங்களில் கனமழை பெய்தது, அதே நேரத்தில் மாநிலத்தின் பல பகுதிகளில் லேசானது முதல் மிதமான மழை பெய்தது. அதிகபட்சமாக அகார் மாவட்டத்தில் 7 செ.மீ, அதைத் தொடர்ந்து, சாராஹான் மற்றும் சிம்லாவில் தலா 4 செ.மீ, மழைப் பதிவாகியுள்ளது.

# காசாவில் 613 பாலஸ்தீனியர்கள் கொலை: ஐ.நா. குற்றச்சாட்டு

**வாஷிங்டன், ஜூலை 06-**

கடந்த மே மாதத்தில் இருந்து காசாவில் நிவாரண உதவி பெற முயன்ற 613 பாலஸ்தீனியர்கள் கொலை செய்யப்பட்டுள்ளதாக ஐ.நா. தெரிவித்துள்ளது.

உணவு விநியோக மையங்களை நிர்வகிக்கும் போர்வையில் இஸ்ரேல் மற்றும் அமெரிக்க ஆதரவு விநியோக மையங்களில் அப்பாவி மக்கள் சுட்டுக் கொல்லப்படுகிறார்கள். கடுமையான பசி காரணமாக அவை மரணப் பொறிகள் என்பதை அறிந்தும், மக்கள் கூட்டம் கூட்டமாக விநியோக மையங்களுக்கு வந்த வண்ணம் உள்ளனர். அவர்கள் மீது துப்பாக்கிகள் மற்றும் கையெறி குண்டுகளைப் பயன்படுத்தி தாக்குதல் நடத்துவதாகவும் ஐ.நா. குற்றம் சாட்டியுள்ளது.

இதனுடன் அல்-மவாசியில் உள்ள அகதிகள் முகாமில் நடந்த குண்டுவெடிப்பில் கான் யூனிஸ் 15 பேரும், காசா நகரில் அகதிகள் தங்கியிருந்த பள்ளியில் மேலும் 15 பேரும் கொல்லப்பட்டனர். காசாவில் கொல்லப்பட்ட பாலஸ்தீனியர்களின் எண்ணிக்கை 57,000 ஐ கடந்துள்ளது. 1,34,611 பேர் காயமடைந்தனர். அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் 60 நாள் போர் நிறுத்தத்தை முன்மொழிந்ததிலிருந்த சூழலில் இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகிறது

### போர்நிறுத்தம் குறித்து

# ஹமாஸின் அறிவிப்பால் மகிழ்ச்சி

**டெல் அவிவ், ஜூலை 06-**

காஸாவில் போர்நிறுத்தம் குறித்த வரைவுக்கு பதிலளித்துள்ளதாக ஹமாஸ் அறிவித்துள்ளது.

காஸாவில் 60 நாள் போர் நிறுத்தம் தொடர்பான முன்மொழிவுக்கு சாதகமான பதிலை அளித்திருப்பதாக ஹமாஸ் அறிவித்துள்ளது. முன்மொழிவில் சில திருத்தங்களை மட்டும் ஹமாஸ் மேற்கொண்டதாகத் தெரிகிறது. இதனையடுத்து, 2023-ல் தொடங்கப்பட்ட போர் முடிவுக்கு வருகிறதென்றால், பேச்சுவார்த்தைக்கு முழுமையாக தயாராக இருப்பதாக மத்தியஸ்தர்கள் கூறினர். இதுகுறித்து, ஹமாஸுடன் நேரடி பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட பாலஸ்தீன - அமெரிக்க பேச்சாளர் பிஷாரா பாஹ்பா, இந்த சபிக்கப்பட்ட போரை முடிவுக்கு கொண்டு வருவதை நெருங்கி விட்டோம். முன்மொழிவின் திருத்தங்கள், போர்நிறுத்த ஒப்பந்தத்தைத் தடுக்காது என்று நினைக்கிறேன் எனக் கூறினார்.

இதனிடையே, ஹமாஸின் பதில் வெளிவந்த பின்னர், அடுத்த வாரமே காஸாவில் போர்நிறுத்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்படும் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் வெள்ளிக்கிழமையில் கூறியிருந்தார். இந்த நிலையில், ஹமாஸின் சாதகமான அறிவிப்பு வெளியாகியுள்ளது.

### வங்கி மோசடி வழக்கு; அமெரிக்காவில்

# நீரவ் மோடியின் சகோதரர் கைது

**வாஷிங்டன், ஜூலை 06-**

பஞ்சாப் நேஷனல் வங்கியில் பல ஆயிரம் கோடி மோசடி செய்த நீரவ் மோடியின் சகோதரர் நேஹல் மோடி அமெரிக்காவில் கைது செய்யப்பட்டார்.

கடந்த 2018 ஆம் ஆண்டு பஞ்சாப் நேஷனல் வங்கியில் பல ஆயிரம் கோடி ரூபாய் கடனை மோசடி செய்ததாக குற்றம் சாட்டப்பட்ட வைர வியாபாரி நீரவ் மோடி, இந்தியாவில் இருந்து தப்பி இங்கிலாந்துக்கு சென்றார். இதனை தொடர்ந்து மத்திய அரசு அவர் மீது பல்வேறு குற்றச்சாட்டுகளை முன் வைத்தது. பின்னர் தேடப்படும் குற்றவாளியாக அறிவித்தது. தொடர்ந்து சி.பி.ஐ. தரப்பில் அளிக்கப்பட்ட புகாரின் அடிப்படையில், அவர் லண்டனில் கைது செய்யப்பட்டு கடந்த மூன்று ஆண்டுகளாக வேண்ட்ஸ்வொர்த் சிறையில் 55 வயதான நீரவ் மோடி, அடைக்கப்பட்டுள்ளார்.

இந்தியாவுக்கு அவரை நாடு கடத்துவதற்கான முயற்சியில் சி.பி.ஐ. அதிகாரிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். வங்கி மோசடி தொடர்பாக நீரவ் மோடியின் சகோதரர் நேஹால் தீபக் மோடியை கைது செய்ய சிபிஐ, அமலாக்கத்துறை உள்ளிட்ட அமைப்புகள் நடவடிக்கை மேற்கொண்டன. அவருக்கு எதிராக ரெட் கார்னர் நோட்டீசும் பிறப்பிக்கப்பட்டு இருந்தத்.

இந்த நிலையில்தான், அமெரிக்காவில் நேஹல் மோடி கைது செய்யப்பட்டுள்ளார். நேஹல் மோடியை கைது செய்து நாடு கடத்த வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்று அமெரிக்கா கைது செய்துள்ளது. நேஹல் மொடி பெல்ஜியம் நாட்டு குடியுரிமையை பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

### உ.பி., யில் சோகம்:

# கல்லூரி சுவரில் கார் மோதி மணமகன் உட்பட 8 பேர் பலி

**லக்னோ, ஜூலை 06-**

உத்தரபிரதேசத்தின் சம்பல் மாவட்டத்தில் கல்லூரி வளாக சுவரில், அதிவேகமாக வந்த கார் மோதி விபத்தில் சிக்கியது. காரில் திருமண விழாவிற்கு மணமகன் உட்பட ஒரே குடும்பத்தினர் 10 பேர் சென்று கொண்டிருந்த போது நிகழ்ந்துள்ளது. இந்த விபத்தில், மணமகன் உட்பட 8 பேர் உயிரிழந்தனர். மேலும் 2 பேர் பலத்த காயம் அடைந்தனர். இவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்ளனர். இவர்களது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. இந்த விபத்து காலை 6:30 மணியளவில் நிகழ்ந்தது.

கல்லூரி அருகே கார் சென்று கொண்டிருந்த போது, டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்து சுவரில் மோதி கவிழ்ந்தது. திருமண விழாவிற்கு சென்ற போது விபத்து நிகழ்ந்து மணமகன் உட்பட 8 பேர் உயிரிழந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

### வரும் 8-ம் தேதி

# ராமதாஸ் தலைமையில் பா.ம.க. செயற்குழு கூட்டம்

**திண்டிவனம், ஜூலை 06-**

பா.ம.க. நிறுவனர் ராமதாஸ், பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் இடையே கருத்து மோதல் நிலவி வருகிறது. நான் உயிருடன் இருக்கும்வரை அன்புமணிக்கு பா.ம.க. தலைவர் பதவி கொடுக்கமாட்டேன் என்று ராமதாஸ் கூறியுள்ளார். மேலும், அன்புமணியின் ஆதரவாளர்களை கட்சியில் இருந்து நீக்கிவிட்டு புதிய நிர்வாகிகளை ராமதாஸ் நியமித்துள்ளார்.

இதனிடையே, ராமதாஸ் தலைமையில் பா.ம.க. புதிய தலைமை நிர்வாகக்குழு ஆலோசனைக்கூட்டம் நேற்று நடைபெற்றது. இதில், பா.ம.க. செயற்க்குழு கூட்டம் வரும் 8ம் தேதி நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. திண்டிவனம் அருகே ஓமந்தூரில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் ராமதாஸ் தலைமையில் 8ம் தேதி பா.ம.க. செயற்குழு கூட்டம் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.


# தொடர் மழை, வெள்ளம்: அமெரிக்காவில் 13 பேர் பலி

**நியூயார்க், ஜூலை 06-**

அமெரிக்காவின் தெற்கு-மத்திய டெக்சாஸ் மாகாணத்தில் கடந்த சில நாட்களாக இடி, மின்னலுடன் கூடிய தொடர் மழை பெய்து வருகிறது. இதனால், பல்வேறு பகுதிகளில் வெள்ளப்பெருக்கும் ஏற்பட்டது. குவாடலூப் ஆற்றில் வெள்ளம் ஏற்பட்டு, நகரங்களுக்குள் புகுந்தது. இதில் பலர் சிக்கி கொண்டனர். பொதுமக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்பட்டு உள்ளது. தொடர் மழை மற்றும் வெள்ளப்பெருக்கில் சிக்கி 13 பேர் வரை பலியானார்கள்.

இந்நிலையில், 700-க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் கோடை கால முகாமுக்கு சென்றுள்ளனர். அவர்களில், 20-க்கும் மேற்பட்ட மாணவிகள் காணாமல் போயுள்ளனர். அவர்களை தேடும் பணி தீவிரப்படுத்தப்பட்டு உள்ளது. கவர்னர் டேன் பேட்ரிக் கூறும்போது, 10 உடல்கள் இதுவரை கண்டெடுக்கப்பட்டு உள்ளன என கூறியுள்ளார்.

**06-07-2025**



# இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** செல்லும் இடங்களில் எல்லாம் சிறப்பு பெறுவீர்கள். அரசு வழியில் அதிகாரிகள் உதவியால் ஆதாயம் ஏற்படும். புது புது ஆடைகள் மனைவியால் நன்மையும் உண்டு.

**ரிஷபம்:-** வியாபாரத்தில் போட்டிகள் குறைவதால் இலாபம் அதிகரிக்கும். பல வழிகளிலும் தனவரவு உண்டு. சிலர் வீடு வாங்கும் எண்ணத்தில் கடனுக்கு முயற்சி செய்வர்.

**மிதுனம்:-** குழந்தைகள் நலனில் அக்கறை அவசியம். இரவுப் பயணங்களில் கவனம் தேவை. அமைதியும், ஆதரவாக பேச எதிர்ப்புக்களை குறைக்கும். விழிப்புடன் செயல்பட்டால் வியாபாரம் பெருகும்.

**கடகம்:-** எந்தப் பிரச்சினையையும் துணிந்து எதிர்கொள்ளும் மனோதிடம் ஏற்படும். தேவையற்ற அலைச்சல்கள் மூலம் தேகசுகம் குறையும். வியாபாரத்தில் எதிர்பார்த்த வரவுகள் இருக்காது.

**சிம்மம்:-** குடும்பத்துடன் சுபகாரிய நிகழ்ச்சிகள் கலந்து கொண்டு மகிழ்வீர்கள். தொல்லை தந்த நபர்கள் தூர விலகுவர். அரசு ஆதரவும், அனைத்துக் காரியங்களும் வெற்றியில் முடியும்.

**கன்னி:-** எவருக்கும் ஜாமீன், மறந்தும் கொடுத்துவிடாதீர்கள். உண்மை நண்பர்களும் உதவத் தயங்குவர். மனைவியின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. புதிய தொழில் முதலீடுகளை ஒத்திப் போடுவது நல்லது.

**துலாம்:-** பொருளாதார நிலை மிகவும் திருப்திகரமாக இருக்கும். வாக்கு வன்மையும், புத்திசாலித்தனமும் இணைய வரவுகள் அதிகரிக்கும். வியாபாரத்தில் தொல்லைகள் நீங்கி, எல்லைகள் விரிந்து ஏற்றம் வரும்.

**விருச்சிகம்:-** வாழ்க்கையில் எதிர்பாராத மாற்றங்கள் ஏற்படலாம். நேர்மையான வழியில் பணம் சம்பாதிக்க முயலுங்கள். கோபத்தைக் குறைத்தால் ஆரோக்கியம் சீர்படும்.

**தனுசு:-** பிரிந்திருந்த கணவன், மனைவி இணைந்து மகிழ்வர். கல்வியில் மாணவர்களுக்கு நல்ல தேர்ச்சி ஏற்படும். வியாபாரிகள் மற்றும் விவசாயிகளுக்கு தனலாபம் உண்டு.

**மகரம்:-** பொருளாதார நிலை போற்றும் படியாக இருக்கும். வசீகரமான பேச்சால் வருமானம் கூடும். வருமான உயர்வால் வளமும் அதிகரிக்கும். விரும்பிய வாகனத்தில் வெளியூர் செல்வீர்கள்.

**கும்பம்:-** புத்திர பாக்கியம் ஏற்படும். வியாபாரம், தொழிலில் எதிர்பார்ப்புக்கு மேல் ஏற்றம் வரும். புண்ணிய காரியங்கள் ஈடுபடுவதால் புகழ் ஓங்கும். பொதுவாழ்வில் உரிய அங்கீகாரம் கிடைக்கும்.

**மீனம்:-** மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டிய நாள். பிறர் துன்பத்தில் மகிழ்ச்சி காணும் எண்ணத்தைக் கைவிடுவது நல்லது. உயர் அதிகாரிகளிடம் பணிவுடன் நடந்தால் உயர்வு உண்டு.

# அஜித்குமார் தாயார், தம்பிக்கு ஆறுதல் தெரிவித்த ஓ.பி.எஸ்.



**திருப்புவனம்,ஜூலை 06-**

போலீசாரால் அடித்துக் கொல்லப்பட்ட திருப்புவனம் இளைஞர் அஜித்குமாரின் வீட்டிற்கு நேரில் சென்று ஓ.பன்னீர் செல்வம் ஆறுதல் தெரிவித்தார்.

சிவகங்கை மாவட்டம் மடப்புரம் பத்திரகாளி அம்மன் கோவில் காவலாளியாக பணியாற்றி வந்த அஜித்குமார், காவல்துறையினர் தாக்குதலில் உயிரிழந்த சம்பவம் கடும் அதிர்வலைகளை ஏற்படுத்தி உள்ளது. இச்சம்பவத்திற்கு கடும் கண்டனங்கள் எழுந்த நிலையில், இவ்வழக்கு தொடர்பாக சி.பி.ஐ. விசாரணைக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

இதற்கிடையே, அஜித்குமாரின் வீட்டிற்கு விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன், தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய், தமிழக பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரன் உள்ளிட்ட அரசியல் கட்சி தலைவர்கள் நேரில் சென்று ஆறுதல் தெரிவித்தனர்.

இந்த நிலையில், போலீசாரால் அடித்துக் கொல்லப்பட்ட திருப்புவனம் இளைஞர் அஜித்குமாரின் வீட்டிற்கு நேரில் சென்று ஓ.பன்னீர் செல்வம் ஆறுதல் தெரிவித்தார். பின்னர், அஜித்குமாரின் படத்திற்கு மாலை அணிவித்து ஓ.பி.எஸ். அஞ்சலி செலுத்தினார். அஜித்குமாரின் தாய் மாலதி, தம்பி நவீனுக்கு ஓ.பி.எஸ் ஆறுதல் தெரிவித்தார்.

### சிறுமிக்கு பாலியல் வன்கொடுமை:

# இங்கிலாந்தில் இந்திய வம்சாவளி இளைஞருக்கு ஆயுள் தண்டனை..!

**லண்டன், ஜூலை 06-**

இங்கிலாந்தில் சிறுமி பாலியல் வன்கொடுமை விவகாரத்தில் இந்திய வம்சாவளி இளைஞருக்கு ஆயுள் தண்டனை அறிவிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்தில் உள்ள மேற்கு லண்டனில் கடந்த ஆண்டு அக்டோபர் 13-ந்தேதி, சாலையில் சென்று கொண்டிருந்த 20 வயது இளம்பெண்ணை மர்ம நபர் ஒருவர் பாலியல் பலாத்காரம் செய்ய முயன்றார். அந்த பெண் அவரிடம் இருந்து தப்பி அருகில் உள்ள காவல் நிலையத்திற்கு ஓடிச் சென்று புகார் அளித்தார். அந்த சம்பவம் குறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வந்தனர். அதனை தொடர்ந்து அக்டோபர் 23-ந்தேதி பூங்காவில் ஒரு சிறுமி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டதாக போலீசாருக்கு புகார் வந்தது. இந்த இரண்டு சம்பவங்களுக்கும் தொடர்பு இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் போலீசார் சி.சி.டி.வி. கேமராக்களின் உதவியோடு விசாரணையை தீவிரப்படுத்தினர்.

அப்போது இரண்டு சம்பவங்கள் நடந்த இடத்திலும் 24 வயதான இந்திய வம்சாவளியை சேர்ந்த நவ்ரூப் சிங் என்ற நபர் இருந்துள்ளார் என்பதை போலீசார் கண்டறிந்தனர். இதையடுத்து கடந்த ஆண்டு அக்டோபர் 27-ந்தேதி நவ்ரூப் சிங்கைப் பிடித்து போலீசார் நடத்திய தீவிர விசாரணையில், அவர் குற்றத்தை ஒப்புகொண்டார். இந்த வழகு தொடர்பான விசாரணை ஐசில்வர்த் கிரவுன் கோர்ட்டில் நடைபெற்று வந்தது. இந்த வழக்கை விசாரித்த நீதிபதி, நவ்ரூப் சிங் மீதான குற்றம் சந்தேகத்திற்கு இடமின்றி உறுதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்து அவருக்கு 14 ஆண்டுகள் ஆயுள் தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

# 40 ஆண்டுகள் வாழ விரும்பும் புத்தமத தலைவர் தலாய் லாமா

**தர்மசாலா, ஜூலை 06-**

சீனாவின் புத்தமத தலைவர் தலாய் லாமா இன்னும் 40 ஆணடுகளுக்கு மேல் வாழ ஆசைப்படுகிறேன் என்று கூறியுள்ளார்

இந்தியாவின் அண்டை நாடு தீபெத். 1959ம் ஆண்டு முதல் சீனாவின் கட்டுப்பாட்டில் தீபெத் உள்ளது. அந்நாட்டை சேர்ந்த புத்த மத தலைவர் தலாய் லாமா சிறு வயதிலேயே இந்தியாவில் அரசியல் தஞ்சம் புகுந்தார். அவருடன் புத்த மதத்தை சேர்ந்த லட்சக்கணக்கான திபெத் மக்கள் இந்தியாவில் தஞ்சமடைந்தனர். இவர்கள் இமாச்சலபிரதேசம் உள்பட நாட்டின் பல்வேறு பகுதிகளில் வசித்து வருகின்றனர். இதனிடையே, புத்தமத தலைவரான தலாய் லாமா இன்று தனது 90வது பிறந்த இன்று கொண்டாடுகிறார். இதையொட்டி இமாச்சலபிரதேசத்தின் மேக்லியாட் கஞ்ச் பகுதியில் உள்ள புத்தமத வழிபாட்டு தலத்தில் நேற்று தலாய் லாமா நீண்ட நாட்கள் வாழ வேண்டி சிறப்பு பிரார்த்தனை நடைபெற்றது. இதில் ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

இந்நிலையில், இந்த பிரார்த்தனை நிகழ்ச்சியில் தலாய் லாமா கலந்துகொண்டார். நிகழ்ச்சியில் பேசிய தலாய் லாமா, எதிர்காலத்தில் இவையெல்லாம் நடக்கக்கூடும் எனக்கூறும் பல வாசகங்களை பார்க்கும்போது நான் கடவுளால் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளதாக நினைக்கிறேன். என்னால் முடிந்த நல்லதை நான் செய்துள்ளேன். இன்னும் 30 அல்லது 40 ஆண்டுகளுக்குமேல் வாழ ஆசைப்படுகிறேன். உங்கள் பிரார்த்தனைகள் இதுவரை பலனளித்துள்ளன. நமது நாட்டை நாம் இழந்தபோதும், நாம் இந்தியாவில் புலம்பெயர்ந்து வாழ்கிறோம். தர்மசாலாவில் வாழும் மக்களுக்கு நான் தொடர்ந்து பணியாற்ற விரும்புகிறேன்' என்றார்

# மேட்டூர் அணையில் நீர் திறப்பு அதிகரிப்பு

**பென்னாகரம்,ஜூலை 06-**

மேட்டூர் அணையில் இருந்து நீர் திறப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

தென்மேற்கு பருவமழை காரணமாக கேரள மாநிலம் வயநாடு மற்றும் கர்நாடக மாநில காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் விட்டு விட்டு கனமழை பெய்து வருகிறது. இதனால் கர்நாடக மாநிலத்தில் உள்ள கபினி, கிருஷ்ண ராஜ சாகர் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. இந்த 2 அணைகளில் இருந்தும் காவிரி ஆற்றில் தமிழகத்திற்கு வினாடிக்கு 41 ஆயிரத்து 197 கனஅடி தண்ணீர் மீண்டும் திறந்து விடப்பட்டுள்ளது.

இந்த தண்ணீர் கர்நாடக-தமிழக எல்லையான பிலிகுண்டுலு வழியாக காவிரி ஆற்றில் கரைபுரண்டு தர்மபுரி மாவட்டம் ஒகேனக்கல்லுக்கு வந்து கொண்டிருக்கிறது. நேற்று முன்தினம் முன்தினம் ஒகேனக்கல்லுக்கு வினாடிக்கு 20 ஆயிரம் கனஅடி தண்ணீர் வந்து கொண்டு இருந்தது. இந்த நீர்வரத்து படிப்படியாக அதிகரிக்க தொடங்கியது.

அதன்படி நேற்று முன்தினம் காலை 6 மணி நிலவரப்படி வினாடிக்கு 28 ஆயிரம் கனஅடி தண்ணீர் ஒகேனக்கல்லுக்கு வந்தது. இந்த நீர்வரத்து மாலை 3 மணி நிலவரப்படி வினாடிக்கு 43 ஆயிரம் கனஅடியாக அதிகரித்தது. இந்த நீர்வரத்து இரவு 8 மணி நிலவரப்படி வினாடிக்கு 50 ஆயிரம் கனஅடியாக அதிகரித்தது. இதனால் ஒகேனக்கல்லில் உள்ள மெயின் அருவி, சினி பால்ஸ், ஐந்தருவிகளில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டியது.

நீர்வரத்து அதிகரித்துள்ளதால் ஒகேனக்கல்லில் மீண்டும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

காவிரி ஆற்றில் நீர்வரத்தை தமிழக-கர்நாடக எல்லையான பிலிகுண்டுலுவில் மத்திய நீர்வளத்துறை அதிகாரிகள் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர். இந்த நிலையில் கர்நாடக அணைகளில் இருந்து திறக்கப்படும் தண்ணீரின் அளவு மீண்டும் அதிகரிக்கப்பட்டதால் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து மீண்டும் அதிகரித்தது. அதன்படி நேற்று முன்தினம் மதியம் அணைக்கு வினாடிக்கு 24 ஆயிரத்து 733 கனஅடி வீதம் தண்ணீர் வந்தது. இந்த நீர்வரத்து படிப்படியாக அதிகரிக்க தொடங்கியது. இதன் காரணமாக மேட்டூர் அணை மீண்டும் நிரம்பும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## அ.தி.மு.க. கூட்டணிக்கு வருமாறு
# விஜய்க்கு மறைமுக அழைப்பு விடுத்த எடப்பாடி பழனிசாமி



**சென்னை, ஜூலை 06-**
தி.மு.க. ஆட்சியை அகற்ற நினைப்பவர்களுடன் கூட்டணி அமைப்பதில் மகிழ்ச்சி அடைகிறோம் என எடப்பாடி பழனிசாமி கூறினார்.

எடப்பாடி பழனிசாமியின் 'மக்களைக் காப்போம், தமிழகத்தை மீட்போம்' பிரசார பயணம் தொடர்பான இலச்சினை மற்றும் பாடல் ராயப்பேட்டையில் உள்ள கட்சி தலைமை கழக அலுவலகத்தில் நேற்று வெளியிடப்பட்டது. 'மக்களைக் காப்போம் தமிழகத்தை மீட்போம்' சுற்றுப் பயணத்திற்கான பாடலை அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டார்.

இதனைத்தொடர்ந்து தேர்தல் சுற்றுப்பயணம் குறித்து செய்தியாளர்கள் சந்திப்பில் அவர் கூறியதாவது:- தி.மு.க. ஆட்சியை அகற்றுவதற்காகவே இந்த சுற்றுப்பயணம். தீய சக்தி தி.மு.கவை ஒழிக்க வேண்டும். அதற்காகத்தான் மக்களை காப்போம், தமிழகத்தை மீட்போம் என்ற சுற்றுப்பயணத்தை 7- ந் தேதி முதல் மேட்டுப்பாளையத்தில் தொ டங்க உள்ளேன். தி.மு.க.ஆட்சியை அகற்ற வேண்டும் என்று சொல்கிற கட்சிகள் எல்லாம் எங்களோடு அணி சேர வேண்டும். விடு விடாக போய் கதவை தட்டி உறுப்பினர் சேர்க்கும் நிலைக்கு ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க அதல பாதாளத்திற்கு சென்று விட்டது.

2026 சட்டமன்ற தேர்தலில் அ.தி.மு.க. தலைமையில்தான் கூட்டணி, நான்தான் முதல்-அமைச்சர் வேட்பாளர். உடம்புக்கு உயிர் முக்கியம் என்பதுபோல, வெற்றிக்கு தேர்தல் வாக்குறுதி ரொம்ப முக்கியம். இப்போதே அறிவித்துவிட்டால் நீர்த்துப் போய்விடும். தேர்தல் நேரத்தில் அற்புதமாய் வெளிவரும்.

இவ்வாறு எடப்பாடி பழனிசாமி கூறினார்.

இதனைத்தொடர்ந்து அ.தி.மு.க. கூட்டணியில் விஜய் இணைவாரா என்ற கேள்விக்கு பதில் அளித்த அவர், தி.மு.க. ஆட்சியை அகற்ற வேண்டும். யாரெல்லாம் தி.மு.க. ஆட்சியை அகற்ற நினைக்கிறார்களோ அவர்களுடன் நாங்கள் கூட்டணி அமைப்பதில் மகிழ்ச்சி அடைகிறோம். அவர்களும் இதற்கு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும் என்றார்.


## காவலாளி அஜித்குமார் மரணம்:
# 4-வது நாளாக நீதிபதி தொடர் விசாரணை

**திருப்புவனம், ஜூலை 06-**
அஜித்குமார் மரண வழக்கில் 4-வது நாளாக நீதிபதி ஜான் சுந்தர்லால் சுரேஷ் விசாரணையை நடத்தினார்.

சிவகங்கை மாவட்டம் மடப்புரம் பத்திரகாளியம்மன் கோவிலில் காவலாளியாக பணியாற்றி வந்த இளைஞர் அஜித்குமார் (வயது 27). தனது காரில் இருந்த நகைகள் மாயம் என மதுரை மாவட்டம் திருமங்கலம் அருகே உள்ள ஆலம்பட்டியை சேர்ந்த நிகிதா என்பவர் அளித்த புகாரின் பேரில் தனிப்படை போலீசார் விசாரிப்பதற்காக அவரை அழைத்து சென்றனர். அப்போது, அவர் போலீசாரால் கடுமையாக தாக்கப்பட்டதில் பலியானார்.

தமிழகம் முழுவதும் இச்சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. இது தொடர்பாக 5 போலீசார் கைது செய்யப்பட்டு உள்ளனர். இந்த வழக்கின் விசாரணையை சி.பி.ஐ. வசம் ஒப்படைத்து தமிழக அரசு உத்தரவிட்டு உள்ளது. நீதி விசாரணையும் நடைபெற்று வருகிறது. கடந்த 3 நாட்களாக அஜித்குமார் மரணம் பற்றி நீதிபதி ஜான் சுந்தர்லால் சுரேஷ் விசாரணை நடத்தினார். இதனை தொடர்ந்து, இந்த வழக்கில் 4-வது நாளாக காவல் நிலையத்திற்கு நேரில் சென்று நீதிபதி ஜான் சுந்தர்லால் சுரேஷ் விசாரணையை நடத்தினார். சம்பவத்தின்போது பணியில் இருந்த காவல் துறை அதிகாரிகளிடம் நேற்று விசாரணை நடைபெற்றது. கடந்த 3 நாட்களாக வழக்கு தொடர்பாக பெறப்பட்ட ஆவணங்கள் பாதுகாப்பாக வைக்கப்பட்டு உள்ளன

# வா.மு.சேதுராமன் மறைவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்



**சென்னை, ஜூலை 06-**
பன்னாட்டுத் தமிழுறவு மன்ற நிறுவனர் பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் மறைவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் தள பதிவில் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் தெரிவித்திருப்பதாவது:-

பன்னாட்டுத் தமிழுறவு மன்ற நிறுவனர் பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் மறைந்த செய்தியறிந்து சொல்லொணாப் பெருந்துயர் என்னை ஆட்கொண்டது.

தமிழ்நாடு அரசின் கலைமாமணி, திருவள்ளுவர் விருது உள்ளிட்ட பல விருதுகளுக்குச் சிறப்புச் சேர்த்த செந்தமிழ்ச் செம்மல். தமிழ்ப்பணிக்கெனத் தன்னை ஒப்படைத்துக்கொண்ட அந்தத் தியாகச் சுடர் தனது ஒளியை நிறுத்திக் கொண்டு, வேதனை எனும் இருளில் நம் மனதைத் தவிக்கவிட்டிருக்கிறது!

ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட கவிதைகள், நூறுக்கும் மேற்பட்ட கவிதை நூல்கள் உள்ளிட்ட படைப்புகளைத் தமிழுலகிற்கு அளித்த பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமனது புகழ் தமிழுள்ள வரை போற்றப்படும்! அன்னாரது பிரிவால் வாடும் அவரது குடும்பத்தினர் - உறவினர்கள் - தமிழ்கூறு நல்லுலகின் சான்றோர்கள் - தமிழ்த் தொண்டர்கள் என அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மத்திய அரசின்
# வேலைவாய்ப்பு ஊக்கத்தொகை திட்டம் ஆகஸ்டு 1 முதல் அமல்

**சென்னை, ஜூலை 06-**
மத்திய அரசின் வேலைவாய்ப்பு ஊக்கத்தொகை திட்டம் ஆகஸ்டு 1-ம் தேதி முதல் அமலுக்கு வருகிறது.

சென்னையில் உள்ள மத்திய அரசின் பத்திரிகை தகவல் அலுவலகத்தில் மண்டல வருங்கால வைப்புநிதி ஆணையர் விஜய் ஆனந்த் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார்.

அப்போது அவர் கூறுகையில், "இந்தியாவில் வேலைவாய்ப்பை அதிகரிக்கும் வகையில் ரூ.1 லட்சம் கோடி மதிப்பில் வேலைவாய்ப்புடன் கூடிய ஊக்கத்தொகை வழங்கும் இ.எல்.ஐ. திட்டத்தை மத்திய அரசு சமீபத்தில் அறிவித்தது. இந்த திட்டத்தின் மூலம் அமைப்பு சாரா தொழில்துறைகளில் உள்ளவர்கள் அமைப்பு சார்ந்த தொழில் கட்டமைப்புக்குள் கொண்டு வரப்படுவார்கள். .

இந்த திட்டத்தின் மூலம் புதிய தொழிலாளர்களை சேர்க்கும் உற்பத்தி மற்றும் உற்பத்தி அல்லாத தொழில் நிறுவனங்களின் உரிமையாளர்களுக்கும் ஊக்கத்தொகை வழங்கப்பட உள்ளது. அதன்படி, ரூ.10 ஆயிரம் வரை சம்பளம் பெறும் தொழிலாளர்களை நிறுவனத்தில் சேர்க்கும்போது ஒவ்வொரு தொழிலாளருக்கும் ஆயிரம் ரூபாய் வீதமும், ரூ.10 ஆயிரம் முதல் 20 ஆயிரம் வரை சம்பளத்தில் தொழிலாளர்களை சேர்க்கும்போது ரூ.2 ஆயிரம் வீதமும், ரூ.20 ஆயிரத்தில் இருந்து ரூ.1 லட்சம் வரை சம்பளம் பெறும் தொழிலாளர்களை சேர்க்கும் பட்சத்தில் ரூ.3 ஆயிரம் வரையிலும் நிறுவன உரிமையாளர்களுக்கு ஊக்கத் தொகையாக வழங்கப்படும்.

இந்த திட்டம் ஆகஸ்டு 1-ம் தேதி முதல் அமலுக்கு வருகிறது. தமிழ்நாட்டில் தற்போது 40 லட்சம் வருங்கால வைப்பு நிதி கணக்குகள் செயல்பாட்டில் உள்ளன" என்று அவர் கூறினார்.

## காணொலியில் ஆஜர்:
# மதுரை ஆதீனத்தின் கோரிக்கை நிராகரிப்பு

**சென்னை, ஜூலை 06-**
விசாரணைக்கு காணொலியில் ஆஜராவதாக மதுரை ஆதீனம் தரப்பு வைத்த கோரிக்கையை காவல்துறை ஏற்க மறுத்துள்ளது.

உளுந்தூர் பேட்டையில் நடந்த விபத்தை திட்டமிட்டு கொலை செய்ய முயன்றதாக மதுரை ஆதீனம் குற்றம் சாட்டியிருந்தார். இந்த விபத்தையடுத்து செய்தியாளர்களை சந்தித்த மதுரை ஆதீனம், கார் ஓட்டுநர், நம்பர் பிளேட் இல்லாத வாகனம் மூலம் திட்டமிட்டு குறிப்பிட்ட மதத்தினர் மோதியதாக கூறினார். இதன் பின்னர், ஆதீனத்தின் கார் விபத்துக்குள்ளானது பற்றிய சி.சி.டி.வி. காட்சிகள் வெளியானது. அதில், ஆதீனத்தின் கார்தான் மற்றொரு கார் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியது என தெரியவந்தது.

இதனைத் தொடர்ந்து இரு சமூகங்களிடையே மோதலை ஏற்படுத்த ஆதீனம் முயற்சிப்பதாக சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் ராஜேந்திரன், போலீசில் புகார் கொடுத்தார். இதனடிப்படையில் சென்னை கிழக்கு மண்டல சைபர் கிரைம் போலீசார், மதுரை ஆதீனம் மீது 4 பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்தனர். மேலும் மதுரை ஆதீனம், விசாரணைக்கு நேரில் ஆஜராக போலீசார் ஏற்கனவே சம்மன் அனுப்பி இருந்தனர். ஆனால் ஆதீனம் ஆஜராகவில்லை.

இந்த நிலையில் விசாரணைக்கு காணொலியில் ஆஜராவதாக மதுரை ஆதீனம் தரப்பு வைத்த கோரிக்கையை காவல்துறை ஏற்க மறுத்துள்ளநிலையில், நேரில் ஆஜராக வலியுறுத்தப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து சென்னையில் (நேற்று) ஜூலை 5-ந் தேதி ஆதீனம் ஆஜராக 2-வது முறை சம்மன் அனுப்பப்பட்டது.

# ஜாமீன் கோரி சென்னை ஐகோர்ட்டில் நடிகர்கள் ஸ்ரீகாந்த், கிருஷ்ணா மனு



**சென்னை, ஜூலை 06-**
போதைப்பொருள் வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள நடிகர்கள் ஸ்ரீகாந்த், கிருஷ்ணா ஆகியோர் சென்னை ஐகோர்ட்டில் ஜாமீன் கேட்டு மனு தாக்கல் செய்துள்ளனர்.

கொகைன் போதைப்பொருள் பயன்படுத்திய வழக்கில், நடிகர்கள் ஸ்ரீகாந்த், கிருஷ்ணா ஆகியோர் சென்னை நுங்கம்பாக்கம் போலீசாரால் கைது செய்யப்பட்டு புழல் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

நடிகர் ஸ்ரீகாந்தை ஜூலை 7-ந்தேதி வரை நீதிமன்ற காவலில் சிறையில் அடைக்க கோர்ட்டு உத்தரவிட்டுள்ளது.

இதற்கிடையே தனக்கு ஜாமீன் கோரி சென்னை போதைப்பொருள் தடுப்பு சிறப்பு கோர்ட்டில் ஸ்ரீகாந்த் மனு தாக்கல் செய்து இருந்தார்.

அதேபோல, இதே வழக்கில் கைதான மற்றொரு நடிகர் கிருஷ்ணாவும் தனக்கு ஜாமீன் அளிக்க வேண்டும் என்று மனு தாக்கல் செய்து இருந்தார். இந்த மனுவை விசாரித்த நீதிபதி தள்ளுபடி செய்து உத்தரவிட்டார். சென்னை போதைப்பொருள் தடுப்பு சிறப்பு கோர்ட்டில் ஜாமீன் மனு தள்ளுபடி செய்யப்பட்டநிலையில், நடிகர்கள் ஸ்ரீகாந்த், கிருஷ்ணா ஆகியோர் சென்னை ஐகோர்ட்டில் ஜாமீன் கேட்டு மனு தாக்கல் செய்துள்ளனர்.

இந்த மனு நீதிபதி நிர்மல்குமார் முன் வருகிற 7-ம் தேதி விசாரணைக்கு வருகிறது.

## முடிவுக்கு வந்த 20 ஆண்டு கால மோதல்:
# ஒரே மேடையில் உத்தவ் - ராஜ்தாக்கரே



**மும்பை, ஜூலை 06-**
மும்பை ஆசாத் மைதானத்தில் நடந்த பொதுக்கூட்டத்தில் ஒரே மேடையில் உத்தவ் - ராஜ்தாக்கரே பங்கேற்றனர்.

கடந்த 2005-ம் ஆண்டு சிவசேனா கட்சியில் பால் தாக்கரேவுக்கு அடுத்த வாரிசு யார் என்பதில் ஏற்பட்ட மோதலால் ராஜ் தாக்கரே கட்சியை விட்டு வெளியேறினார். இதையடுத்து, மகாராஷ்டிரா நவநிர்மாண் சேனா என்ற பெயரில் தனிக் கட்சி தொடங்கி நடத்தி வருகிறார் ராஜ் தாக்கரே. அப்போது முதல் ராஜ் தாக்கரே - உத்தவ் தாக்கரே எலியும் பூனையுமாக இருந்து வருகின்றனர். இரு தரப்பினரிடையே 20 ஆண்டுகளாக அரசியல் ரீதியாக மோதல் நீடித்து வந்தது.

இந்தச் சூழலில் மத்திய அரசின் தேசியக் கல்விக் கொள்கையின் படி, மராட்டியத்தில் 1-ம் வகுப்பு முதல் பள்ளிகளில் இந்தியைக் கட்டாய மூன்றாம் மொழியாக மாற்றியுள்ளது அம்மாநில அரசு. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து உத்தவ் தாக்கரே, ராஜ் தாக்கரே இருவரும் இந்தி எதிர்ப்புப் பேரணியை நடத்தினர். மும்பை ஆசாத் மைதானத்தில் நடந்த பொதுக்கூட்டத்தில் ஒரே மேடையில் இருவரும் பங்கேற்றனர்.

கிட்டத்தட்ட 20 ஆண்டுகள் கழித்து இருவரும் ஒரே மேடையில் தோன்றினர். இரு சகோதரர்களும் இணைந்து நடத்திய முதல் பொதுக்கூட்டத்தில் ராஜ் தாக்கரே பேசியதாவது: மராட்டியத்தில் இந்தி திணிப்பை ஒருபோதும் ஏற்க மாட்டோம்," என்றார்.

உத்தவ் தாக்கரே பேசுகையில், "ராஜ் தாக்கரேவும் நானும் ஒன்றுபட்டுள்ளோம். ஒன்றாக ஆட்சிக்கு வருவோம். ராஜ் தாக்கரே ஏற்கனவே மிகச் சிறந்த உரையை நிகழ்த்தியுள்ளார். இப்போது நான் பேச வேண்டிய அவசியமில்லை," என்றார்.

## எந்த காலக்கெடுவுக்கும் இந்தியா அஞ்சாது:
# ராகுலுக்கு பியூஷ் கோயல் பதிலடி

**புதுடெல்லி, ஜூலை 06-**
எந்த காலக்கெடுவுக்கும் அஞ்சி இந்தியா செயல்படாது என்று மத்திய அமைச்சர் பியூஸ் கோயல் கூறினார்.

அமெரிக்கா- இந்தியா இடையே வர்த்தக பேச்சுவார்த்தை நடந்து வருகிறது. அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் நிர்ணயித்து உள்ள பரஸ்பர வரி விதிப்பு காலக்கெடு வருகிற 9-ந்தேதியுடன் முடிவடைகிறது. அதற்குள் பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்படலாம் என்ற எதிர்பார்ப்பு நிலவி வருகிறது. இந்த நிலையில் மத்திய அமைச்சர் பியூஸ்கோயல் எக்ஸ் வலைதள பக்கத்தில் வெளியிட்ட பதிவில் எந்தவொரு வர்த்தக ஒப்பந்தத்தையும் இறுதி செய்ய இந்தியா அவசரப்படவில்லை.தேசிய நலன் தான் முக்கியம் என குறிப்பிட்டு இருந்தார்.

இதற்கு காங்கிரஸ் கட்சி எம்.பி.யும். பாராளுமன்ற எதிர்க்கட்சி தலைவருமான ராகுல்காந்தி பிரதமர் மோடியை கடும் விமர்சனம் செய்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட எக்ஸ் வலைதள பதிவில் மத்திய அமைச்சர்பியூஸ் கோயல் எவ்வளவு வேண்டுமானலும் மார் தட்டிக்கொள்ளலாம். என் வார்த்தையை கவனியுங்கள். மோடி டிரம்பின் வரி விதிப்பு காலக்கெடுவுக்கு சாந்தமாக அடிபணிவார். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

இது தொடர்பாக மத்திய அமைச்சர்பியூஷ் கோயல் நிருபர்களிடம் கூறியதாவது: எந்த காலக்கெடுவுக்கும் அஞ்சி இந்தியா செயல்படாது.

நாட்டின் நலனை மனதில் வைத்து பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம். ராகுல் காந்தியும், அவரது கட்சியும் எதிர்மறை விஷயத்தையே பரப்பி வருகின்றனர். இதனால், ராகுல் காந்தியை யாரும் ஒரு பொருட்டாக எடுப்பது இல்லை. அவர்கள் மக்களின் நம்பிக்கையை இழந்துவிட்டனர்" என்றார்.

# கன்னடம் குறித்து கருத்து தெரிவிக்க கமலுக்கு தடை

**பெங்களூரு, ஜூலை 06-**
கன்னட மொழி குறித்து கருத்து தெரிவிக்க நடிகர் கமலுக்கு பெங்களூரு நீதிமன்றம் தடை விதித்து உத்தரவிட்டு உள்ளது.

மணிரத்னம் இயக்கத்தில் வெளியான ' தக் லைப் ' படத்தின் இசை வெளியீட்டு விழாவில் பேசிய கமல், ' தமிழ் மொழியில் இருந்து பிறந்தது தான் கன்னடம்', எனப் பேசினார்.

அது கன்னட அமைப்புகளின் கோபத்தைத் தூண்டியது. கமல்ஹாசன் பேசியதற்கு மன்னிப்புக் கேட்கவில்லை என்றால் 'தக் லைப்' படத்தை கர்நாடகாவில் வெளியிட விடமாட்டோம் என்றார்கள். கன்னட சினிமா வர்த்தக சபையும் படத்தை வெளியிட தடை விதிக்கிறோம் என்றார்கள். இது தொடர்பாக கமல் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார்.

இந்நிலையில் கன்னட சாகித்ய பரிஷத் என்ற அமைப்பு, '' கன்னடம் மொழி மற்றும் கலாசாரம் தொடர்பாக அவதூறாக கருத்து தெரிவிக்க கமலுக்கு தடை விதிக்க வேண்டும், '' எனக்கூறி கூடுதல் சிட்டி சிவில் மற்றும் செசன்ஸ் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்.

இதனை விசாரித்த நீதிபதி, ' கன்னடம் மொழி, கலாசாரம், நிலம் மற்றும் இலக்கியம் குறித்து கருத்து தெரிவிக்க தடை விதித்ததுடன், மனு குறித்து ஆக.,30க்குள் பதிலளிக்க வேண்டும்,' என உத்தரவிட்டார்.

## 'தமிழ் மாநில பகுஜன் சமாஜ்'
# புதிய கட்சி தொடங்கினார் பொற்கொடி ஆம்ஸ்ட்ராங்

**சென்னை, ஜூலை 06-**
தமிழ் மாநில பகுஜன் சமாஜ் கட்சியின் புதிய கட்சியை ஆம்ஸ்ட்ராங் மனைவி பொற்கொடி தொடங்கியுள்ளார்.

பகுஜன் சமாஜ் கட்சி மாநில தலைவராக இருந்த ஆம்ஸ்ட்ராங் கடந்த ஆண்டு ஜூலை 5-ம் தேதி சென்னையில் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டார். ஆம்ஸ்ட்ராங் கொலை நடந்து நேற்றுடன் ஒரு வருடம் ஆன நிலையில், நினைவுப் பேரணி நேற்று நடைபெற்றது. இந்த பேரணியில் 1000-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

பொத்தூரில் அமைக்கப்பட்டுள்ள ஆம்ஸ்ட்ராங்கின் 9 அடி முழு உருவச் சிலையும் நேற்று திறக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, தமிழ் மாநில பகுஜன் சமாஜ் என்ற பெயருடன் புதிய கட்சியை அவரது மனைவி பொற்கொடி ஆம்ஸ்ட்ராங் தொடங்கினார் . கட்சியின் கொடியையும் அவர் அறிமுகம் செய்து வைத்தார். நீல நிறத்தில் அமைந்துள்ள இந்த கொடியில் யானை தனது தும்பிக் கையில் பேனா வைத்திருப்பது போன்ற சின்னம் இடம் பெற்றுள்ளது.

## திருப்புவனம் இளைஞர் மரணம்:
# த.வெ.க. 12-ம் தேதி போராட்டம்..?

**சிவகங்கை, ஜூலை 06-**
மடப்புரம் கோவில் காவலாளி அஜித்குமார் மரணம் குறித்து தமிழக வெற்றிக்கழகம் சார்பில் போராட்டம் நடைபெறுவதாக அறித்த நிலையில் தற்போது தள்ளி வைக்கப்பட்டதாக அறிவித்துள்ளது.

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட மடப்புரம் கோவில் காவலர் அஜித்குமார் போலீசார் தாக்கியதில் மரணம் அடைந்தார். தமிழகத்தையே உலுக்கிய இந்த கொடூர சம்பவத்துக்கு எதிர்க்கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்து வருகின்றன. இந்த சம்பவத்திற்கு கண்டனம் தெரிவித்து, தமிழக வெற்றிக் கழகம் கட்சியின் தலைவர் விஜய் அறிக்கை வெளியிட்டு இருந்தார். தொடர்ந்து விஜய் அறிவுறுத்தலின்பேரில் பாதிக்கப்பட்ட குடும்பத்தினரை த.வெ.க. பொதுச் செயலாளர் என்.ஆனந்த் தொடர்பு கொண்டு பேசினார். அதன் பின்னர் த.வெ.க. தலைவர் விஜய், காவலாளி அஜித்குமாரின் வீட்டிற்கு நேரில் சென்று அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தார். இதனிடையே, அஜீத்குமார் மரணத்திற்கு நீதி கேட்டும், ஐகோர்ட்டின் நேரடிக் கண்காணிப் பின்கீழ் சிறப்புப் புலனாய்வுக் குழு அமைத்து நீதி விசாரணை நடத்த வேண்டும் என்பதை வலியுறுத்தியும் த.வெ.க. சார்பில் சென்னை, எழும்பூர் ராஜரத்தினம் மைதானம் அருகே ஜூலை 3-ந்தேதி கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் போராட்டம் நடத்துவதற்கு காவல்துறை அனுமதி கிடைக்காததால்,

ஜூலை 6-ம் தேதி (இன்று) போராட்டத்தை நடத்த அனுமதி கோரி த.வெ.க. சார்பில் சென்னை ஐகோர்ட்டில் முறையீடு செய்யப்பட்டது. இருப்பினும் அதற்கும் அனுமதி கிடைக்காததால் த.வெ.க. போராட்டம் மீண்டும் தள்ளிப்போகும் சூழல் ஏற்பட்டுள்ளது. இதையடுத்து ஜூலை 12-ம் தேதி போராட்டத்தை நடத்த த.வெ.க. சார்பில் அனுமதி கேட்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# சாத்தூர் பட்டாசு ஆலை விபத்தில் உயிரிழப்பு 10 ஆக உயர்வு

**விருதுநகர், ஜூலை 06-**
சாத்தூரில் பட்டாசு வெடி விபத்தில் பலியானோர் எண்ணிக்கை 10 ஆக உயர்ந்துள்ளது.

விருதுநகர் மாவட்டம் சாத்தூரில் தனியார் பட்டாசு ஆலையில் செயல்பட்டு வந்தது. இதில் 50- க்கும் மேற்பட்ட அறைகளில் 80க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பட்டாசு உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நிலையில் கடந்த 1ம் தேதி காலை வழக்கம்போல் தொழிலாளர்கள் பட்டாசு உற்பத்தியில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது மருந்து கலவை செய்யும் அறையில் காலை 8.30 மணி அளவில் பயங்கர வெடி விபத்து ஏற்பட்டது. இந்த விபத்தில் அருகே இருந்த 8 அறைகள் இடிந்து தரைமட்டமானது. தகவல் அறிந்து வந்த சிவகாசி மற்றும் சாத்தூர் தீயணைப்பு துறையினர் தீயை அணைத்து இடிபாடுகளில் சிக்கியவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டனர். இந்த விபத்தில் 9 தொழிலாளர்கள் உடல் கருகி வெடித்து சிதறி உயிரிழந்தனர். சிலர் பலத்த காயமடைந்தனர்.

இந்த விபத்தில் பலத்த காயமடைந்த அழகுராஜா மதுரை மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்தார். இந்நிலையில் சிகிச்சை பலனின்றி அழகுராஜா மருத்துவமனையில் பரிதாபமாக உயிரிழந்தார். இதன் காரணமாக சாத்தூர் பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடி விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 10-ஆக உயர்ந்துள்ளது.

### தலைவர்கள் சொல்வதை படிங்க....



வர்த்தக ஒப்பந்தம் தொடர்பாக நாட்டின் நலனே முக்கியம் என்று மத்திய அமைச்சர் பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார். அவர் எப்படி வேண்டுமானாலும் மார் தட்டிக் கொள்ளட்டும். நான் சொல்வதை குறித்துவைத்துக் கொள்ளுங்கள். அமெரிக்க அதிபர் ட்ரம்பின் வரி காலக்கெடுவுக்கு பிரதமர் மோடி பணிவுடன் தலைவணங்குவார்.

- ராகுல் காந்தி



பிரதமருக்கு யாராவது ஒரு தொப்பியும், பதக்கமும் கொடுத்தால், அதை அணிந்து கொண்டு எங்கு வேண்டுமானாலும் செல்வார். மோடியின் 11 ஆண்டுகால ஆட்சி, பொருளாதாரத்தை அழித்து விட்டது. அரசியல் சாசனத்தையும் அழித்து விட்டது. உலகில் 42 நாடுகளுக்கு சென்றுள்ள மோடி, மணிப்பூருக்கு இதுவரை செல்லவில்லை.

- மல்லிகார்ஜுன கார்கே



தி.மு.க. பற்றி பேசிய விஜய், அ.தி.மு.க. பற்றி பேசாதது ஏன்? என தெரியவில்லை. த.வெ.க.வின் கொள்கை எதிரிகள் பட்டியலில் அ.தி.மு.க. உள்ளதா? இல்லையா? அ.தி.மு.க.வை விஜய் விமர்சிக்கிறாரே தவிர கொள்கை எதிரியாக குறிப்பிடவில்லை என்றே தோன்றுகிறது.

- திருமாவளவன்



பா.ம.க.வில் உள்ள அனைவரும் குழப்பத்திலும், வேதனையிலும் உள்ளனர். உள்ளனர். ராமதாஸ், அன்புமணி இணையாவிட்டால் பா.ம.க. நலிவடையும். பா.ம.க.வில் நிலவும் பிரச்சினைகளுக்கு எந்த கட்சியும் காரணமில்லை. ராமதாசும், அன்புமணியும் ஒன்றாக இணைந்து பேசுவதே பிரச்சினைக்கு தீர்வு.

- ஜி.கே.மணி

## திருச்சி கண்டோன்மெண்ட் பகுதியில் உள்ள அரசு ஆதிதிராவிடர் நல மாணவிகள் விடுதியில் கலெக்டர் வே.சரவணன் நேரில் ஆய்வு



**திருச்சி,ஜூலை.06-**
திருச்சிராப்பள்ளி கண்டோன்மெண்ட் பகுதியில உள்ள அரசு ஆதிதிராவிடர் நல மாணவியர்கள் விடுதியினை கலெக்டர் நேரில் பார்வையிட்டு விடுதியின் உட்கட்டமைப்பு வசதிகள், அடிப்படை வசதிகள், சமையலறை, உணவுப் பொருட்களின் இருப்பு அறை, குளியலறை மற்றும் கழிப்பறை உள்ளிட்ட இடங்களை பார்வையிட்டு, விடுதியில் குடிநீர், மின்விசிறி, மின் விளக்குகள் வசதி உள்ளிட்டவற்றையும், மாணவியர்களுக்கு வழங்கப்படும் குடிநீர் மற்றும் உணவுகள் தரமானதாக உள்ளதா என்பதை ஆய்வு செய்து, பார்வையிட்டு மாணவியர்களுடன் கலந்துரையாடினார். இந்நிகழ்வின் போது உதவி கலெக்டர் (பயிற்சி) செல்வி.தீபி சனு, உடனிருந்தார்.

முன்னதாக, தாட்கோ சார்பில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ, மாணவியர்கள் தங்கி சிறந்த முறையில் கல்வி பயிலும் வகையில் அவர்களுக்கான விடுதி கட்டிடங்கள், பள்ளி வகுப்பறை கட்டிடங்கள் மற்றும் சமுதாய கூடங்கள் உள்ளிட்ட பல்வேறு பணிகள் நடைபெற்று வருகிறது.

அந்த வகையில் திருச்சிராப்பள்ளி ராஜா காலனி பகுதியில் சுமார் 250 மாணவியர்கள் தங்கி கல்வி பயிலும் வகையில் ரூ.15 கோடி மதிப்பில் தரைத்தளம் மற்றும் இரண்டு தளங்களுடன் நவீன வசதிகளுடன் கூடிய விடுதி கட்டிடத்தின் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருவதையும், மேலும், திருச்சிராப்பள்ளி, பஞ்சப்பூர் பகுதியில் சுமார் 350 கல்லூரி மாணவர்கள் தங்கி பயிலும் வகையில் ரூ.19 கோடி மதிப்பில் நவீன வசதிகளுடன் கூடிய தரைத்தளம் மற்றும் இரண்டு தளங்களுடன் கட்டப்பட்டு வரும் விடுதி கட்டிடத்தின் கட்டுமானப் பணிகளின் தற்போதை நிலை குறித்தும், மேலும் புதிதாக கல்லூரியில் சேரும் மாணவ, மாணவியர்களின் நலன் கருதி தேவையான கூடுதல் விடுதி கட்டிடங்கள் ஏற்படுத்தி தருவது தொடர்பாகவும் (04.07.2025) கலெக்டர் வே.சரவணன் இ.ஆ.ப., அவர்களை மாவட்ட ஆட்சிரகத்தில் தாட்கோ தலைவர் நா.இளையராஜா நேரில் சந்தித்து, கலந்தாலோசனை மேற்கொண்டார்.

## அறந்தாங்கி பாலிடெக்னிக்கில் மாணவர் சேர்க்கை சிறப்பு முகாம்
### கலெக்டர் மு.அருணா துவக்கி வைத்தார்



**புதுக்கோட்டை,ஜூலை.06-**
புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி அரசு பாலிடெக்னிக் கல்லூரியில், மாணவர் சேர்க்கை சிறப்பு முகாமினை, கலெக்டர் மு.அருணா, துவக்கி வைத்து, மாணாக்கர்களுக்கு சேர்க்கைக்கான ஆணையினை வழங்கினார்.

பின்னர் கலெக்டர் தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் மாணாக்கர்களின் கல்வி நலனை மென்மேலும் உயர்த்திடும் வகையில் பல்வேறு கல்வி சார்ந்த திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில், அரசு பாலிடெக்னிக் மற்றும் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் மாணாக்கர்களுக்கு, சிறப்பான தொழிற்பயிற்சிகள் வழங்குதல், வேலைவாய்ப்புகளை உருவாக்குதல், தொழில் முன்னோடித் திட்டங்களை செயல்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதன்படி இன்றையதினம், ஏம்பல் அரசு ஐடிஐ மற்றும் அறந்தாங்கி அரசு பாலிடெக்னிக் கல்லூரி ஆகிய கல்வி நிறுவனங்களில், மாணாக்கர்களின் சேர்க்கையினை அதிகரித்திடும் வகையில், மாணவர் சேர்க்கை சிறப்பு முகாம் துவக்கி வைக்கப்பட்டது.

இம்முகாமில் அறந்தாங்கி மற்றும் இப்பகுதியினை சுற்றியுள்ள உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளியில் கல்வி பயின்ற ஏராளமான மாணாக்கர்கள் கலந்துகொண்டு, சேர்க்கைக்கான ஆணைகளை பெற்றுக்கொண்டனர். எனவே, தமிழக அரசின் மூலம் கல்வி நலனிற்காக செயல்படுத்தப்படும் இது போன்ற முகாம்களை மாணாக்கர்கள் அனைவரும் உரிய முறையில் பயன்படுத்திக்கொண்டு, கல்வியில் சிறந்து விளங்கிட வேண்டும் எனவும் கலெக்டர் மு.அருணா, தெரிவித்தார்.

இந்நிகழ்வில், முதன்மைக் கல்வி அலுவலர் கூ.சண்முகம், உதவி இயக்குநர் (மாவட்ட திறன் பயிற்சி அலுவலகம்) ம.சுந்தர கணபதி, அறந்தாங்கி மாவட்ட கல்வி அலுவலர் ஜெயந்தி, உதவி திட்ட அலுவலர் செந்தில், அறந்தாங்கி பாலிடெக்னிக் கல்லூரி முதல்வர் குமார், ஏம்பல் ஐடிஐ முதல்வர் நவநீதன், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் (நான் முதல்வன் திட்டம்) சரவணன், பள்ளித் துணை ஆய்வாளர் இளையராஜா, பேராசிரியர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## கிருஷ்ணகிரி நகராட்சி, அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் 10 மாதங்களாக மனநலம் சிகிச்சை பெற்று தற்போது முழு நலன் பெற்றவர்கள்
### கலெக்டர் சொந்த ஊருக்கு அனுப்பி வைத்தார்



**கிருஷ்ணகிரி,ஜூலை.06-**
கிருஷ்ணகிரி நகராட்சி, அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை, அவசர சிகிச்சை மற்றும் மீட்பு மையத்தில் கடந்த 10 மாதங்களாக மனநலம் சிகிச்சை பெற்று தற்போது முழு நலன் பெற்ற மத்தியபிரதேசம் மற்றும் பீகாரை சேர்ந்த இரு நபர்களை கலெக்டர் ச.தினேஷ் குமார் (3.07.2025) அன்று வாழ்த்து தெரிவித்து அவர்களுக்கு தேவையான பொருட்களை வழங்கி சொந்த ஊருக்கு அனுப்பி வைத்தார். கலெக்டர் தெரிவித்ததாவது:

கிருஷ்ணகிரி நகராட்சியில் உள்ள அரசு மருத்துவ கல்லூரி அவசர சிகிச்சை மற்றும் மீட்பு மையம் மற்றும் ஆதரவற்றவர்களுக்கான மனநல காப்பகம் கடந்த 1 ஆண்டு முன்பு துவக்கப்பட்டது. கடந்த 1 ஆண்டு காலமாக இம் மையத்தில் 55 மனநல பாதிக்கப்பட்ட நபர்களை மீட்டு சிகிச்சை அளித்து அவற்றில் 36 நபர்களை அவர்களின் குடும்பத்துடன் சேர்க்கப்பட்டுள்ளனர். மேலும் ஒரு ஆண்டுகளாக மருத்துவ குழுவினர் மற்றும் தொண்டு நிறுவனத்தினர் 357 ஆதரவற்ற நபர்களை சந்தித்து போதிய விழிப்புணர்வு ஏற்படுத்தி அவர்களை தொடர் கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். மாவட்டம் முழுவதும் பொதுமக்களுக்கு மனநல நோய் குறித்தும் மனநல பாதுகாப்பு குறித்தும் 12 விழிப்புணர்வு முகாம்கள் நடத்தியுள்ளனர்.

தற்போது மத்தியபிரதேசம் மாநிலம் சிவபுரி சேர்ந்த ஜீவன் கடந்த 10 மாதங்களுக்கு முன்பு கிருஷ்ணகிரி சுங்க சாவடிக்கு அருகில் கண்டுபிடிக்கப்பட்டு, இம் மையத்தில் சிகிச்சை பெற்று பூரண குணமடைந்து அவரது சொந்த ஊருக்கு அனுப்பி வைக்கப்படுகிறார். அதேப்போல பீகாரை சேர்ந்த கிஷோர் குந்தாரப்பள்ளி அருகே கண்டுபிடிக்கப்பட்டு இம்மையத்தின் சிகிச்சை பெற்று குணமடைந்துள்ளார். இவரும் சொந்த ஊருக்கு அனுப்பி வைக்கப்படுகிறார்கள். இச்சிகிச்சை மையத்தில் மனநலன் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய சிசிக்சை அளித்து வரும் மருத்துவர்கள், தொண்டு நிறுவன பிரதிநிதிகளுக்கு எனது பாராட்டுகளை தெரிவித்து கொள்கிறேன் என கலெக்டர் ச.தினேஷ் குமார் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், அரசு மருத்துவ கல்லூரி முதல்வர் மரு.பூவதி, மருத்துவ கல்லூரி துனை முதல்வர் மரு. சாத்விகா, மருத்துவமனை கண்காணிப்பாளர் மரு.சந்திரசேகரன், மற்றும் செவிலியர்கள் கலந்துக்கொண்டனர்.

## பொய்யான செய்தியை பரப்பிவரும் திமுக ஐடி விங்க் இத்துடன் நிறுத்திக்கொள்ள வேண்டும், இல்லையென்றால் தக்க பதிலடி கொடுப்போம்
### முன்னாள் அமைச்சர் எம்.ஆர். விஜயபாஸ்கர் ஆவேசம்



**கரூர்,ஜூலை.06-**
அதிமுகவைப் பற்றி பொய்யான செய்திகளை பரப்பிவரும் திமுக ஐடி விங்க் இத்துடன் நிறுத்திக்கொள்ள வேண்டும் இல்லையென்றால் தக்க பதிலடி கொடுப்போம் என்று முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் கூறினார்

முன்னாள் அமைச்சர் கரூர் மாவட்ட செயலாளர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது கடந்த 21ந் தேதி மண்மங்கலம் வட்டம் விஸ்வநாதபுரி கிராமத்தில் உள்ள அனியாபுரம் என்ற இடத்தில் அமராவதி கரையோரத்தில் என் தம்பி பெயரில் 28 சென்ட் நிலம் இருக்கிறது விவசாயம் செய்யாத நிலையில் கருவேலம் மரம் வளர்ந்து உள்ளது அதன் சர்வே நம்பர் 534 அதன் அருகில் சர்வே நம்பர் 535ல் விஸ்வநாதபுரியை சேர்ந்தவர்கள் மாட்டு வண்டியில் மணல் அள்ளி அந்த இடத்தில் வைத்து லாரியில் ஏற்றி உள்ளனர் இது சம்மந்தமாக பரமத்தி காவல் நிலையத்தினர் அங்கு சென்று மணல் லாரியை பறிமுதல் செய்தது மட்டுமின்றி இரண்டு மாட்டு வண்டியையும் பறிமுதல் செய்து காவல் நிலையத்திற்கு கொண்டு சென்றனர் அந்த செய்தியை என்னுடைய தம்பி மணல் கடத்தலில் ஈடுபடுவதாக பொய்யான செய்தியை திமுக ஐடி விங்க் சமூக வலைதளங்களில் ஒருவாராக பரப்பிவருகின்றனர் மணல் இருந்தது சர்வே நம்பர் 535 என்று கிராம நிர்வாக அலுவலர் மற்றும் சர்வேயரும் காவல் நிலையத்தில் பெட்டிசன் கொடுத்துள்ளனர் காவல் துறையினர் அந்த பெட்டிசனுக்கு கிடப்பில் போட்டுவிட்டு அங்குள்ள எஸ்.ஐ இடமிருந்து பெட்டிசன் வாங்கி எப்.ஐ.ஆர் போடுகின்றனர் அதில் 4 பேரை காட்டிவிட்டு நில உரிமையாளர் என பதிவு செய்துவிட்டனர் அதன்பிறகு காவல்துறையினர் முன்னாள் அமைச்சரின் தம்பி இடத்தில் மணல்குவாரியில் 7 யூனிட் மணலை பறிமுதல் செய்ததாக தம்பியை தேடி வருகின்றனர் திமுக ஆட்சியில் சொல்வதை கேட்டு காவல்துறை செயல்படு;கின்றனர் இது சம்பந்தமாக மதுரை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து 535ல் தான் மணல் இருந்தது இதற்கும் என்னுடைய தம்பிக்கும் சம்மந்தம் இல்லை என்று ரிப்போர்ட் கொடுக்கப்பட்டுள்ளது விரைவில் தீர்ப்பு வரும் 15 நாட்களுக்கு முன்பு மணலை கடத்தி சென்ற லாரியை நான் பிடித்துவிட்டதற்காக இந்த பொய்யான செய்தியை பரப்பிவருகின்றனர் தினமும் திமுகவினர் சட்ட விரோதமாக காவிரி படுகையில் சுமார் 200 லாரியில் மணல் அள்ளி 1 யூனிட் மணல் 10 ஆயிரத்திற்கு விற்கின்றனர் ஒரு நாளைக்கு 1 கோடி ரூபாய் அளவிற்கு மணல் கொள்ளையடிக்கப்படுகிறது அதற்கு காவல்துறை பாதுகாப்பு அளிக்கிறது அது மட்டுமின்றி வருவாய்துறை வனத்துறை உள்ளிட்ட பலதுறைகள் சேர்ந்து இந்த கூட்டு கொள்ளை நடக்கிறது ஆனால் என் பெயரை கெடுக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு சம்மந்தமில்லாமல் பொய் செய்தியை திமுகவினர் பரப்பிவருகின்றனர் மணல் கடத்தும் திமுகவினரை விட்டுவிட்டு எங்கள்மீது பொய்வழக்கு பதிவு செய்கின்றனர் என்று கூறினார்.

## பெரம்பலூர் மாவட்டத்தில் சிறப்பு கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாம்
### எம்.எல்.ஏ. ம.பிரபாகரன் தொடங்கி வைத்தார்



**பெரம்பலூர்,ஜூலை.06-**
பெரம்பலூர் மாவட்டம் வேலூர் ஊராட்சியில், கால்நடை பராமரிப்புதுறை சார்பில் சிறப்பு கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாமினை பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் ம.பிரபாகரன் பெரம்பலூர் மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் கலியபெருமாள் முன்னிலையில் (05.07.2025) தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க தமிழகம் முழுவதும் கால்நடை பராமரிப்புத் துறையின் சாரபில், கால்நடைகளுக்கு கால் மற்றும் வாய் நோய் (கோமாரி நோய்) தடுப்பூசி செலுத்துதல், கோழிக்கழிச்சல் நோய் தடுப்பூசிப்பணி, புருசெல்லோசிஸ் எனப்படும் கன்று வீச்சு நோய் தடுப்பூசி, நாட்டுக்கோழிப்பண்ணைகள் அமைக்க மானியம் என பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் பெரம்பலூர் மாவட்டத்தில் சிறப்பு கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது. இந்த முகாமில் கால்நடைகளுக்கு சிகிச்சை அளித்தல், கன்றுகள் மற்றும் ஆடுகளுக்கு குடற்புழுநீக்கம் செய்தல், ஆடுகளுக்கு ஆண்மை நீக்கம் செய்தல், மாடுகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி, செல்லப் பிராணிகளுக்கு வெறி நோய் தடுப்பூசி மற்றும் கோழிகளுக்கு வெள்ளை கழிச்சல் தடுப்பூசி போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

மேலும் பசு மாடுகளுக்கு இலவசமாக சினை ஊசி, சினை பரிசோதனை, சினை பிடிக்காத மாடுகளுக்கு ஸ்கேன் கருவிகள் மூலம் சிறப்பு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. கால்நடை நோய் புலனாய்வு பிரிவு மூலம் மாதிரி பொருட்கள் பரிசோதனை செய்யப்பட்டு அதற்கேற்றவாறு சிகிச்சை வழங்கப்பட்டது. தொடர்ந்து, கால்நடை வளர்ப்பு குறித்த கருத்தரங்கு, கிடாரிக் கன்றுகளுக்கான பேரணி மற்றும் கால்நடை வளர்ப்பு குறித்து கருத்துக் கண்காட்சி நடைபெற்றது. முகாமில் கலந்து கொண்ட கால்நடை வளர்ப்பார்களுக்கு கால்நடை பராமரிப்பு மற்றும் வளர்ப்பு முறை குறித்து ஒலி, ஒளி காட்சி மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இந்த முகாமில் வேலூர் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள சுமார் 1,000க்கும் மேற்பட்ட கால்நடைகள், கால்நடை வளர்ப்போர் தங்களது கால்நடைகளுடனும், விவசாய பெருமக்களும் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

முன்னதாக, இந்த முகாமில் கிடாரி பேரணி நடைபெற்றது அதில் சிறந்த கிடாரிக்கன்றுகளுக்காக அவர்களது உரிமையாளர்களுக்கும், கால்நடை வளர்ப்பில் சிறந்த மேலாண்மை பின்பற்றும் விவசாயிகளுக்கும் மற்றும் 20 கால்நடை வளர்ப்போர்க்கும் பரிசுகள் மற்றம் தீவன விதைகள், தாது உப்பு கலவை, குடற்புழு நீக்க மருந்து கொண்ட பெட்டகம் ஆகியவற்றை பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் வழங்கினார்.

இந்நிகழ்வில், கால்நடை பராமரிப்பு துறை மண்டல இணை இயக்குநர் (பொ) மரு. ஆர்.எஸ்.டி.பாபு, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ராஜ்குமார், கால்நடை பராமரிப்பு துறை உதவி இயக்குநர்கள் மரு. மூக்கன், மரு. குமார், ஆவின் உதவி மேலாளர் பொது மேலாளர் மரு. அன்பழகன், கால்நடை உதவி மருத்துவர்கள் மரு.நல்லுசாமி (ரெங்கநாதபுரம்), மரு.செல்வம் (சத்திரமனை), மற்றும் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்க செயலர் கலைச்செல்வன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## அன்புச்சோலை மையங்கள் அமைக்க விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன
### கலெக்டர் பா.பிரியங்கா பங்கஜம் தகவல்

**தஞ்சாவூர்,ஜூலை.06-**
சமூகநலன் மற்றும் மகளிர் துறையின் மூலமாகமுதியோர் நலன் கருதி தஞ்சாவூர் மாவட்டத்தில் அன்புச்சோலை மையங்கள் அமைக்க விருப்பமுள்ள தொண்டு நிறுவனத்திடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன். விண்ணப்பங்களை 08.07.2025 அன்றுக்குள் அறை எண்.303, 3வது தளம், மாவட்ட சமூக நல அலுவலகம், மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகம், தஞ்சாவூர் என்ற முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ விண்ணப்பிக்கலாம் என கலெக்டர் பா.பிரியங்கா பங்கஜம், தெரிவித்துள்ளார்.

## தொட்டியத்தில் ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கத் திட்ட துவக்க விழா



**தொட்டியம்,ஜூலை.06-**
வேளாண்மை உழவர் நலத்துறை சார்பில் தொட்டியத்தில் ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கத்திட்ட துவக்க விழா நடைபெற்றது. தொட்டியம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் செளந்தரராஜன் தலைமையில் நடந்த இந்த விழாவில் வேளாண்மை துறை சார்பில் அரசு தரக்கூடிய வேளாண் நலத்திட்டங்கள் குறித்து பேசினார். தோட்டக்கலை உ தவி இயக்குனர் பூமிகா தோட்டக்கலைத் துறை சார்பில் விவசாயிகளுக்கு இருக்கக்கூடிய மானியங்கள் குறித்து பேசினார். வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் ஈஸ்வரன் விவசாயத்தை அறிவியல் பூர்வமாக செய்து விவசாயிகள் பயனடைவது என்பது பற்றி பேசினார். தொட்டியம் சுற்றுவட்டாரத்தைச் சேர்ந்த விவசாயிகள் பலர் கலந்து கொண்டு கருத்துக்களை கேட்டறிந்தனர். தொட்டியம் வட்டார வே ளாண் உதவிஅலுவலர் ஏற்பாடுகளை செய்திருந்தார். நிகழ்வி ல் பங்கேற்ற விவசாயிகளுக்கு நலத்திட்டங்கள் வழங்கப்பட்டது.

## கருணாநிதி பிறந்தநாள் விழா



**மயிலாடுதுறை,ஜூலை.06-**
மயிலாடுதுறை அருகே திருக்கடையூரில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா திமுக அரசின் நான்கு ஆண்டு சாதனை விளக்க தெருமுனை பிரச்சாரக் கூட்டம் செம்பனார் கோவில் மத்திய ஒன்றிய திமுக இளைஞரணி சார்பில் நடைபெற்றது முத்தமிழ் அறிஞர் கலைஞரின் பிறந்த நாள் விழா மற்றும் திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைப் பிரச்சார கூட்டம் திருக்கடையூர் கடை வீதியில் செம்பனார்கோவில் மத்திய ஒன்றிய இளைஞரணி சார்பில் செம்பை மத்திய ஒன்றிய செயலாளர் பி.எம் .அன்பழகன் தலைமையில் தலைமையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் சிறப்பா அழைப்பாளராக மயிலாடுதுறை மாவட்ட செயலாளர் நிவேதா எம்.முருகன் தலைமை கழக பேச்சாளர் நாகராஜன், அருள்தாஸ், குமரவேல் ஆகியோர் அரசின் சாதனைகளை பட்டியலிட்டு பேசினர். இக்கூட்டத்தில், மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் ஸ்ரீதர் , மாவட்ட துணை செயலாளர் ஞானவேலன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் மருது ஒன்றிய செயலாளர்கள் அப்துல்மாலிக், அன்பழகன்,அணி நிர்வாகிகள், மற்றும் பொதுமக்கள் ஏராளமான கலந்து கொண்டனர்

## திருமருகலில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் 39-வது ஒன்றிய மாநாடு

**நாகப்பட்டினம்,ஜூலை.06-**
இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் 39-வது ஒன்றிய மாநாடு திருமருகலில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் சனிக்கிழமை நடைப்பெற்றது. இக்கூட்டத்திற்கு விவசாய சங்க ஒன்றிய செயலாளர் தங்கையன் விவசாய தொழிலாளர் சங்க ஒன்றிய செயலாளர் தமிழரசன் மாத சங்கத்தின் ஒன்றிய செயலாளர் ஜூடி ஆகியோர் தலைமை வகித்தனர். நாகை மாவட்ட செயலாளர் சிவகுரு பாண்டியன் திருமருகல் ஒன்றிய செயலாளர் சந்திரசேகர் விவசாய சங்க மாவட்ட பொருளாளர் பாபுஜி மாவட்ட ஊராட்சி உறுப்பினர் சரபோஜி மாநில கட்டுப்பாட்டு குழு உறுப்பினர் வழக்கறிஞர் பாண்டியன் விவசாய சங்க ஒன்றிய தலைவர் மாசிலாமணி ஒன்றிய நிர்வாக குழு உறுப்பினர் சரோஜா உள்ளிட்டோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். இந்நிகழ்ச்சியில் மாநாட்டு வரவேற்பு குழு தலைவர் ரமேஷ் செயலாளர் கலியபெருமாள் பொருளாளர் மகேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.இந்தக் கூட்டத்தில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

## அரியலூர் மாவட்டத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் நடைபெற உள்ளது
### கலெக்டர் பொ.ரத்தினசாமி தகவல்

**அரியலூர்,ஜூலை.06-**
தமிழ்நாடு முதலமைச்சர், சட்டமன்ற பேரவையில் மக்களின் குறைகளை நேரடியாக கேட்டறியும் பணிகள் துவக்கப்படும் என அறிவித்ததன்படி, தமிழ்நாட்டில் உள்ள கடைக்கோடி மக்களுக்கும், அன்றாடம் அணுகும் அரசுத் துறை சேவைகள் / திட்டங்களை வசிக்கும் பகுதிக்கே சென்று வழங்கும் பொருட்டு, அனைத்து நகர்ப்புற மற்றும் ஊரக பகுதிகளில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்டம் துவக்கப்படுகிறது. இத்திட்டம் அரியலூர் மாவட்டத்தில் ஜூலை மாதம் 15 தேதி முதல் அக்டோபர் மாதம் வரை நடைபெற உள்ளது. இத்திட்டதின் கீழ், 95 முகாம்கள் நடத்தப்பட உள்ளன.

இந்த முகாம்களில் நகர்ப்புற பகுதிகளில் 13 அரசுத் துறைகளைச் சேர்ந்த 43 சேவைகளும் ஊரகப் பகுதிகளில் 15 அரசுத் துறைகளைச் சேர்ந்த 46 சேவைகளும் வழங்கப்படும். அத்துடன் முகாம்களுக்கு வருகை தரும் பொது மக்களின் உடல்நலனைப் பேணும் வகையில், மருத்துவ சேவைகளை வழங்க மருத்துவ முகாம்களும் நடத்தப்படும்.

இத்திட்டத்தின் கீழ், தன்னார்வலர்கள், ஒவ்வொரு வீட்டிற்கும் நேரடியாகச் சென்று, முகாம் நடைபெறும் நாள், இடம் குறித்த விபரங்கள், அங்கு வழங்கப்பட உள்ள பல்வேறு அரசுத்துறைகளின் சேவைகள் / திட்டங்களை விவரித்து, அதில் பயனடைவதற்கான தகுதிகள், தேவைப்படும் ஆவணங்கள் குறித்து தெரிவிப்பதோடு தகவல் கையேட்டினையும் விண்ணப்பத்தினையும் வழங்குவர். இந்த முகாம்களில் பெறப்படும் விண்ணப்பங்கள் மீது, 45 நாட்களில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அரியலூர் மாவட்டத்தில், 15.07.2025 அன்று துவங்கி 14.08.2025 முடிய, ஒரு மாத காலத்திற்குள், 15.07.2025, 17.07.2025, 22.07.2025, 24.07.2025, 25.07.2025, 29.07.2025, 30.07.2025, 31.07.2025, 01.08.2025, 05.08.2025, 06.08.2025, 07.08.2025, 08.08.2025, 12.08.2025 மற்றும் 14.08.2025 ஆகிய 15 நாட்களில், நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சி பகுதிகளில் 36 முகாம்கள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளன. முகாம் நடைபெறும் நாள், அம்முகாம்களில் பங்குபெறும் வார்டுகள் மற்றும் ஊராட்சிகள் குறித்த விபரங்கள் தன்னார்வலர்கள் வாயிலாகவும் ஆட்டோ விளம்பரம் வாயிலாகவும் தெரிவிக்கப்படும். இந்தப்பணிக்காக 303 தன்னார்வலர்கள் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

இத்திட்டத்தின் கீழ், 15.07.2025 அன்று, அரியலூர் நகராட்சிக்கு உட்பட்ட 14, 17, 18வார்டுகளை ஒருங்கிணைத்து அரியலூர் நகராட்சி அலுவலகத்தில்நடைபெறும் முகாம், செந்துறை ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட, ஆதனக்குறிச்சி, ஆலத்தியூர், மணக்குடையான் ஆகிய ஊராட்சிகளை ஒருங்கிணைத்து ஆதனக்குறிச்சி கிராமம் அம்மன் திருமண மண்டபத்தில் நடைபெறும் முகாம் மற்றும் தா.பழூர் ஊராட்சி ஒன் றி யத் திற் குட் பட் ட, அணைக்குடம், சிந்தாமணி, சோழமாதேவி, கோடங்குடி ஆகிய ஊராட்சிகளை ஒருங்கிணைத்து கோடங்குடி மாரியம்மன் கோவில் திடலில் நடைபெற உள்ள முகாம் ஆகிய முகாம்கள் குறித்த விபரங்களை பொதுமக்களுக்கு முறையாக தெரிவிப்பதற்காக, தன்னார்வலர்கள் வீடு வீடாகச் சென்று விண்ணப்பம் மற்றும் தகவல் கையேடு வழங்கும் பணி, 07.07.2025 முதல் தொடங்க உள்ளது. மேலும், இந்த முகாம்களில், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை பெறத் தகுதியுள்ள விடுபட்ட மகளிர் எவரேனும் இருப்பின் முகாம் நடைபெறும் நாளன்று முகாமிற்குச் சென்று தங்கள் விண்ணப்பத்தினை அளிக்கலாம். கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்திற்கான விண்ணப்பம் "உங்களுடன் ஸ்டாலின்"முகாம்களில் மட்டுமே வழங்கப்படும்.

எனவே, உங்கள் பகுதிகளில் நடைபெறும் "உங்களுடன் ஸ்டாலின்"திட்ட முகாம்களில் பொது மக்கள் அனைவரும் கலந்து கொண்டு பயன் பெறுமாறு அரியலூர் கலெக்டர் பொ.இரத்தினசாமி, தெரிவித்துள்ளார்.



காஞ்சிபுரம்மாவட்டம்குன்றத்தூர்ஒன்றியம்,பூந்தண்டலம்ஊராட்சியில்குளம்புனரமைத்தல் பணியினை மாவட்ட கலெக்டர் கலைச்செல்வி பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். குளக்கரைகள் எத்தனை அடி உயரத்தில் அமைகிறது என்ற விவரத்தையும் கேட்டறிந்தார். ஊராட்சி ஒன்றிய அதிகாரிகள் உடனிருந்தனர்.

# அறையில் அமர்ந்து கொண்டு அறைகூவல் விடும் விஜயை முதல்வர் மு.க.ஸ்டாலின் எளிதாக கையாள்வார்: அமைச்சர் பி.கே.சேகர்பாபு பேட்டி

**சென்னை,ஜூலை.06**

இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்பி.கே.சேகர்பாபு 05.07.2025) எழும்பூர், அருள்மிகு சீனிவாசப் பெருமாள் திருக்கோயில் சார்பில் கட்டப்படும் திருமண மண்டபம், வில்லிவாக்கம், அருள்மிகு அகத்தீஸ்வரர் திருக்கோயில் சார்பில் கட்டப்படவுள்ள பல்நோக்கு மண்டபம் அமைக்கும் இடம், கொளத்தூரில் கட்டப்பட்டு வரும் மூத்த குடிமக்கள் உறைவிடம் மற்றும் கொளத்தூர், பூம்புகார் நகரில் கட்டப்பட்டு வரும் அருள்மிகு கபாலீசுவரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி புதிய கட்டட கட்டுமானப் பணிகளை நேரில் பார்வையிட்டு பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்கள் மற்றும் பொறியாளர்களுக்கு அறிவுரைகளை வழங்கினார்.

பின்னர், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது, இந்து சமய அறநிலையத்துறை திருக்கோயிகளின் சார்பில் கட்டப்பட்டு வருகின்ற திருமண மண்டபங்கள், மூத்த குடிமக்கள் உறைவிடம் மற்றும் அருள்மிகு கபாலீஸ்வரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஆகியவற்றின் கட்டுமான பணிகள் நேர்த்தியாக அமைந்திடும் வகையிலும், பணிகளை விரைவுப்படுத்திடவும் ஆய்வினை மேற்கொண்டோம். சென்னை, கொளத்தூர் ராஜாஜி நகரில் கடந்த 27.5.2025 அன்று முதலமைச்சர் அவர்கள் கொளத்தூர், பழனி மற்றும் திருநெல்வேலியில் மூத்த குடிமக்கள் உறைவிடம் கட்டுவதற்கு கட்டுமான பணிகளை தொடங்கி வைத்தார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் துறையின் சார்பிலான ஆய்வுக் கூட்டங்களை மேற்கொள்கின்ற போது மூத்த குடிமக்களுக்காக கட்டுகின்ற உறைவிடங்களின் பணி முன்னேற்றத்தை தொடர்ந்து கேட்டறிந்து வருகின்றார். இந்தப் பணிகள் வரும் டிசம்பர் மாதத்திற்குள் முடிக்கப்பட்டு மூத்த குடிமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும். கொளத்தூரில் அமையவுள்ள மூத்த குடிமக்களின் உறைவிடத்தில் 100 மூத்த குடிமக்கள் தங்கும் வகையில் குளியலறை, கழிப்பறை வசதியுடன் அறைகள், உணவருந்தும் அறை, நூலகம், மருத்துவ மையம், சிறு பூங்கா, யோகா மற்றும் தியான அறை, நடைபாதைகள் போன்ற வசதிகள் அமைக்கப்படுகின்றன. இந்த உறைவிடங்களை பராமரிக்க முன்னணி நிறுவனங்களின் சமூக பொறுப்பு நிதி மூலம் நிதியுதவி வழங்கப்படுகிறது. கொளத்தூர் மூத்த குடிமக்கள் உறைவிடத்திற்கு இதுவரை ரூ.5 கோடி நிதி வரப்பெற்றுள்ளது.

தமிழ்க் கடவுள் முருகனுக்கு இந்த ஆட்சியில் தொண்டு செய்வதற்கு கிடைத்த வாய்ப்பைப் போல் இதுவரையில் வேறு எந்த ஆட்சியிலும் கிடைக்கவில்லை. அதனை எங்கள் திராவிட மாடல் ஆட்சியின் தலைவர் முதலமைச்சர் அவர்களின் ஆட்சிக்கு கிடைத்த மிகப் பெரிய ஒரு வரப்பிரசாதமாக நினைக்கின்றோம். தமிழ்க் கடவுள் முருகனுக்கு தேவையான அனைத்தையும் நிறைவேற்றி தருகின்ற ஒரு ஆட்சியாக இந்த ஆட்சி அமைந்திருக்கின்றது. அந்த வகையில் பழனி திருக்கோயிலின் பெருந்திட்ட வரைவு பணிகளுக்கு முன்பாகவே குடமுழுக்கு நிறைவு செய்யப்பட்டு இன்றைக்கு திருப்பதி போல் மிக பிரம்மாண்டமாக பழனி திருக்கோயில் காட்சி அளித்து கொண்டிருக்கிறது. அறுபடை வீடுகளில் முதல் படைவீடான திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு வருகின்ற 14.7.2025 குடமுழுக்கு நடைபெற இருக்கின்றது. இந்திய ஒன்றியத்தையே திரும்பி பார்க்க வைத்திருக்கின்ற வகையில் திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி குடமுழுக்கு வருகின்ற 7ஆம் தேதி நடைபெற இருக்கின்றது. அதில் லட்சோப லட்சம் மக்கள் கூடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி குடமுழுக்கு விழாவிற்கு மூன்று இடங்களில் தற்காலிக பேருந்து நிலையங்களும், திருக்கோயில் குடமுழுக்கை அனைத்து பகுதிகளிலும் காணும் வகையில் எல்இடி அகன்ற திரைகள் அதிக எண்ணிக்கையில் அமைக்கப்பட்டுள்ளன. பக்தர்களுக்கு தேவையான குடிநீர் வசதி, கழிப்பிட வசதி, மருத்துவ வசதி ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கின்றன. பாதுகாப்பு பணியில் 6000 காவலர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளதோடு 25 மருத்துவக் குழுக்களும், 27 இடங்களில் தீயணைப்பு வாகனங்கள் தயார் நிலையில் வைக்கப்படவுள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேற்றைய தினம் தலைமைச் செயலகத்தில் நடத்திய துறை ஆய்வுக் கூட்டத்தில் திருச்செந்தூர் திருக்கோயிலில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள முன்னேற்பாடு பணிகள் குறித்து விரிவாக ஆய்வு செய்தார். பக்தர்களுக்கு லட்சக்கணக்கான உணவு பொட்டலங்கள் தயாரித்து வழங்கிடவும் உத்தரவு பிறப்பித்துள்ளார். நேற்று காத்திருந்த தொண்டர்களை கூட பார்க்க முடியாமல் இருந்த செய்தி ஊடகங்களில் வந்தது. ஆகவே அவர், முதலில் தன்னையும், தன்னை சார்ந்து இருக்கின்ற இயக்கத்தையும் பார்த்துக்கொள்ள சொல்லுங்கள். மக்களை பாதுகாக்க எங்களுடைய மக்களின் முதல்வர் இருக்கின்றார். நிச்சயமாக முதலமைச்சர் அவர்களின் முன்னெடுப்பில் யாருக்கும் எந்தவிதமான பாதிப்பும் வராமல் அதே நேரத்தில் அடிப்படை தேவைகளை நிறைவேற்றுகின்ற, வளர்ச்சிக்கு தேவையான கட்டமைப்புகளை அமைத்து மக்களுடைய தேவைகளை பூர்த்தி செய்துவிட்டு தான் நடவடிக்கையை மேற்கொள்வார். எடுத்தேன், கவிழ்த்தேன் என்பது போல் எங்கள் முதலமைச்சர் அவர்கள் மக்களை பாதிப்பிற்குள்ளாக்கும் எந்த ஒரு திட்டத்தையும் கொண்டு வருவதற்கு நிச்சயமாக முற்பட மாட்டார். ஆகவே விஜய் அவர்கள் தேவையில்லாமல் முதல் வரை சந்திப்பேன் என்று கூறிக் கொண்டிருக்கிறார். அறையில் அமர்ந்து கொண்டு அறைகூவல் விடுவதை முதலமைச்சர் அவர்கள் எளிதாக தனது கையாள்வார்.

மடப்புரம் திருக்கோயில் காவலாளி அவுட் சோர்சில் பணி புரிபவர். அவரது இறப்பு தொடர்பாக முதலமைச்சர் அவர்கள் தானே முன் வந்து வருத்தம் தெரிவித்துள்ளார். இதுபோல் எந்த மாநிலத்தின் முதலமைச்சரும் இப்படி தானாக முன்வந்து வருத்தம் தெரிவித்ததில்லை. அக்குடும்பத்திற்கு தேவையான நிவாரணத்தை வழங்கி இருக்கின்றார். இந்த சம்பவத்தில் ஈடுபட்ட அனைவரும் கைது செய்யப்பட்டு, கடுமையான சட்டப்பிரிவின் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த சம்பவத்திற்கு தமிழக அரசே சிபிஐ விசாரணை கோரி இருக்கின்றது. தவறு எங்கு நடந்தாலும் விசாரணை முடிவில் யார் குற்றவாளியாக இருந்தாலும் தண்டிப்பதற்கு சட்டத்தின் ஆட்சி நடத்துகின்ற எங்கள் முதலமைச்சர் அவர்கள் தவற மாட்டார் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி. என்ஸ்ரீதர், தலைமைப் பொறியாளர்பொ.பெரியசாமி, கூடுதல் ஆணையர் சி. ஹரிப்ரியா, இணை ஆணையர்கள் கி.ரேணுகாதேவி, ஜ.முல்லை, பெ.க.கவெனிதா, மாநகராட்சி மண்டல குழுத் தலைவர்கள். கூ.பீ.ஜெயின், சரிதா மகேஷ் குமார், கண்காணிப்பு பொறியாளர்பழனி, செயற்பொறியாளர்.மணிவண்ணன், மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்.நாகராஜன், ஐசிளப் முரளிதரன்,சந்துரு, மகேஷ் குமார், அமுதா, கல்லூரி முதல்வர் லலிதா மற்றும் அலுவர்கள் கலந்து கொண்டனர்.

# வீட்டு வேலைகளை செய்யும்படி அடித்து சித்ரவதை 16 வயது சிறுமி தற்கொலை: சித்தி, தந்தை கைது

**சென்னை ஜூலை 06-**

சென்னை ஓட்டேரி மேட்டுப்பாளையம் அருந்ததி நகர் அல்கான் தெருவில் வசித்து வருபவர் அமர்நாத் (45). அமைந்தகரையில் உள்ள தனியார் கம்பெனியில் வேலை செய்து வருகிறார். இவரது மனைவி சங்கீதா கடந்த 10 ஆண்டுக்கு முன் கருத்து வேறுபாடு காரணமாக பிரிந்து சென்று விட்டார். இவர்களுக்கு 2 மகள்கள் உள்ளனர். மூத்த மகள் ரித்திஷா (18) தனது பெரியம்மா புஷ்பா என்பவர் வீட்டில் வசித்து வருகிறார்.2வது மகள் நந்தினி (16) தந்தை அமர்நாத்துடன் வசித்து வந்தார்.

இந்த சிறுமி மாதவரம் நெடுஞ்சாலையில் உள்ள அரசு பள்ளியில் 12ம் வகுப்பு படித்து வந்தார். அமர்நாத் கடந்த 2015ம் ஆண்டு உஷா (40) என்பவரை 2வதாக திருமணம் செய்து கொண்டார். மாற்றுத்திறனாளியான உஷா சிறுமி நந்தினியை கொடுமைப்படுத்தி வந்ததாக கூறப்படுகிறது.

இந்நிலையில் நேற்று முன்தினம் மாலை பள்ளியில் இருந்து வந்த நந்தினி வீட்டில் யாரும் இல்லாதபோது மாடி கூரை வீட்டில் மின்விசிறியில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார். இதை அடுத்து அவரது உடலை பிரேத பரிசோதனைக்காக கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர்.இந்நிலையில் சிறுமி தற்கொலைக்கு அவரது சித்தி தான் காரணம். எனவே அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என கூறி சாலை மறியலில் ஈடுபட்டனர். இதையடுத்து ஓட்டேரி இன்ஸ்பெக்டர் ரமேஷ் தலைமையிலான போலீசார் இதுதொடர்பாக விசாரணை நடத்தினர்.இதில் வீட்டில் சமைப்பது துணி துவைப்பது பெருக்குவது உள்ளிட்ட அனைத்து வேலைகளையும் செய்ய வைத்து சிறுமியை சித்தி உஷா கொடுமைப்படுத்தி வந்துள்ளார்.வேலை செய்யவில்லை என்றால் உஷா அடித்து சித்திரவதை செய்ததும் தெரியவந்தது. இவை அனைத்தும் தெரிந்தும் அமர்நாத் மனைவியிடம் எந்த கேள்வியும் கேட்காமல் இருந்து வந்துள்ளார். மாதவிடாய் நேரங்களில் பயன்படுத்தும் துணிகளைகூட சிறுமியை துவைக்க சொல்லி கொடுமைப்படுத்தியுள்ளார். இதுகுறித்து சிறுமி பலமுறை பள்ளி தோழிகளிடம் கூறி அழுதுள்ளார். ஒரு கட்டத்தில் உஷாவின் டார்ச்சர் தாங்க முடியாமல் மனமுடைந்த சிறுமி தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டது தெரியவந்துள்ளது. இதையடுத்து உஷா அமர்நாத் (45) ஆகியோரை கைது செய்து தற்கொலைக்கு தூண்டியதாக வழக்குப்பதிவு செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

# 2வது மாடியில் இருந்து குதித்த பள்ளி மாணவி காயம்

**சென்னை ஜூலை 06-**

பெரம்பூர் வெங்கட்ராமன் தெருவை சேர்ந்த 14 வயது சிறுமி வேப்பேரி தனியார் பள்ளியில் 10ம் வகுப்பு படித்து வருகிறார். நேற்று முன்தினம் மாலை பள்ளியில் இருந்து வீட்டிற்கு வந்த சிறுமி வீட்டிலிருந்த தைராய்டு மாத்திரைகளை அளவுக்கு அதிகமாக சாப்பிட்டு திடீரென 2வது மாடியில் இருந்து கீழே குதித்துள்ளார்.

சத்தம் கேட்டு அக்கம் பக்கத்தினர் மற்றும் மாணவியின் பெற்றோர் ஓடிவந்து படுகாயத்துடன் இருந்த சிறுமியை மீட்டு புளியந்தோப்பில் உள்ள தனியார் மருத்துவமனையில் சேர்த்தனர்.

அங்கு 2 கால்களும் உடைந்த நிலையில் மாணவிக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.இதுகுறித்து செம்பியம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தியதில் மாணவி 10ம் வகுப்பு படித்து வருவதால் அவர் படிக்கும் தனியார் பள்ளியில் அதிகளவு வீட்டு பாடங்களை படித்துவரும்படி கூறிதாக கூறப்படுகிறது.

இதனால் சிறுமி கடந்த சில நாட்களாகவே மன உளைச்சலில் இருந்ததால் மாடியில் இருந்து கீழே குதித்தது தெரிய வந்தது. இதுகுறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# 2012ம் ஆண்டு மத்தியகுற்றப்பிரிவு நிலமோசடி வழக்கில் 4 பேருக்கு தலா1ஆண்டு சிறை

**சென்னை ஜூலை 06-**

சென்னை, கோயம்பேடு கிராமத்தில் நாகம்மாள் மற்றும் அவரது வாரிசுக்கு சொந்தமான 31 சென்ட் இடத்தை தாமஸ் ஆபிரகாம், அவரது மனைவி மற்றும் சகோதரர் ஆகிய மூவரும் சேர்ந்து 1983ம் ஆண்டு கோடம்பாக்கம் சார் பதிவகத்தில் கிரையம் பெற்று அவர்கள் பெயரில் பட்டா பெற்று உள்ளனர்.

**வாரிசுகள்**

இந்நிலையில் மேற்படி இடத்தை விற்பனை செய்ததை மறைத்து நாகம்மாளின் வாரிசுகளான அரும்பாக்கத்தை சேர்ந்த எதிரி 1 முருகேசன், எதிரி -8 ஜெயலட்சுமி மற்றும் எதிரி 9 ராணி தாங்கள் மட்டுமே வாரிசுகள் என்று நுங்கம்பாக்கம் வட்டாட்சியர் அலுவலகத்தில் போலியான ஆவணங்கள் சமர்பித்து நிலஉடைமை பதிவேட்டிலும் பதிவு செய்துள்ளனர்.

**அதிகாரம்**

அதனை தொடர்ந்து முருகேசன், ஜெயலட்சுமி மற்றும் ராணியின் வாரிசுகளும் சேர்ந்து முருகேசன் பெயரில் விடுதலை பத்திரம் பதிவு செய்து கொடுத்தும் அதன் பின்னர் முருகேசன் அந்த இடத்தை எதிரி 6 ராம்குமாருக்கு பொது அதிகாரம் கொடுத்துள்ளார். பொது அதிகாரம் பெற்ற ராம்குமார் எதிரி 7 குபேரனுக்கு விற்பனை செய்துள்ளார். இவ்வாறாக ஏற்கனவே விற்பனை செய்த சொத்தினை போலியான ஆவணங்கள் மூலம் எதிரிகள் கூட்டு சேர்ந்து மீண்டும் விற்பனை செய்து புகார்தாரரது சொத்தை அபகரித்துள்ளனர்.

**விசாரணை**

இடத்தின் உரிமையாளர் தாமஸ் ஆபிரகாம் என்பவரிடமிருந்து பொது அதிகாரம் பெற்ற கோபாலகிருஷ்ணன், என்பவர் கடந்த 2012 கொடுத்த புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டு மேற்படி நிலமோசடியில் ஈடுப்பட்ட 1) முருகேசன், 2) அசோக், 3) ஆனந்தி, 4) கார்த்திகா, 5) மணிமேகலை, 6) ராம்குமார், 7) குபேரன், 8. ஜெயலட்சுமி, 9 ராணி, ஆகியோர் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. இவ்வழக்கு தொடர்பாக சென்னை, எழும்பூர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடைபெற்று வந்தது.

**வழக்கு**

சென்னை பெரு நகர காவல் ஆணையர் ஆ.அருண், நிலுவையிலுள்ள நீதிமன்ற வழக்குகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தி, பாதிக்கப்பட்டவர்களுக்கு விரைவாக நீதி பெற்று தர உத்தரவிட்டதின் பேரில், மத்தியகுற்றப்பிரிவு கூடுதல் ஆணையர் ம்ஏ.ராதிகா, ஆலோசனையின் பேரில், துணை ஆணையாளர் எஸ்.ஆரோக்கியம், நேரடி கண்காணிப்பில், நிலமோசடி புலனாய்வு பிரிவு உதவி ஆணையாளர் மற்றும் காவல் ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் மேற்படி வழக்கின் சாட்சிகளை முறையாக ஆஜர் செய்து தொடர்ந்து கண்காணித்து வந்தனர். இந்நிலையில் நீதிமன்ற வழக்கு விசாரணை முடிவடைந்து கடந்த 04.ந் தேதியன்று இவ்வழக்கின் தீர்ப்பு வழங்கப்பட்டது.

**சிறை தண்டனை**

மேற்படி வழக்கின் எதிரிகள் 1.ஆனந்தி, 2.கார்த்திகா, 3.மணிமேகலை, மற்றும் 4.குபேரன், ஆகிய 4பேருக்கு தலா 1 ஆண்டு சிறை தண்டனை மற்றும் மொத்தம் ரூ.67,000/- அபராதம் விதித்து தீர்ப்பு வழங்கினார். ராம்குமார் இவ்வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டார். மற்ற எதிரிகளான முருகேசன், அசோக் ஜெயலட்சுமி, ராணி ஆகியோர் இறந்து விட்டனர்.

**நடவடிக்கை**

குற்றவாளி குபேரன் புகார்தாரருக்கு உண்டான சொத்தில் திட்டமிட்டு வங்கி கடன் பெற்று ரூபாய் 7 கோடி நஷ்டம் ஏற்படுத்தியுள்ளார் என்பதால் மேற்படி ரூபாய் 7 கோடி இழப்பீட்டு தொகையை பாதிக்கப்பட்ட சொத்தின் உரிமையாளர்களுக்கு சமமாக பங்கீட்டு நேரடியாகவோ அல்லது நீதிமன்றத்தில் வைப்பீடாகவோ செலுத்தவேண்டும் என்றும் செலுத்தாத பட்சத்தில் எதிரியின் அசையும் மற்றும் அசையாத சொத்துக்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று கனம் நீதிபதி ஏ. செல்லபாண்டியன், தீர்ப்பு வழங்கினார் இவ்வழக்கில் அரசு தரப்பு வழக்கறிஞராக செல்வராஜ் என்பவர் ஆஜராகி சிறப்பாக வாதாடினார்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at
Manimaran Printers
No. 1 Santhanapuram, Madurai-Trichy 4 Way Main Road, Nagamangalam, Trichy-620 012
Ph: 0431-2680969
E-Mail: trichyedi@thinaboomi.com
RNI.Regn No.61511/94
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

போக்குவரத்து விதிகளை மதிக்கவும்

# வாடகைக்கு வீடுகளை எடுத்து சொந்த வீடு என பலரிடம் லீசுக்கு விட்டு ரூ.3 கோடி மோசடி: பெண் கைது

**சென்னை ஜூலை 06-**

நீலாங்கரை பகுதியை சேர்ந்த தர்மன் என்பவர் வாடகை வீடு தேடிய போது வீட்டு புரோக்கர் மூலம் நீலாங்கரை ரெங்கரெட்டி கார்டன் 2வது தெருவில் வசித்து வரும் நிகமத் நிஷா (52) என்பவர் அறிமுகம் கிடைத்தது. அப்போது நிகமத் நிஷா தனது வீட்டின் கீழ்தளத்தில் வீடு காலியாக உள்ளதாக கூறி ரூ.7 லட்சத்திற்கு லீசுக்கு பேசி ஒப்பந்தம் செய்யப்பட்டது. ஆனால் சொன்னப்படி வீடு தரவில்லை. இதனால் தர்மன் கொடுத்த ரூ.7 லட்சத்தை திருப்பி கேட்டுள்ளார்.

உடனே நிகமத் நிஷா ஈஞ்சம்பாக்கத்தில் உள்ள ஒரு வீடு வாடகைக்கு எடுத்து தர்மனை லீசுக்கு குடியமர்த்தியுள்ளார். பிறகு லீஸ் ஒப்பந்தத்தை ரத்து செய்துவிட்டு வாடகை ஒப்பந்தம் போட்டு கொடுக்குமாறு தர்மன் கேட்டுள்ளார். அதன் பிறகு நிகமத் நிஷா அலுவலகத்தை மூடிவிட்டு தலைமறைவாகிவிட்டார்.

இதுகுறித்து தர்மன் கடந்த மாதம் 26ம் தேதி போலீஸ் கமிஷனர் அலுவலகத்தில் புகார் அளித்தார். அதன்பேரில் மத்திய குற்றப்பிரிவு விசாரணை நடத்த கமிஷனர் அருண் உத்தரவிட்டார்.அதன்படி மத்திய குற்றப்பிரிவு விசாரணை நடத்திய போது நிகமத் நிஷா வாடகைக்கு வீடுகளை எடுத்து அதை தனது சொந்த வீடு எனக்கூறி இதுபோல் 49 பேருக்கு லீசுக்கு விட்டு ஒவ்வொருவரிடமும் ரூ.7 லட்சம் முதல் ரூ.10 லட்சம் வரை ரூ.3 கோடி வரை பெற்று மோசடி செய்தது தெரியவந்தது.

## காணவில்லை

எனது பெயரில் மன்னார்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட கிரய ஆவண எண்கள் 1817/1994 நாள் : 28.09.1994, 1733/1995 நாள் : 09.08.1995, கடந்த 30.06.2025 அன்று ஆலங்கோட்டை பேருந்து நிலையம் அருகே கீழே விழுந்து காணாமல் போய்விட்டது. தேடிபார்த்தும் கிடைக்கவில்லை. மேற்படி கிரய பத்திரத்தை கண்டு எடுத்தவர்கள் கீழே கண்ட முகவரியில் என்னிடம் ஒப்படைக்குமாறும் அல்லது தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கிறேன்.

**ரவிச்சந்திரன் த/பெ. கணேசன்,**
5/114, தெற்குத்தெரு, பள்ளாக்கொல்லை, அத்திக்கோட்டை, மன்னார்குடி தாலுக்கா, திருவாரூர் மாவட்டம் செல்: 9944301370

**கனம் உட்கோட்ட நிர்வாக நடுவர் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றம், மன்னார்குடி**
**த.ப.எண்.72/2025**

தவமணி, த/பெ.தர்மலிங்கம். – மனுதாரர்
1.வட்டாட்சியர், முத்துப்பேட்டை,
2.சார்பதிவாளர், முத்துப்பேட்டை. – எதிர்மனுதாரர்கள்

மனுதாரர்தரப்பு வழக்கறிஞர் அறிவிப்பு:

திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை தாலுக்கா, துறைக்காடு கிராமம், தம்பிக்கோட்டை கீழக்காடு என்ற முகவரியில் வசித்து வந்த எனது கணவர் "தர்மலிங்கம்" த/பெ. பொதியப்பதேவர் அவர்கள் கடந்த 21.11.1984 தேதியில் இறந்துவிட்டதாகவும், மேற்படி இறப்பை பதிவு செய்ய தவறிவிட்டதாகவும், பதிவுசெய்ய உத்தரவிட வேண்டிமனு கொடுத்து அது சம்மந்தமாக விசாரணை எதிர்வரும் 07.07.2025–ம் தேதி அன்று வாய்தா போடப்பட்டுள்ளது. அன்றைய தினம் நேரில் ஆஜராகி ஆட்சேபனை இருந்தால் தெரிவித்துக் கொள்ளவும்.

**G.முகமது உமர் கத்தாபு, M.A.,B.L**
**வழக்கறிஞர்/ நோட்டரி பப்ளிக் திருத்துறைப்பூண்டி.**

**கனம் உட்கோட்ட நிர்வாக நடுவர் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றம், மன்னார்குடி**
**த.ப.எண்.84/2025**

ஐயப்பன்
த/பெ.கணபதி. – மனுதாரர்
1.வட்டாட்சியர், முத்துப்பேட்டை,
2.சார்பதிவாளர், முத்துப்பேட்டை. – எதிர்மனுதாரர்கள்

மனுதாரர்தரப்பு வழக்கறிஞர் அறிவிப்பு:

திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை தாலுக்கா, 2/177, கீழஉப்பூர் என்ற முகவரியில் வசிக்கும் மனுதாரர் தனக்கு கடந்த 20.01.2012 தேதியில் "கோகுலகிருஷ்ணன்" என்ற ஆண் குழந்தை பிறந்ததாகவும், மேற்படி பிறப்பை பதிவு செய்ய தவறிவிட்டதாகவும், பதிவுசெய்ய உத்தரவிட வேண்டி மனு கொடுத்து அதுசம்மந்தமாக விசாரணை எதிர்வரும் 07.07.2025–ம் தேதி அன்று வாய்தா போடப்பட்டுள்ளது. அன்றைய தினம் நேரில் ஆஜராகி ஆட்சேபனை இருந்தால் தெரிவித்துக் கொள்ளவும்.

**G.முகமது உமர் கத்தாபு, M.A.,B.L**
**வழக்கறிஞர்/ நோட்டரி பப்ளிக் திருத்துறைப்பூண்டி.**

**கூடுதல் சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை**
**M.C.O.P.No.2/2024**

பிரகாஷ்குமார். – மனுதாரர்
– எதிர் –
பூமிநாதன்,
த/பெ.கலியவரதன்,
45, ஆல்பேட்டை,
மஞ்சகுப்பம்,
கடலூர் மாவட்டம். – 2–ம் எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி வழக்கில் தாங்கள் கோர்ட்டில் ஆஜராவதற்கு பலமுறை கோர்ட் மூலமாகவும் தபால் மூலமாகவும் அறிவிப்பு அனுப்பியும் ஆஜராகததால் தாங்கள் சமூகம் கோர்ட்டில் ஆஜராவதற்கு ஏதுவாக தினசரி நாளிதழில் விளம்பரம் செய்ய உத்தரவாகியுள்ளது. வழக்கு வாய்தா 15.07.2025 அன்று போடப்பட்டுள்ளது. வாய்தா அன்று தாங்கள் நேரடியாகவோ வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராக வேண்டியது. தவறும்பட்சத்தில் வழக்கு தங்களை பொறுத்து ஒருதலைப்பட்சமாக தீர்ப்பாகும் என்பதை இதன் மூலம் அறியவும்.

**R.முரளி, M.Sc.,B.L.,.**
**வழக்கறிஞர், மயிலாடுதுறை.**

**உயர்திரு உட்கோட்ட நடுவர் நீதிமன்றம், வருவாய் கோட்டாட்சியர், வேதாரண்யம்,**
**ந.க.எண் 1933/2025/அ6**
**ஒ.மு.எண்.2045/2024/அ4**

திருமதி. கலா,
க/பெ.ஜெயபாலன், பழையவரம்,
ஆயக்காரன்புலம்-1ம்சேத்தி கிராமம்,
வேதாரண்யம் வட்டம்,
நாகப்பட்டினம் மாவட்டம். ...மனுதாரர்
உயர்திரு. வட்டாட்சியர், அவர்கள்,
வேதாரண்யம் ....எதிர்மனுதாரர்

## அறிவிப்பு

மேற்படி முகவரியில் வசித்து வரும் மனுதாரர் தனது மாமனார் சுப்பையன், த/பெ. முருகையன் என்பவர் கடந்த 29.01.2019 -ம் தேதி அன்று இறந்த விபரத்தை பதிவு செய்திடக் கோரி வேதாரண்யம் கோட்டாட்சியர் அவர்களிடம் மனு அளித்துள்ளார் இந்த மனுவின் மீது யாருக்கேனும் ஆட்சேபணை ஏதாவது இருப்பின் 15 நாட்களுக்குள் தங்களது ஆட்சேபணைகளை வேதாரண்யம் வட்டாட்சியரிடம் தெரிவிக்கும்படி கேட்டு கொள்ளப்படுகிறது.

மனுதாரர்: திருமதி. கலா,
க/பெ.ஜெயபாலன், பழையவரம்,
ஆயக்காரன்புலம்-1ம்சேத்தி கிராமம்,
வேதாரண்யம் வட்டம்.

**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், குளித்தலை**
**MCOP.No.169/2024**

ஞானசேகரன்,
த/பெ.முத்துசாமி,
க.எண்.2/20, மங்கம்மா சாலை,
மருதூர் கிராமம், மேட்டுமருதூர்,
குளித்தலை வட்டம்,
கரூர் மாவட்டம். – மனுதாரர்
– எதிர் –
R.சுமதி,
க/பெ.ராஜேஷ்,
3/376, மீனாம்பாளையம்,
முதுத்துறை, மேட்டுப்பாளையம்,
கோயம்புத்தூர்– 638 459. – 1–ம் எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மனுதாரர் ஞானசேகரன் என்பவர் கடந்த 22.05.2024–ம் தேதி நடந்த சாலை விபத்தில் காயமடைந்ததற்காக நஷ்ட ஈடு கோரி மனு தாக்கல் செய்திருந்ததில் மேற்படி மனு மாண்புமிகு குளித்தலை சார்பு நீதிமன்றத்தில் M.C.O.P.No.169/2024 என நம்பராகி 1–ம் எதிர்மனுதாரர் ஆகிய தாங்கள் நீதிமன்றத்தில் ஆஜராவதற்காக வருகின்ற 19.08.2025–ம் தேதியில் வாய்தா போடப்பட்டுள்ளது. மேற்படி வாய்தா தேதியன்று மேற்படி நீதிமன்றத்தில் காலை 10.00 மணிக்கு நீங்களோ அல்லது உங்கள் சார்பாக வழக்கறிஞரோ ஆஜராகி வக்காலத்து தாக்கல் செய்ய வேண்டும். தவறினால் ஒருதலைப்பட்சமாக (எக்ஸ் பார்ட்டி) உத்திரவு பிறப்பிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறியவும்.
–கோர்ட் உத்திரவுப்படி–

**M.மதியழகன், B.A.,B.L.,**
**வழக்கறிஞர், குளித்தலை.**

**உயர்திரு உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர், மன்னார்குடி**
**C.M.P.No.109/2025**

R,மின்னல்கொடி,
க/பெ.ராஜமாணிக்கம்,
3/317, தந்தை பெரியார் தெரு,
உள்ளிக்கோட்டை,
மன்னார்குடி Tk, திருவாரூர் Dt மனுதாரர்
–எதிர்–
1.வட்டாட்சியர், உள்ளிக்கோட்டை
2.சார்பதிவாளர் மன்னார்குடி எதிர்மனுதாரர்கள்

**அறிவிப்பு**

மேற்கண்ட வழக்கில் மனுதாரரின் தந்தை சேவான் என்பவர் கடந்த 10.05.1962 தேதி அன்று மேற்படி முகவரியில் இறந்ததை எதிர் மனுதாரர் பதிந்துவரும் இறப்பு பதிவேட்டில் பதியவேண்டி மனு தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவை பொறுத்து யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் இந்த அறிவிப்பு தேதியிலிருந்து 30 தினங்களுக்குள் மேற்படி அலுவலகத்தில் தெரிவித்துக் கொள்ளலாம் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

R.கண்ணதாசன், BA.,BL.,
வழக்கறிஞர், மன்னார்குடி.

**உயர்திரு உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர், மன்னார்குடி**
**C.M.P.No.69/2025**

கோவிந்தராஜ், த/பெ.ரெத்தினம்,
84, மேலத்தெரு,
சின்னகருப்பட்டி மூலை,
மழவராயநல்லூர் அஞ்சல்,
மன்னார்குடி Tk, திருவாரூர் Dt மனுதாரர்
–எதிர்–
வட்டாட்சியர், மன்னார்குடி எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**

மேற்கண்ட வழக்கில் மனுதாரரின் தாயார் பாப்பம்மாள் என்பவர் கடந்த 20.01.2013 தேதி அன்று மேற்படி முகவரியில் இறந்ததை எதிர் மனுதாரர் பதிந்துவரும் இறப்பு பதிவேட்டில் பதியவேண்டி மனு தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவை பொறுத்து யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் இந்த அறிவிப்பு தேதியிலிருந்து 30 தினங்களுக்குள் மேற்படி அலுவலகத்தில் தெரிவித்துக் கொள்ளலாம் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

R.கண்ணதாசன், BA.,BL.,
வழக்கறிஞர், மன்னார்குடி.

**உயர்திரு உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர், மன்னார்குடி**
**C.M.P.No.148/2025**

கஸ்தூரி, க/பெ.சுப்ரமணியன்,
50, தியாகப்பெருமாநல்லூர்,
தஞ்சை சாலை
திருவாரூர். மனுதாரர்
–எதிர்–
1.வட்டாட்சியர், கூத்தாநல்லூர்
2.சார்பதிவாளர்,கூத்தாநல்லூர் எதிர்மனுதாரர்கள்

**அறிவிப்பு**

மேற்கண்ட வழக்கில் மனுதாரரின் பாட்டி சௌபாக்கியம் என்பவர் கடந்த 18.05.1987 தேதி அன்று அக்கரைதெரு, வக்ராநல்லூர் நீடாமங்கலம் தாலுக்கா, திருவாரூர் என்ற முகவரியில் இறந்ததை எதிர் மனுதாரர் பதிந்துவரும் இறப்பு பதிவேட்டில் பதியவேண்டி மனு தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவை பொறுத்து யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் இந்த அறிவிப்பு தேதியிலிருந்து 30 தினங்களுக்குள் மேற்படி அலுவலகத்தில் தெரிவித்துக் கொள்ளலாம் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

T.ஸ்ரீதரன், BA.,BL.,
வழக்கறிஞர், மன்னார்குடி.

**மாவட்ட உரிமையியல், நீதிமன்றம், மன்னார்குடி**
**I.A.No.23/2025inO.S.No.8/2025**

திவாகர் வாதி/மனுதாரர்
–எதிர்–
3.பிரசாத், த/பெ. துரைராஜ்,
தெற்குதெரு, ஒவேல்குடி கிராமம்,
மன்னார்குடி Tk., திருவாரூர் Dt.
3ம் பிரதிவாதி/எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**

மேற்படி அசல் வழக்கு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி 3ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு பலமுறை நீதிமன்றம் மூலமாகவும், அஞ்சல் வழி மூலமாகவும் நோட்டீஸ் அனுப்பப்பட்டு, அனுப்பப்பட்ட நோட்டீஸ் மற்றும் சம்மன் சர்வ் ஆகாததால் திரும்ப வந்துவிட்டது. மேற்படி3ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு மேற்படி வழக்கில் நோட்டீஸ் சர்வ் செய்யும் பொருட்டு 3 ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி கடைசியாக வாழ்ந்த முகவரிக்கு தமிழ் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்ய சமூகம் நீதிமன்றத்தார் அவர்களால் உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்படி உத்தரவிற்கினங்க 3 ம் எதிர்மனுதாரர் /பிரதிவாதி மேற்கண்ட வழக்கின் மேற்கண்ட நீதிமன்றத்தில் வருகின்ற 24.07.2025ம் தேதி காலை 10.30 மணிக்கு நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி ஆட்சேபணை தெரிவிக்கலாம். தவறும்பட்சத்தில் யாருக்கும் ஆட்சேபனை இல்லை என்று வழக்கில் ஒரு தலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறியவும்.

**S.விஜயன் B.A., B.L.,**
வழக்கறிஞர், மன்னார்குடி

## அண்டர்-19 ஒருநாள் போட்டி:
# அதிவேகமாக சதம் விளாசி சூர்யவன்ஷி புதிய சாதனை

**லண்டன், ஜூலை 06-**

19 வயதுக்குட்பட்டோருக்கான ஒருநாள் போட்டியில் அதிவேக சதம் விளாசி இந்திய அணியின் வைபவ் சூர்யவன்ஷி சாதனை படைத்துள்ளார்.

**4-வது ஒருநாள் போட்டி...**

19 வயதுக்கு உட்பட்டோருக்கான ஒரு நாள் தொடரில் இந்தியா மற்றும் இங்கிலாந்து அணிகள் விளையாடி வருகின்றன. இரு அணிகளுக்கும் இடையிலான மூன்று போட்டிகள் ஏற்கனவே நிறைவடைந்துவிட்ட நிலையில், நேற்று (ஜூலை 5) நான்காவது ஒருநாள் போட்டி நடைபெற்றது.

**இந்திய அணி பேட்டிங்...**

இந்தப் போட்டியில் டாஸ் வென்ற இங்கிலாந்து அணி பந்துவீச்சைத் தேர்வு செய்ய, இந்திய அணி முதலில் விளையாடியது. இந்திய அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக கேப்டன் ஆயுஷ் மாத்ரே மற்றும் வைபவ் சூர்யவன்ஷி களமிறங்கினர். ஆயுஷ் மாத்ரே 5 ரன்களில் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தார். இதனையடுத்து, வைபவ் சூர்யவன்ஷியுடன் விஹான் மல்ஹோத்ரா ஜோடி சேர்ந்தார்.

**சூர்யவன்ஷி அசத்தல்...**

இந்த இணை சிறப்பாக விளையாடி ரன்கள் சேர்த்தது. தொடக்கம் முதலே அதிரடியாக விளையாடிய சூர்யவன்ஷி சிக்ஸர்களை பறக்கவிட்டார். அதிரடியாக விளையாடிய அவர் 52 பந்துகளில் சதம் விளாசி அசத்தினார். அவரது விக்கெட்டினை வீழ்த்த முடியாமல் இங்கிலாந்து வீரர்கள் திணறினர். முதல் மூன்று போட்டிகளில் சிறப்பாக விளையாடியதைப் போன்று நான்காவது போட்டியிலும் சூர்யவன்ஷி அசத்தலான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.



அதிவேக சதம்...

52 பந்துகளில் சதம் விளாசியதன் மூலம் 19 வயதுக்குட் பட்டோருக்கான ஒருநாள் போட்டிகளில் அதிவேக சதம் விளாசிய வீரர் என்ற சாதனையை அவர் படைத்துள்ளார். அதிரடியாக விளையாடிய அவர் 78 பந்துகளில் 143 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார். அதில் 13 பவுண்டரிகள் மற்றும் 10 சிக்ஸர்கள் அடங்கும். அவரைத் தொடர்ந்து, மறுமுனையில் சிறப்பாக விளையாடிய விஹான் மல்ஹோத்ராவும் சதம் விளாசி அசத்தினார். அவர் 121 பந்துகளில் 129 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார். அதில் 15 பவுண்டரிகள் மற்றும் 3 சிக்ஸர்கள் அடங்கும். மற்ற வீரர்கள் பெரிய அளவில் ரன்கள் குவிக்கவில்லை.

**363 ரன்கள் குவிப்பு...**

இறுதியில் இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களின் முடிவில் 9 விக்கெட்டுகளை இழந்து 363 ரன்கள் எடுத்துள்ளது. இங்கிலாந்து தரப்பில் ஜாக் ஹோம் 4 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். செபஸ்டியன் மோர்கன் 3 விக்கெட்டுகளையும், ஜேம்ஸ் மிண்டோ ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர். 364 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி இங்கிலாந்து அணி களமிறங்குகிறது.

## தோனியின் 15-வது திருமண நாள்

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன் எம்.எஸ்.தோனி கடந்த 2010 ஆம் ஆண்டு ஜூலை 4ஆம் தேதி சாக்சி என்பவரை காதலித்து திருமணம் செய்து கொண்டார். எம்.எஸ்.தோனி - சாக்சி தம்பதிக்கு ஸிவா என்ற ஒரு மகள் இருக்கிறாள்.

இந்த நிலையில், நேற்று தங்களது 15வது திருமண நாளை தோனி - சாக்சி தம்பதி கேக் வெட்டி கொண்டாடியுள்ளனர். இந்நிலையில், திருமண நாளை ஒட்டி சாக்சி தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் திருமண கொண்டாட்ட புகைப் படங்களை பகிர்ந்துள்ளார்.

## சாம்சன் அதிக தொகைக்கு ஏலம்

கேரளா கிரிக்கெட் லீக் (20 ஓவர்) தொடரின் 2-வது சீசன் ஆகஸ்ட் 22-ம் தேதி தொடங்கி செப்டம்பர் 7-ம் தேதி வரை நடைபெற உள்ளது. இந்த தொடரில் ஏரிஸ் கொல்லம் சைலர்ஸ், திருவனந்தபுரம் ராயல்ஸ், ஆலப்பி ரிப்பிள்ஸ், காலிகட் குளோப்ஸ்டார்ஸ், கொச்சி புளூ டைகர்ஸ் மற்றும் திருச்சூர் டைட்டன்ஸ் ஆகிய 6 அணிகள் கலந்து கொள்கின்றன.

இந்நிலையில் இந்த 2-வது சீசனுக்கான வீரர்களின் ஏலம் இன்று நடைபெற்றது. இதில் அதிரடி விக்கெட் கீப்பர் பேட்ஸ்மேனான சஞ்சு சாம்சனை ரூ. 26.8 லட்சத்திற்கு கொச்சி புளூ டைகர்ஸ் அணி ஏலத்தில் எடுத்துள்ளது. இதன் மூலம் கேரளா கிரிக்கெட் லீக் வரலாற்றில் அதிக தொகைக்கு ஏலம் போன வீரர் என்ற பெருமையை பெற்றுள்ளார்.

## சென்னையில் மினி மாரத்தான்

சர்வதேச கூட்டுறவு ஆண்டு 2025, மற்றும் சர்வதேச கூட்டுறவு நாள் கொண்டாட்டத்தை முன்னிட்டு, தமிழக கூட்டுறவுத்துறை சார்பில் ‘சமத்துவம் கூட்டுறவின் மகத்துவம்’ ‘‘கூடுவோம், ஓடுவோம் கூட்டுறவால் உலகை வெல்வோம்’’ என்ற கருப்பொருளை கொண்டு மினி மாரத்தான் சென்னை தீவுத்திடலில் இன்று நடைபெறவுள்ளது.

மினி மாரத்தான் தீவுத்திடலில் தொடங்கி வெற்றி போர் நினைவுச்சின்னம், அண்ணா சதுக்கம், விவேகானந்தர் இல்லம் வரை சென்று மீண்டும் அதே பாதையில் தீவுத்திடல் வந்தடையும் மொத்த தொலைவு 5 கி.மீ ஆகும். இப்போட்டியில் 18 வயது தொடங்கி 40 வயது உடையவர்கள், மேலும் 40 வயது முதல் அதற்கு மேல் 2000 க்கும் மேற்பட்ட முன்பதிவு செய்துகொண்ட நபர்கள் ஆண், பெண் என கலந்து கொள்ள உள்ளார்கள்.

## சினிமாவில் சுரேஷ் ரெய்னா

இந்திய கிரிக்கெட் அணி, மற்றும் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் முன்னாள் வீரரான சுரேஷ் ரெய்னா. இவர் தமிழ் சினிமாவில் நாயகனாக அறிமுகமாகிறார். இன்னும் டைட்டிலில் வைக்கப்படாத இந்த படம் கிரிக்கெட்டை மையமாக வைத்து உருவாகிறது. சந்தோஷ் நாராயணன் இசையமைக்கிறார். அறிமுக இயக்குனர் லோகன் இயக்குகிறார். இவர் நாயகனாக அறிமுகாகும் படத்தின் அறிவிப்பு விழா சென்னையில் நடந்தது.

கிரிக்கெட் வீரர் ஷிவம் துவே சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். ஆம்ஸ்டர்டாம் நகரில் குடும்பத்துடன் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கும் ரெய்னா, வீடியோ கால் மூலம் நிகழ்ச்சியில் பேசினார். ரெய்னா கூறியதாவது, ‘‘சினிமா எனக்கு பிடிக்கும். கதாநாயகனாக களமிறங்குவது மகிழ்ச்சி அளிக்கிறது. தமிழகம் எனக்கு பிடித்த இடம். இங்கு நிறைய ஆசீர்வாதங்களையும், அற்புதங்களையும் கண்டுள்ளேன். தமிழ் படத்தில் நடிப்பது எனக்கு பெருமையும் கூட. கதை எனக்கு பிடித்திருந்ததால் உடனடியாக ஒப்புக் கொண்டேன். இனிமே தான் ஆட்டம் ஆரம்பம்’’ என்றார்.

## தி.மு.க.வுக்கு ஆதரவு எப்படி..?
# 3 தொகுதிகளின் நிர்வாகிகளுடன் முதல்வர் ஸ்டாலின் ஆலோசனை

**சென்னை, ஜூலை 06-**

பட்டுக்கோட்டை, பாபநாசம், மணப்பாறை 3 சட்டப்பேரவை தொகுதிகளின் நிர்வாகிகளுடன் தி.மு.க. தலைவரும், தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின் ஆலோசனை நடத்தினார்.

2026 சட்டப்பேரவைத் தேர்தலில் மீண்டும் ஆட்சியை பிடிக்கும் திட்டத்தோடு பல்வேறு முன்னெடுப்புகளை இப்போதே தொடங்கிவிட்டது தி.மு.க.. ஒரு பக்கம் ‘ஓரணியில் தமிழ்நாடு’ எனும் முழக்கத்தோடு வீடு வீடாக சென்று உறுப்பினர் சேர்க்கை பணிகளை தி.மு.க. தொடங்கியுள்ளது. இந்த சூழலில் ‘ உடன்பிறப்பே வா’ எனும் பெயரில் தொகுதி வாரியாக நிர்வாகிகளையும் சந்தித்து வருகிறார் ஸ்டாலின்.



இதன் ஒரு பகுதியாக நேற்று தஞ்சை மாவட்டத்தை சேர்ந்த பட்டுக்கோட்டை, பாபநாசம் சட்டப்பேரவை தொகுதிகள் மற்றும் திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த மணப்பாறை தொகுதி நிர்வாகிகளுடன் நேற்று ஆலோசனை நடத்தினார். இதில் பட்டுக்கோட்டை தொகுதி தி.மு.க. வசம் உள்ளது. பாபநாசம், மணப்பாறை தொகுதிகள் தி.மு.க. கூட்டணி கட்சியான மனிதநேய மக்கள் கட்சியின் வசம் உள்ளது.

இந்நிலையில் நேற்று சென்னையில் உள்ள அண்ணா அறிவாலயத்தில் ‘உடன்பிறப்பே வா’ என்ற பெயரில் பட்டுக்கோட்டை, பாபநாசம், மணப்பாறை ஆகிய 3 சட்டப்பேரவை தொகுதிகளின் தி.மு.க. நிர்வாகிகளுடன் முதல்வர் ஸ்டாலின் ஆலோசனை நடத்தினார். தொகுதி மக்களின் மனநிலை, தி.மு.க. அரசு மீதான மக்களின் எண்ணவோட்டம், தி.மு.க. அரசுக்கான ஆதரவு ஆகியவை குறித்து நிர்வாகிகளுடன் தனிப்பட்ட முறையில் ஆலோசனை நடத்தி விவரங்களை கேட்டறிந்தார்.

மேலும், தொகுதியில் கட்சியினரின் மனநிலை, கட்சியினருக்கு உள்ள குறைகள், கூட்டணி கட்சிகளின் ஒத்துழைப்பு ஆகியவை குறித்து தனித்தனியாக நிர்வாகிகளிடம் கேட்டறிந்தார் முதல்வர் ஸ்டாலின்.

## டெஸ்ட் கிரிக்கெட்டில் புதிய மைல்கல்:
# டிராவிட், சேவாக்கின் சாதனையை சமன் செய்த யஷஸ்வி ஜெய்ஸ்வால்

**பர்மிங்காம், ஜூலை 06-**

டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் குறைந்த இன்னிங்ஸ்களில் 2 ஆயிரம் ரன்களை எட்டிய இந்திய வீரர்களின் பட்டியலில் ஜெய்ஸ்வால் இணைந்தார்.

**2-வது டெஸ்ட்...**

இந்தியா - இங்கிலாந்து கிரிக்கெட் அணிகள் இடையிலான 2-வது டெஸ்ட் போட்டி பர்மிங்காமில் நடந்து வருகிறது. இதில் முதலில் பேட் செய்த இந்திய அணி முதல் இன்னிங்சில் 587 ரன்கள் குவித்தது. கேப்டன் சுப்மன் கில் இரட்டை சதம் (269 ரன்) அடித்தார். முதல் இன்னிங்சை தொடங்கிய இங்கிலாந்து அணி 89.3 ஓவர்களில் 407 ரன்கள் சேர்த்து ஆல்-அவுட் ஆனது. விக்கெட் கீப்பர் ஜேமி சுமித்




184 ரன்களுடன் இருந்தார். ஹாரி புரூக் 158 ரன்களில் ஆட்டமிழந்தார். இந்திய தரப்பில் முகமது சி ராஜ் 6 விக்கெட்டும், ஆகாஷ் தீப் 4 விக்கெட்டும் சாய்த்தனர்.

**இந்தியா முன்னிலை...**

பின்னர் 180 ரன்கள் முன்னிலையுடன் 2-வது இன்னிங்சை ஆடிய இந்திய அணி 3-ம் நாள் ஆட்ட நேர முடிவில் ஒரு விக்கெட்டுக்கு 64 ரன்கள் எடுத்து மொத்தம் 244 ரன்கள் முன்னிலை பெற்றுள்ளது. ஜெய்ஸ்வால் 28 ரன்னில் எல்பிடபிள்யூ ஆனார். லோகேஷ் ராகுல் 28 ரன்களுடனும், கருண் நாயர் 7 ரன்களுடனும் களத்தில் உள்ளனர். நேற்று 4-வது நாள் ஆட்டம் நடைபெற்றது.

**மைல்கல்...**

இந்த இன்னிங்சில் ஜெய்ஸ்வால் 9 ரன்கள் அடித்திருந்தபோது சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட்டில் 2 ஆயிரம் ரன்களை கடந்தார். இந்த மைல்கல்லை வெறும் 40 இன்னிங்ஸ்களில் எட்டியுள்ளார். இதன் மூலம் டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் குறைந்த இன்னிங்ஸ்களில் 2 ஆயிரம் ரன்களை எட்டிய இந்திய வீரர்களின் மாபெரும் சாதனை பட்டியலில் முதலிடத்தில் உள்ள ஜாம்பவான்கள் வீரேந்திர சேவாக் மற்றும் ராகுல் டிராவிட் ஆகியோரை சமன் செய்துள்ளார்.

### குறைந்த இன்னிங்சில் 2 ஆயிரம் ரன்கள்:

1. டிராவிட்/சேவாக்/ஜெய்ஸ்வால் - 40 இன்னிங்ஸ்கள்.
2. விஜய் ஹசாரே/கம்பீர் - 43 இன்னிங்ஸ்கள்.
3. சுனில் கவாஸ்கர்/சச்சின் - 44 இன்னிங்ஸ்கள்.
4. கங்குலி - 45 இன்னிங்ஸ்கள்.
5. புஜாரா - 46 இன்னிங்ஸ்கள்.

# தி.மு.க. கூட்டணிக்குதான் வெற்றி: கனிமொழி எம்.பி.

**திருநெல்வேலி, ஜூலை 06-**

வெற்றி என்பது நிச்சயமாக தி.மு.க. கூட்டணிக்குதான் என தி.மு.க. எம்.பி. கனிமொழி தெரிவித்துள்ளார்.

நெல்லையில் தி.மு.க. எம்.பி. கனிமொழி செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

த.வெ.க. தனித்து போட்டியிடுவது தி.மு.க.வுக்கு சவாலாக இருக்காது. த.வெ.க.வுக்கும் அ.தி.மு.க.வுக்கும் தான் போட்டி. அவங்க இரண்டு பேருக்கு இடையே வேண்டுமானால் சவாலாக இருக்கும்.

நிறைய பேர் தனித்து போட்டியிடலாம். இது அவர்களது தனிப்பட்ட முடிவு. வெற்றி என்பது நிச்சயமாக தி.மு.க. கூட்டணிக்கு தான். மக்களின் வரவேற்பை பார்க்கும்போது மிகத் தெளிவாக தெரிகிறது. முதலிலே இருந்தே தமிழ்நாடு ஓரணி



யில்தான் இருக்கிறது. வேறு யாரை இணைப்பது என்பது முதலமைச்சரின் முடிவு. எங்களோடு, நம்முடைய முதலமைச்சர் ஏற்றுக்கொண்டு வரக்கூடிய யாராக இருந்தாலும் ஏற்றுக்கொள்வோம். விஜயின் அறிவிப்பால் சில பேர் அதிர்ச்சிக்கு ஆளாகி இருக்கலாம். மக்களின் எதிரிகள் யார் என்பதை அவர்கள் தெளிவாக புரிந்து கொண்டு இருக்கிறார்கள். இவ்வாறு அவர் கூறினார்.

## சர்வதேச ஸ்கேட்டிங் போட்டியில் தங்கம்:
# தூத்துக்குடி மாணவிக்கு துணை முதல்வர் வாழ்த்து

**சென்னை, ஜூலை 06-**

சர்வதேச ஸ்கேட்டிங் போட்டியில் வெற்றி பெற்ற தூத்துக்குடி மாணவிக்கு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்தார்.

இந்தோனேசியா தலைநகரான ஜகார்த்தாவில் கடந்த மே மாதம் நடைபெற்ற சர்வதேச ஸ்கேட்டிங் போட்டியில் 500 மீட்டர் பந்தயத்தில் 6 வயதுக்குட்பட்ட மாணவ மாணவியர் பிரிவில் தூத்துக்குடி மாவட்டம் சார்பாக, ஹோலி கிராஸ் ஆங்கில இன்டியன் பள்ளியில் பயிலும் எல்.கே.ஜி. மாணவி “அன்விதா சிவக்குமார்” 5 வயது ஐ.பி.என். அகடமி சார்பாக கலந்து கொண்டு தங்கப் பதக்கம் வென்று முதல் இடத்தைப் பிடித்து சாதனை படைத்தார். மேலும் அந்த மாணவி 200 மீட்டர் பந்தயத்தில் வெண்கலப் பதக்கம் வென்று மூன்றாவது இடத்தைப் பிடித்து தூத்துக்குடி மாவட்டத்திற்கும், தமிழக விளையாட்டுத்துறைக்கும் பெருமை சேர்த்திருந்தார்.



தமிழக அரசு விளையாட்டுத்துறையில் மேற்கொள்ளும் ஊக்கமும் ஆக்கமுமே தூத்துக்குடியைச் சேர்ந்த 5 வயது சிறுமி சர்வதேச ஸ்கேட்டிங் போட்டியில் மனதைரியத்துடன் கலந்து கொண்டு சாதனை படைக்க முடிந்துள்ளது. அந்த சாதனையை பெற்ற மாணவியை சென்னைக்கு வரவழைத்து பசுமை வழி சாலையில் உள்ள குறிஞ்சி இல்லத்தில் மாநில தி.மு.க. இளைஞர் அணி செயலாளரும், துணை முதல்வருமான உதயநிதி ஸ்டாலின் ஒரு பவுன் தங்க மோதிரம் வழங்கி வாழ்த்து தெரிவித்தார். மேலும் தனது திறமையின் மூலமாக சாதனைகள் பல தொடர வேண்டும், வெற்றிகள் குவிய வேண்டும் என்றும் மாணவியிடம் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் கேட்டுக் கொண்டார்.


# சூப்பர் யுனைடெட் செஸ் போட்டி: ரேபிட் பிரிவில் குகேஷ் சாம்பியன்

**ஸாக்ரெப், ஜூலை 06-**

சூப்பர் யுனைடெட் ரேபிட் மற்றும் பிளிட்ஸ் செஸ் தொடரின், ரேபிட் பிரிவில் இந்தியாவின் குகேஷ் பட்டம் வென்றுள்ளார்.

**தொடர் வெற்றி...**

சூப்பர் யுனைடெட் ரேபிட் மற்றும் பிளிட்ஸ் செஸ் போட்டி குரோஷியாவின் ஸாக்ரெப் நகரில் நடைபெற்று வருகிறது. கிராண்ட் செஸ் டூரில் இந்த தொடரும் ஒன்றாக உள்ளது. இதன் ரேபிட் பார்மெட் முதல் சுற்று ஆட்டத்தில் குகேஷ் தோல்வியை தழுவினார். அதன் பின்னர் நடைபெற்ற



5 சுற்றுகளில் தொடர்ச்சியாக வெற்றி பெற்றார். 6-வது சுற்று ஆட்டத்தில் உலகின் முதல் நிலை வீரரான நார்வேயின் மேக்னஸ் கார்ல்சனை குகேஷ் வீழ்த்தினார்.

**ரேபிட் பிரிவில் பட்டம்...**

தொடர்ந்து 7-வது சுற்றில் அனிஷ் கிரி, 8-வது சுற்றில் இவான் சரிச் உடன் விளையாடினார். அந்த இரண்டு சுற்றும் டிராவில் முடிந்தது.

இதன் மூலம் ரேபிட் பிரிவில் 14 புள்ளிகளுடன் பட்டம் வென்றார் குகேஷ். ரேபிட் பிரிவில் 11 புள்ளிகளுடன் இரண்டாம் இடம் பிடித்தார் போலந்து வீரர் துடா. 10 புள்ளிகளுடன் மூன்றாம் இடம் பிடித்தார் கார்ல்சன். 9 புள்ளிகள் எடுத்த பிரக்ஞானந்தா 4-ம் இடத்தை பகிர்ந்து கொண்டார்.

## சென்னை, மதுரையில் இருந்து
# சர்வதேச விண்வெளி மையத்தை பொதுமக்கள் இன்று பார்க்கலாம்

**சென்னை, ஜூலை 06-**

சர்வதேச விண்வெளி மையத்தை இன்று இரவு 8 மணிக்கு முதல் 8.06 மணி வரை சென்னை, திருச்சி, மதுரை, கோவை, பெங்களூரு, ஐதராபாத், விசாகப்பட்டினம் ஆகிய நகரங்களில் பார்க்கலாம்.

சர்வதேச விண்வெளி மையம், பூமியில் இருந்து சுமார் 400 கிலோ மீட்டர் உயரத்தில் விண்ணில் சுற்றிக்கொண்டு இருக்கிறது. அது ஒரு முறை பூமியை சுற்றுவதற்கு 90 நிமிடங்கள் என ஒருநாளைக்கு 16 முறை சுற்றுகிறது. அதனால் அதில் இருக்கும் விண்வெளி வீரர்கள், தினமும் 16 முறை சூரிய உதயத்தையும், அஸ்தமனத்தையும் பார்க்கின்றனர். தற்போது அந்த விண்வெளி மையத்தில் இந்தியாவின் சுபான்ஷு சுக்லாவும் இருக்கிறார். இந்த விண்வெளி மையத்தை பூமியில் இருந்து சில நேரங்களில் வெறும் கண்ணால் பார்க்கலாம். இந்த மையத்தை எந்த பகுதி மக்கள் பார்க்கலாம் என்பதனை நாசா தெரிவித்து வருகிறது.

அந்த வகையில் இன்று முதல் 12-ந் தேதி வரை இந்தியாவின் பல்வேறு இடங்களில் பொதுமக்கள் விண்ணில் வலம் வரும் விண்வெளி மையத்தை பார்க்கலாம். அதன்படி இன்று காலை 5 மணியளவில் வங்கதேசத்தை ஒட்டியுள்ள இந்திய பகுதிகளில் தெரியும். இரவு 8 மணிக்கு முதல் 8.06 மணி வரை சென்னை, திருச்சி, மதுரை, கோவை, பெங்களூரு, ஐதராபாத், விசாகப்பட்டினம் ஆகிய நகரங்களில் பார்க்கலாம். இரவு 9.38 மணி முதல் 9.41 மணி வரை பாகிஸ்தான் எல்லை அருகே உள்ள இந்திய பகுதிகளில் இருந்து பார்க்கலாம். மீண்டும் 10-ந் தேதி காலை 4.58 மணி முதல் 5.06 மணி வரை சென்னையில் பார்க்கலாம். அதிவேகத்தில் அது செல்வதால் ஓரிரு நொடி மட்டுமே விண்ணில் பார்க்கும் வாய்ப்பு கிடைக்கும்.

# விஜய் கட்சியிலிருந்து பிரசாந்த் கிஷோர் திடீர் விலகல்

**சென்னை, ஜூலை 06-**

விஜய் கட்சிக்கு தேர்தல் ஆலோசனை வழங்கும் பொறுப்பை ஏற்றிருந்த பிரசாந்த் கிஷோர், அதில் இருந்து விலகிக் கொண்டுள்ளார்.

தமிழக வெற்றிக்கழகம் என்ற பெயரில் கட்சி தொடங்கியுள்ள நடிகர் விஜய், அடுத்த தேர்தலில் போட்டியிடுகிறார். தி.மு.க., பா.ஜ.,வுடன் கூட்டணி கிடையாது என்று நேற்று முன்தினம் நடந்த செயற்குழுவில் வெளிப்படையாக அறிவித்துள்ள விஜய், கூட்டணி ஆட்சிக்கு தயாராக இருப்பதாகவும் ஏற்கனவே கூறி இருக்கிறார்.

சென்னையில் பிப்ரவரியில் நடந்த கட்சியின் விஜய் கட்சியின் இரண்டாம் ஆண்டு தொடக்க விழாவில், தேர்தல் பிரசார உத்திகளை வகுக்கும் நிபுணரான பிரசாந்த் கிஷார் பங்கேற்றார். அப்போது ‘விஜய் தமிழகத்தின் புதிய நம்பிக்கை’ என்றும் கூறினார்.

இந்நிலையில், தமிழக தேர்தலில் பிரசாந்த் கிஷோருக்கு ஆர்வம் இல்லாத நிலை ஏற்பட்டு விட்டது. பீகார் மாநில தேர்தலில் பிரசாந்த் கிஷோரின் ஜன் சுராஜ் கட்சி போட்டியிடுவதால், அவரது கவனம் முழுவதும் அங்கு தான் இருக்கிறது. அது மட்டுமின்றி, தமிழகத்தில் விஜய் எடுத்த கூட்டணி தொடர்பான நிலைப்பாடுகளில், பிரசாந்த் கிஷோர் தரப்பினருக்கு உடன்பாடு இல்லை என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதன் காரணமாக, விஜய் கட்சிக்கு ஆலோசனை வழங்கும் பொறுப்பில் இருந்து பிரசாந்த் கிஷோர் வெளியேறி விட்டார். அவரது சார்பில் தமிழகத்தில் விஜய் கட்சிக்காக பணியாற்றிய 30 பேரும், சமீபத்தில் விலகிக் கொண்டு விட்டனர். அவர்களில் ஒரு சிலர், நேரடியாக ஆதவ் அர்ஜூனாவின் ‘வாய்ஸ் ஆப் காமன்ஸ்’ நிறுவனத்தில் இணைந்து பணியாற்ற தொடங்கியுள்ளனர்.

‘நான் பீகார் தேர்தல் பணியில் மும்முரமாக இருக்கிறேன். விஜய்க்கு ஆலோசனை வழங்கும் பணியில் ஈடுபடலாமா, வேண்டாமா என்று நவம்பர் மாதத்துக்கு பிறகே முடிவு செய்வேன்’ என்று பிரசாந்த் கிஷோர் தெரிவித்துள்ளார்.

## வசனத்தை மாற்றுங்கள்:
# சிராஜூக்கு அர்ஷ்தீப் புகழாரம்

**பர்மிங்காம், ஜூலை 06-**

இங்கிலாந்துக்கு எதிரான போட்டியில் அசத்திய முகமது சிராஜூக்கு அர்ஷ்தீப் வழங்கிய பாராட்டு நெகிழ்ச்சியடைய செய்திருக்கிறது.

**ஜஸ்ஸி பாயை...**

இந்திய அணியில் பும்ரா முக்கியமான பந்துவீச்சாளர். கடந்த 2024ஆம் ஆண்டு டி20 உலகக் கோப்பையில் பும்ரா குறித்து சிராஜ், “நான் ஜஸ்ஸி பாயை மட்டுமே நம்புகிறேன். ஏனெனில் அவர் ஆட்டத்தை மாற்றக்கூடிய ஒரே வீரர் அவர் மட்டுமே” என தப்பும் தவறுமான ஆங்கிலத்தில் பேசியது வைரலானது. (ஐ ஒன்லி பிளிவ் ஆன் ஜஸ்ஸி பாய், பிகாஸ் ஹீ இஸ் கேம் சேஞ்சர் பிளேயர் ஹீ இஸ், ஒன்லி ஒன் காய் ஜஸ்பிரீத் பும்ரா - சிராஜ் பேசியது). தற்போது, இங்கிலாந்துக்கு எதிரான போட்டியில் பும்ரா இல்லாமல் சிராஜ் அசத்தியதால் அந்த வசனத்தை மாற்றும்படி சிராஜிடம் அர்ஷ்தீப் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

**என்னையும் நம்புவேன்...**

டெஸ்ட் போட்டியின் 3-ஆம் நாள் முடிவுக்குப் பிறகு சிராஜ் பி.சி.சி.ஐ. நேர்காணலில் பேசிக்கொண்டிருந்தபோது அர்ஷ்தீப் அருகே வந்து, “திட்டங்கள் மாறிவிட்டன. நீங்கள் வசனத்தை மாற்றுங்கள் சிராஜ். ’இனிமேல் நான் என்னையும் பும்ராவையும் நம்புவேன்’ என மாற்றுங்கள்” என்றார். இது சிராஜூக்கு மிகப்பெரிய கௌரமாகக் கருதப்படுகிறது. சமூக வலைதளங்களில் இந்த வீடியோவும் வைரலாகி வருகிறது.

**சிராஜ் 6 விக்கெட்...**

இந்தியாவுக்கு எதிரான 2-ஆவது டெஸ்ட்டில் முதலில் பேட்டிங் ஆடிய இந்திய அணி 587 ரன்கள் குவித்தது. அடுத்து ஆடிய இங்கிலாந்தின் பேட்டர்களை ஆகாஷ் தீப், சிராஜ் கூட்டணி வீழ்த்தினார்கள். குறிப்பாக இந்தப் போட்டியில் சிராஜ் 6 விக்கெட்டுகளை வீழ்த்தி அசத்தினார்.

## சி.பி.எஸ்.இ. பத்தாம் வகுப்பு
# பொதுத்தேர்வுக்கான விதிமுறைகள் வெளியீடு

**புதுடில்லி, ஜூலை 06-**

10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வு இரண்டு முறை நடத்தப்படும் என சி.பி.எஸ்.இ. அறிவித்திருந்தது. அதற்கான தகுதி அளவுகோல் மற்றும் விதிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளது.

தகுதி அளவுகோல் மற்றும் விதிமுறைகள் பின் வருமாறு:-

அனைத்து மாணவர்களும் முதல் பொதுதேர்வை கட்டாயம் எழுத வேண்டும். முதல் பொதுத்தேர்வில் தேர்ச்சி பெறும் மாணவர்கள், 2ஆவது பொதுத்தேர்வு எழுத தகுதி பெறுவார்கள். அவர்கள் கூடுதல் மதிப்பெண் பெறுவதற்காக மூன்று பாடங்களை எழுதலாம். முதல் பொதுத்தேர்வில் மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட பாடங்களை புறக்கணிக்கும் மாணவர்கள் அத்தியாவசிய ரிபீட் ஆக கருதப்படுவார்கள். அவர்கள் அடுத்த பிப்ரவரி மாதம் நடைபெறும் பொதுத்தேர்வைதான் எழுத முடியும். 10ஆம் வகுப்பு தேர்ச்சிக்குப்பின் கூடுதல் பாடங்கள் கிடையாது. தனிப்பாடம் ஆப்சனும் வழங்கப்படாது.

விளையாட்டில் கலந்து கொள்ளும் வீரர்களுக்கு, முதல் தேர்வின்போது போட்டிகள் இருந்தால், 2ஆவது தேர்வின் போது தேர்வு எழுத அனுமதிக்கப்படுவார்கள். குளிர்காலத்தால் பாதிக்கப்படும் பள்ளி மாணவர்கள் முதல் அல்லது 2ஆவது பொதுத்தேர்வு ஆகியவற்றில் ஒன்றை தேர்வு செய்யலாம். சிறப்பு தேவை அவசியம் என்ற மாணவர்களுக்கு அது வழங்கப்படும். 2ஆவது பொதுத்தேர்வுக்கும் அது பொருந்தும்.

பிப்ரவரி மாதம் நடைபெறும் தேர்வுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு உள் மதிப்பீடு தேர்வு நடத்தப்படும். முதல் பொதுத்தேர்வு பிப்ரவரி மத்தியில் இருந்து தொடங்கும். 2ஆவது பொதுத்தேர்வு மே மாதத்தில் நடைபெறும். புதிய 10ஆம் வகுப்பு மாணவர்கள்தான் முதல் பொத்தேர்வுக்கு அனுமதிக்கப்படுவார்கள். அத்தியாவசிய ரிபீட் மாணவர்கள் அனுமதிக்கப்படுவார்கள். தேர்ச்சி பெறாத மாணவர்கள் அனுமதிக்கப்படுவார்கள்.

அதிக மதிப்பெண் பெற விரும்பும் மாணவர்கள் 3 பாடத்திற்கான திரும்ப எழுதலாம். முதல் மற்றும் 3ஆவது தேர்வில் தேர்ச்சி பெறாத மாணவர்கள் எழுதலாம். இரண்டு தேர்வுகளுக்கும் முழு ஆண்டு பாடத்திட்டம் அடங்கும். படிப்பு, தேர்வு திட்டத்தில் எந்த மாற்றமும் இருக்காது. முதல் தேர்வின் முடிவு ஏப்ரல் மாதம் வெளியாகும். 2ஆவது தேர்வின் முடிவு ஜூன் மாதம் வெளியாகும்.

# ராமேசுவரம், அரியமான் பீச் ஆகிய சுற்றுலா பகுதிகளை மேம்படுத்த அதிகாரிகளுடன் அமைச்சர் ஆலோசனை



**ராமேசுவரம், ஜூலை 06-**

ராமேசுவரம், குந்துகால், தனுஸ்கோடி, பகுதியில் சுற்றுலாவாசிகளை கவரும் வகையிலும்,உச்சிப்புளி அருகே ஆற்றங்கரை பகுதியில் அமைக்கப்பட்டுள்ள உயிர் வேலி தோட்டம் மற்றும் அரியமான் பீச் பகுதியில் சுற்றுலா பயணிகளை கவரும் வகையிலும்,பயன்படும் வகையிலும் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் விதமாக கதர் மற்றும் வனத் துறை அமைச்சர் நேற்று சனிக்கிழமை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

ராமநாதபுரம் மாவட்டம், ராமேசுவரம், மண்டபம் ஒன்றியம் அரியமான் ஆற்றங்கரை ஆகிய பகுதிகளில் தமிழக அரசு சார்பில் நடைபெற்று வரும் பணிகளை பார்வையிடுவதற்கும் மேலும் சுற்றுலா பகுதிகளை மேம்படுத்தும் விதமாக தமிழ்நாடு வனம் மற்றும் கதர் துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் நேற்று சனிக்கிழமை வருகை தந்தார்.

தொடர்ந்து குந்துக்கால் பகுதியில் வனத்துறை கட்டுப்பாட்டில் உள்ள சுற்றுலா தலங்களை பார்வையிட்டத்துடன் கடல் பகுதியில் சுற்றுலாப் பயணிகள் படகில் சவாரி செய்து வருவதை பார்வையிட்டு கேட்டறிந்ததுடன் மேலும் சுற்றுலா பயணிகளுக்கு தேவைக்கேற்ப படகுகள் இயக்க வேண்டுமென தெரிவித்தார்.

மேலும் வனத்துறையின் மூலம் ஆழ்கடல் பகுதியில் கண்காணிப்பு பணிகளை மேற்கொள்ளும் வகையில் கண்காணிப்பு கேமராக்கள் செயல்பட்டு வருவதை பார்வையிட்டு அதன் பயன்கள் மற்றும் செயல்பாடுகள் குறித்து அலுவலர்களிடம் கேட்டறிந்தார். பின்னர் தனுஷ்கோடி எம்.ஆர்.சத்திரம் பகுதியில் உள்ள பறவைகள் கண்காணிப்பு மேடைகளை பார்வையிட்டதுடன் இராமேஸ்வரம் பகுதியில் உள்ள காப்புக்காடுகள் உள்ள தோட்டங்களை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அதன் பின்னர் மண்டபம் ஒன்றியம் ஆற்றங்கரை பகுதியில் வனத்துறையின் மூலம் கடல் அரிப்பை தடுக்கும் வகையில் கடலோரப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள உயிர்வேலி தோட்டம் பராமரிக்கப்பட்டு வருவதை பார்வையிட்டார்.

அதன் பின்னர் கடற்கரை ஓரமாக உள்ள கிராம பகுதிகளில் கடல் தண்ணீர் மூலம் பாதிப்பு ஏற்படாத வகையில் கரைகளை பலப்படுத்தும் வகையில் இது போன்ற மரங்களை மேற்கொண்டு நடவு செய்து கடல் அரிப்பை தடுத்திட வேண்டுமென அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.அதுபோல தொடர்ந்து உச்சிப்புளி அருகே அமைந்துள்ள அரியமான் பீச் கடற்கரை பகுதிகளை பார்வையிட்டு இப்பகுதியில் சுற்றுலா பயணிகள் அதிகம் வருவதையொட்டி வனத்துறையின் மூலம் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்கினார். பின்னர் சுற்றுலா பயணிகள் பயன்பெறும் வகையில் வனத்துறையின் மூலம் செயல்பட உள்ள சூழல் அங்காடி மையத்தை திறந்து வைத்து சுற்றுலா பயணிகள் விரும்பும் வகையில் உணவுப் பொருட்கள் மற்றும் அழகு சாதன பொருட்கள் விற்பனை செய்திட வேண்டுமென அறிவுறுத்தினார். அதன் பின்னர் இரண்டு பகுதிகளில் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன்,,மாவட்ட வன உயிரின காப்பாளர் முருகன், ராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் மாவட்ட வன அலுவலர் ஹேமலதா ஆகியோர்களிடம் ஆலோசனை நடத்தினார். இந்த ஆய்வின் போது ராமேஸ்வரம் நகர் மன்ற தலைவர் நாசர் கான், இராமநாதபுரம் நகர் மன்ற தலைவர் கார்மேகம், துணைத் தலைவர் பிரவீன் தங்கம் ஆகியோர்கள் கலந்து கொண்டனர்.

## ஒட்டன்சத்திரத்தில் ஊட்டச்சத்து வேளாண்மை இயக்க திட்டம் தொடக்க விழா: திண்டுக்கல் எம்.பி. சச்சிதானந்தம் பங்கேற்பு



**ஒட்டன்சத்திரம், ஜூலை 06-**

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரத்தில் தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் பாதுகாப்புத்துறை சார்பில் 2025 2026 ஆம் ஆண்டில் மக்களின் உடல்நலம் மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பினை உறுதி செய்யும் பொருட்டு ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கத்தினை திண்டுக்கல் பாராளுமன்ற உறுப்பினர் ஆர். சச்சிதானந்தனம் துவக்கி வைத்தார். திட்டத்தில் 6 வகையான காய்கறி விதை தொகுப்பு, 3 வகையான பழச்செடி தொகுப்பு, உள்ளிட்டவைகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. நிகழ்வில் ஒன்றிய செயலாளர்கள் ஜோதீஸ்வரன், தர்மராஜன், பொதுக்குழு உறுப்பினர் செல்வராஜ், தோட்டக்கலை உதவி இயக்குனர் செல்லமுத்து, வேளாண்மை உதவி இயக்குனர் சந்திர மாலா, வேளாண்மை அலுவலர் நல்லமுத்து ராஜா, துணை தோட்டக்கலை அலுவலர் ரத்தினவேல், உதவி தோட்டக்கலை அலுவலர்கள் கலையரசன், ஜெயபாலன், சிவசுப்பிரமணியன், கவிபிரகாஷ் உள்ளிட்ட தோட்டக்கலை, வேளாண்மை துறை அலுவலர்கள், விவசாயிகள் கலந்து கொண்டனர். படம். திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரத்தில் ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கம் திட்டத்தினை திண்டுக்கல் பாராளுமன்ற உறுப்பினர் ஆர் சச்சிதானந்தம் துவக்கி வைத்தார்.

## நத்தத்தில் மாதர் சங்க தாலுகா மாநாடு



**நத்தம், ஜூலை 06-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தத்தில் உள்ள சந்தனகருப்பு சுவாமி கோவில் வளாகத்தில் அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்க தாலுகா மாநாடு நடந்தது.இதற்கு கிளை செயலாளர் ரேணுகா தேவி தலைமை தாங்கினார். மாநில செயலாளர் ராணி, மாவட்ட தலைவர் சுமதி, மாவட்ட செயலாளர் பாப்பாத்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாநாட்டில் நத்தம் அரசு மருத்துவனையில் காலிப்பணியிடங்களை நிரப்ப கோருவது, தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தை பேரூராட்சி பகுதிகளுக்கு விரிவுபடுத்த அரசை வலியுறுத்துவது என்பது உள்பட 8 தீர்மானங்கள் நிறைவேற்றபட்டன.

தொடர்ந்து மாதர் சங்க புதிய தாலுகா நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கபட்டனர்.

இ தில் மாதர் சங்க கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### விருதுநகர் மாவட்டத்தில்

# தனிநபர்கள் மற்றும் குழுக்கள் கடன் பெற விண்ணப்பிக்கலாம்

### கலெக்டர் சுகபுத்ரா தகவல்

**விருதுநகர், ஜூலை 06-**

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக்கழகம் மூலமாக பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினைச் சார்ந்த தனிநபர்கள் மற்றும் குழுக்கள் தங்களது பொருளாதார முன்னேற்றத்திற்காக சாதியக் கூறுகள் சிறு தொழில்கள் மற்றும் வியாபாரம் செய்ய தனிநபர் கடன் மற்றும் குழுக் கடன் திட்டங்களுக்கு குறைந்த வட்டி விகிதத்தில் கடன் வழங்கப்படுகிறது. இந்த நிதியாண்டியில் ரூ.200 கோடி இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பத்தாரரின் தகுதிகள் பின்வருமாறு:-

விண்ணப்பத்தாரர் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இனத்தவராக இருத்தல் வேண்டும்.குடும்ப ஆண்டு வருமானம் ரூ.3,00,000-க்கு மிகாமல் இருக்க வேண்டும். விண்ணப்பதாரர் 18 வயது பூர்த்தி அடைந்தவராகவும் 60 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். ஒரு குடும்பத்தில் ஒரு நபருக்கு மட்டுமே கடனுதவி வழங்கப்படும். தனிநபர் கடன் திட்டம் சிறு வார்த்தகம் /வணிகம், விவசாயம் மற்றும் அதனை சார்ந்த தொழில்கள் செய்வதற்கு அதிக பட்சமாக ரூ.25 இலட்சம் வரை கடனுதவி வழங்கப்படுகிறது. ஆண்டு வட்டி விகிதம் ரூ1.25 இலட்சம் வரை 7 சதவிதம் மற்றும் ரூ1.25 இலட்சம் முதல் ரூ15 இலட்சம் வரை 8 சதவிதம் கடனைத் திரும்ப செலுத்தும் காலம் 3 முதல் 5 ஆண்டுகள் வரை ஆகும். குழுக்கடன் திட்டம் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் சிறு தொழில்ஃவணிகம் செய்வதற்கு ஒருவருக்கு அதிகபட்சமாக ரூ.1.25 இலட்சம் வரையும் குழு ஒன்றுக்கு அதிகபட்சமாக ரூ.25 இலட்சம் வரையும் ஆண்டிற்கு 7 சதவிதம் வட்டி விகிதத்தில் கடனுதவி வழங்கப்படுகிறது.

கடனைத் திரும்ப செலுத்தும் காலம்: 3ஆண்டுகள். சுய உதவிக்குழு துவங்கி 6 மாதங்கள்! பூர்த்தியாகியிருக்க வேண்டும். திட்ட அலுவரா்(மகளிர் திட்டம்) அவர்களால் தரம் செய்யப்பட்டிருக்க வேண்டும். ஒரு குழுவில் அதிகபட்சம் 20 உறுப்பினர்கள் அனுமதிக்கப்படுவார்கள். இரு பாலருக்கான சுய உதவிக்குழுவில் உறுப்பினர்களுக்கும் இக்கடனுதவி வழங்கப்படுகிறது. பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினராக உள்ளவர்களுக்கு ஒரு கறவை மாட்டிற்கு ரூ.60,000- விதம் 2 கறவைமாடுகள் வாங்க அதிகபட்சம் ரூ.1,20,000- வரை கடனுதவி வழங்கப்படுகிறது. ஆண்டு வட்டி விகிதம் 7 சதவிதம், திரும்ப செலுத்தும் காலம் 3 ஆண்டுகள். மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகம் மற்றும் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி கிளைகளிலும் கடன் விண்ணப்பம் பெற்றுக்கொள்ளலாம். மேலும் இக்கழக இணையதள முகவரியில் (www.tabcedco.tn.gov.in) பதிவிறக்கம் செய்து விண்ணப்பிக்கலாம். விண்ணப்பதாரர்கள் கடன் விண்ணப்பப் படிவங்களை பூர்த்தி செய்து சாதி சான்று, வருமான சான்றுஇ பிறப்பிடச் சான்றுஇ குடும்ப அட்டை, ஓட்டுநர் உரிமம் இ ஆதார் அட்டைஇ வங்கி கோரும் ஆவண நகல்களுடன் சம்மந்தப்பட்ட மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகம், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் அலுவலகம் மற்றும் கூட்டுறவு வங்கிகளில் சமர்ப்பிக்க வேண்டும் என மாவட்ட கலெக்டர் சுகபுத்ரா, தெரிவித்துள்ளார்.

### சாத்தூர் அருகே

## சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்த கூலி தொழிலாளிக்கு 20 ஆண்டுகள் சிறை தண்டனை

**விருதுநகர், ஜூலை 06-**

சாத்தூர் அருகே சத்திரப்பட்டி சக்தி மாரியம்மன் கோவில் அருகே வசிப்பவர் கூலித் தொழிலாளி இவர் கடந்த 23.3.2024 அன்று 9 வயதுடைய தனது உறவுக்கார சிறுமியை அவளது பெற்றோர்கள் வேலைக்கு சென்று இருந்த நிலையில் பாலியல் தொல்லை கொடுத்துள்ளார்.

இது குறித்து பாதிக்கப்பட்ட சிறுமியின் தாய் தந்த புகாரியின் பேரில் சாத்தூர் அனைத்து மகளிர் போலீசார் வழக்கு பதிவு செய்து செல்வத்தை கைது செய்து ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ள போக்சோ நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர். வழக்கினை விசாரித்த நீதிபதி சுதாகர் (பொறுப்பு) குற்றம் சாட்டப்பட்ட செல்வத்திற்கு 20 ஆண்டுகள் சிறை தண்டனையும் ரூ. ஆயிரம் அபராதமும் விதித்து தீர்ப்பு கூறினார்.

## நத்தம் அருகே பாலத்தில் கார்கள் மோதி விபத்து- 7 பேர் படுகாயம்

**நத்தம், ஜூலை 06-**

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியை சேர்ந்தவர் ஸ்டாலின் (29) இவர் காரைக்குடியை சேர்ந்த தனது நண்பர்களான ஆனந்த்(30 ),தேவா (28) ஶ்ரீதர் (33) வசந்தகுமார் (25), இளங்கோ (30), திருச்செல்வம் (25), மணிகண்டன் (31), சிந்தனைச் செவ்வன் (28) ஆகியோருடன் கொடைக்கானலுக்கு நேற்று முன் தினம் இரவு 2 காரில் சென்று கொண்டிருந்தனர். இதில் ஒரு காரை ஸ்டாலினும், மற்றொரு காரை இளங்கோவும் ஒட்டி சென்றனர். நத்தம் அருகே அப்பாஸ்புரம் பகுதியில் வந்து கொண்டிருந்த போது விதமாக கட்டுப்பாட்டை இழந்த கார்கள் சாலையோரத்தில் இருந்த ஆற்றுப் பாலத்தில் அடுத்தடுத்து மோதி நின்றது.

இதில் காரில் வந்த ஆனந்த்(30 ),தேவா (28) ஶ்ரீதர் (33),வசந்தகுமார் (25),திருச்செல்வம் (25), மணிகண்டன் (31), சிந்தனைச்செவ்வன் (28) ஆகிய 7 பேர் பலத்த காயமடைந்தனர். ஆபத்தான நிலையில் அக்கம்பக்கத்தினர் அவர்களை மீட்டு நத்தம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர். பின்னர் 7 பேரும் மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கபட்டுள்ளனர். இச்சம்பவம் குறித்து போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் கிருஷ்ணகுமார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்.

### நிலக்கோட்டை அருகே சோகம்:

## டானிக் குடித்த குழந்தை பரிதாபமாக உயிரிழப்பு

**வத்தலகுண்டு, ஜூலை 06-**

திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை அருகே உள்ள சி.புதுரை சேர்ந்த சின்ன பாண்டி வயது 30. இவர் டேங்கர் லாரி டிரைவர் ஆவார். இவருக்கு கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் நடைபெற்றது. இவருக்கு தற்போது பிரணித் வயது 1 1/2 ஆண் குழந்தை உள்ளது. இந்தக் குழந்தைக்கு கடந்த 26.6.2025 தினங்களுக்கு முன்பு அதிகமான சளி பிடித்ததை தொடர்ந்து சளிக்கு டானிக் வாங்கி கொடுத்து அன்று இரவு தூங்க வைத்துள்ளனர். அன்று அதிகாலை 4 மணிக்கு உடல்நிலை சரியில்லாமல் போகவே உடனடியாக வத்தலகுண்டு தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டு பின்னர் சிகிச்சைக்காக திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் சேர்த்து சிகிச்சை அளித்தனர்.

அங்கும் குழந்தையின் உடல்நிலை சரியில்லாததால் மேலும் சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனையில் கொண்டு மேல் சிகிச்சை அளித்து வந்தனர். அங்கு சிகிச்சை பலனின்றி நேற்று இரவு குழந்தை பரிதாபமாக இறந்து போனது. இதுகுறித்து நிலக்கோட்டை போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் அபினேஷ் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகிறார். சளி மருந்து குடித்து குழந்தை இறந்து போன சம்பவம் இப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.



**திருமங்கலம் தொகுதி அம்மாபட்டியில் ரூ.28 லட்சத்தில் கட்டப்படவுள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியின் பூமி பூஜை விழாவில் முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் பங்கேற்று பணிகளை தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் அம்மாபட்டி முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் கல்பனா சுகுமார், அம்மா பேரவை மாவட்ட செயலாளர் தமிழழகன், ஒன்றிய செயலாளர் அன்பழகன், மீனவரணி மாவட்ட செயலாளர் சரவண பாண்டியன் மற்றும் கட்சி நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.**

### திருமங்கலம் அருகே

## விபத்தில் சிக்கிய வாலிபரை விருதுநகர் எம்.பி மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்



**திருமங்கலம், ஜூலை 06-**

மதுரை மாவட்டம் திருமங்கலம் அருகே கப்பலூர் சுங்கச்சாவடி பகுதியில் விபத்தில் சிக்கிய வாலிபரை விருதுநகர் எம்.பி மாணிக்கம் தாகூர் மனித நேயத்துடன் மீட்டு மருத்துவ மனைக்கு அனுப்பி வைத்தார்.

திருமங்கலம் கிறிஸ்டின் காலனியைச் சேர்ந்தவர் கலைச்செல்வன் (வயது 35).இவர் நேற்று காலை கப்பலூர் சுங்கச்சாவடி பகுதியில் டிரை சைக்கிளில் வந்துள்ளார். அப்போது அந்த வழியாக அதிவேகமாக வந்த கார் மோதியதில் கலைச்செல்வன் தலையில் பலத்த காயமடைந்து உயிருக்கு போராடினார். இந்நிலையில் விருதுநகரில் நடைபெறுகின்ற அரசு விழாவில் பங்கேற்பதற்காக விருதுநகர் எம்.பி மாணிக்கம் தாகூர் கட்சி நிர்வாகிகளுடன் காரில் சென்று கொண்டிருந்தார். அப்போது இந்த விபத்தினை கண்டவுடன் காரை நிறுத்தி கீழே இறங்கி கட்சி நிர்வாகிகள் உதவியுடன் விபத்தில் சிக்கிய வாலிபர் கலைச்செல்வனை மீட்டு 108 அரசு ஆம்புலன்ஸ் உதவியுடன் திருமங்கலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்.

இதனிடையே கலைச்செல்வனுக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டிருந்ததால் திருமங்கலம் அரசு மருத்துவமனையில் முதலுதவி செய்யப்பட்டு மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவ மனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். மேலும் விபத்தில் காயமடைந்த வாலிபர் கலைச்செல்வனுக்கு தேவையான அனைத்து சிறப்பு சிகிச்சைகளையும் வழங்கிடுமாறு விருதுநகர் எம்.பி மாணிக்கம் தாகூர், மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையின் முதன்மை மருத்துவரிடம் தொலைபேசி வாயிலாக வலியுறுத்தி கேட்டுக் கொண்டார். விபத்தில் சிக்கித் தவித்த வாலிபரை விருதுநகர் எம்.பி மாணிக்கம் தாகூர் மீட்டு மனித நேயத்துடன் மருத்துவ மனைக்கு அனுப்பி வைத்த நிகழ்வு நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## தீ தடுப்பு பாதுகாப்புக்குழு குழுக்கூட்டம்: கலெக்டர் சுகபுத்ரா தலைமையில் நடந்தது



**விருதுநகர், ஜூலை 06-**

விருதுநகர் மாவட்ட கலெக்டர் அலுவலகக் கூட்டரங்கில் மாவட்ட தீ தடுப்பு பாதுகாப்புக் குழு மற்றும் கண்காணிப்புக் குழுக் கூட்டம் மாவட்ட கலெக்டர் சுகபுத்ரா, தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பட்டாசு தொழிற்சாலைகளில் நிகழும் வெடிவிபத்தினை தடுப்பது குறித்த வழிமுறைகளான அனுமதிக்கப்பட்ட அளவில் இரசாயன வேதிப்பொருட்களை கையாள்வது, ஒவ்வொரு உற்பத்தி அறை, வேதிப்பொருட்கள் கலவை மற்றும் நிரப்புதல் அறைகளில் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கையில் மட்டும் தொழிலாளர்களை பணிக்கு அமர்த்துவது குறித்தம், பாதுகாப்பாக மணி மருந்து கையாளுதல்; குறித்தம், உள்குத்தகை விடுவதை தடுப்பது குறித்தும், தொழிலாளர்கள் மற்றும் உரிமையாளர்களுக்கு பயிற்சி வழங்குவது குறித்தும், பட்டாசு உற்பத்தியாளர் சங்க பிரதிநிதிகள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்களுக்கு மாவட்ட கலெக்டர் அறிவுரை வழங்கி தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தப்பட்டது.

தீ தடுப்பு பாதுகாப்புக் குழு மற்றும் கண்காணிப்புக் குழுக் கூட்டத்தில் தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இணை இயக்குநர்கள், மற்றும் இணை இயக்குநர் பயிற்சி மையம் சிவகாசி வெடிப்பொருள் கட்டுபாட்டு துறை அலுவலர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர், தீயணைப்பு அலுவலர், தனி வட்டாச்சியர் மற்றும் டான்பாமா, டிப்மா, சிப்மா, டாப்மா, சிறு,குறு பட்டாசு உற்பத்தி சங்க பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## நத்தத்தில் இலவச கண் சிகிச்சை முகாம்



**நத்தம், ஜூலை 06-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தத்தில் அ.தி.மு.க. சார்பாக சட்டமன்ற உறுப்பினர் அலுவலக வளாகத்தில் இலவச கண் சிகிச்சை முகாம் நடந்தது.

முகாமை முன்னாள் அமைச்சர் நத்தம் விசுவநாதன் எம்.எல்.ஏ அறிவுறுத்தலின்படி ஜெயலலிதா பேரவை இணை செயலாளர் கண்ணன் தலைமை தாங்கி தொடங்கி வைத்தார்.

இலவச கண் சிகிச்சை முகாமில் ஸ்ரீவில்லிபுத்தூர் சங்கரா கண் மருத்துவமனை மருத்துவர்கள் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு கண்புரை,பார்வை குறைபாடு, கண் எரிச்சல் உள்ளிட்ட நோய்களுக்கு பரிசோதனை செய்து சிகிச்சை அளித்தனர். இதில் அ.தி.மு.க. தெற்கு ஒன்றிய செயலாளர் மணிகண்டன், நகர அவைத் தலைவர் சேக்ஒலி, உள்ளிட்ட ஒன்றிய, பேரூராட்சி கவுன்சிலர்கள் நகர, கிளை நிர்வாகிகள் கலந்து கொண்டனர். இந்த முகாமில் 100-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.



சென்னையில் நேற்று உடல்நலக்குறைவால் காலமான தமிழறிஞரும், கவிஞருமான கவிகோ வா.மு.சேதுராமனின் இல்லத்திற்கு நேரில் சென்று அவரது உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி குடும்பத்தினருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆறுதல் கூறினார். இதில் அமைச்சர் மா.சுப்பிரமணியன், சட்டமன்ற உறுப்பினர்கள் வி.ஜி.ராஜேந்திரன், ஏ.எம்.வி.பிரபாகரராஜா, மாமன்ற உறுப்பினர்கள் ரத்னா லோகேஷ், மு.ராசா, லோகு ஆகியோர் உடனிருந்தனர்.



சென்னை பெரம்பூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வியாசர்பாடி கல்யாணபுரம் பகுதியில் வசிக்கும் தந்தையை இழந்து கூலி வேலை செய்து வரும் தாயாரின் உதவியுடன் கல்லூரிக்கல்வி பயிலும் மாணவி சுவிதாவின் வீட்டிற்கு நேரில் சென்று மடிக்கணினியை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார். இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர் ஆர்.டி.சேகர் ஆகியோர் உடனிருந்தனர்.



இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு நேற்று சென்னையின் பல்வேறு இடங்களில் நடைபெறும் கட்டுமானப் பணிகளை நேரில் பார்வையிட்டு பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்கள் மற்றும் பொறியாளர்களுக்கு அறிவுரைகளை வழங்கினார்.

### திருச்செந்தூர் கோவில் குடமுழுக்கு விழா

# தி.மு.க. ஆட்சியின் ஆன்மீக புரட்சிக்கு ஒரு மைல்கல்: அமைச்சர் சேகர்பாபு

சென்னை, ஜூலை 06-

திருச்செந்தூர் கோவில் குடமுழுக்கு விழா தி.மு.க. ஆட்சியின் ஆன்மீக புரட்சிக்கு ஒரு மைல்கல் என்று அமைச்சர் சேகர்பாபு தெரிவித்தார்.

இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் சேகர்பாபு நேற்று சென்னையின் பல்வேறு இடங்களில் நடைபெறும் கட்டுமானப் பணிகளை நேரில் பார்வையிட்டு பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்கள் மற்றும் பொறியாளர்களுக்கு அறிவுரைகளை வழங்கினார்.

பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த அமைச்சர் சேகர்பாபு கூறியதாவது:- தமிழ்க் கடவுள் முருகனுக்கு இந்த ஆட்சியில் தொண்டு செய்வதற்கு கிடைத்த வாய்ப்பைப் போல் இதுவரையில் வேறு எந்த ஆட்சியிலும் கிடைக்கவில்லை. முருகனுக்கு தேவையான அனைத்தையும் நிறைவேற்றி தருகின்ற ஒரு ஆட்சியாக இந்த ஆட்சி அமைந்திருக்கின்றது. அந்த வகையில் பழனி கோவில் இன்றைக்கு திருப்பதி போல் மிக பிரம்மாண்டமாக காட்சி அளிக்கிறது. திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமி கோவிலுக்கு வருகின்ற 14.7.2025 குடமுழுக்கு நடைபெற இருக்கின்றது. திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி குடமுழுக்கு வருகின்ற 7-ம் தேதி நடைபெற இருக்கின்றது. அதில் லட்சோப லட்சம் மக்கள் கூடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. திருச்செந்தூர் கோவில் குடமுழுக்கு விழா சிறப்புடன் நடைபெறும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்து, இது இந்த ஆட்சியின் ஆன்மீக புரட்சிக்கு ஒரு மைல்கல் என்றே குறிப்பிடலாம்.

மக்களை நோக்கி விஜயின் பயணத்தை தொடங்க சொல்லுங்கள். அவர் பயணத்தையே செப்டம்பர் மாதத்திற்கு மேல் தான் தொடங்குவேன் என்று சொல்கிறார். காத்திருந்த தொண்டர்களை கூட பார்க்க முடியாமல் இருந்த செய்தி ஊடகங்களில் வந்தது. ஆகவே அவர், முதலில் தன்னையும், தன்னை சார்ந்து இருக்கின்ற இயக்கத்தையும் பார்த்துக் கொள்ள சொல்லுங்கள். மக்களை பாதுகாக்க எங்களுடைய மக்களின் முதல்வர் இருக்கின்றார். விஜய் தேவையில்லாமல் முதல்வரை சந்திப்பேன் என்று கூறிக் கொண்டிருக்கிறார். அறையில் அமர்ந்து கொண்டு அறைகூவல் விடுவதை முதல்-அமைச்சர் எளிதாக தனது லெப்ட் ஹேண்டில் கையாண்டு செல்வார்.

இவ்வாறு அவர் கூறினார்.



அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி ராயப்பேட்டையில் உள்ள கட்சி தலைமை கழக அலுவலகத்தில் நேற்று தனது சுற்றுப்பயணத்துக்கான பாடல் மற்றும் லோகோவை வெளியிட்டார். அருகில் துணை பொதுச்செயலாளர்கள் நத்தம் விஸ்வநாதன், கே.பி.முனுசாமி, பொருளாளர் திண்டுக்கல் சீனிவாசன் உள்ளனர்.

# சுற்றுப்பயணத்திற்கான கட்சிப் பாடல், லோகோவை வெளியிட்டார் இ.பி.எஸ்.

சென்னை, ஜூலை 06-

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி சுற்றுப்பயணத்துக்கான பாடல் மற்றும் லோகோ அ.தி.மு.க. தலைமை அலுவலகத்தில் நேற்று (சனிக்கிழமை) வெளியிடப்பட்டது.

தமிழகத்தில் அடுத்தாண்டு சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற உள்ள நிலையில், எடப்பாடி பழனிசாமி, 'மக்களைக் காப்போம், தமிழகத்தை மீட்போம்' என்ற பெயரில் தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்கிறார்.

முதல்கட்டமாக ஜூலை 7-ம் தேதி கோவை மேட்டுப்பாளையத்தில் தனது பிரச்சாரப் பயணத்தை தொடங்க இருக்கிறார். அதோடு அவர் 23-ம் தேதி தஞ்சை பட்டுக்கோட்டையில் நிறைவு செய்கிறார்.

இந்நிலையில், எடப்பாடி பழனிசாமியின் பிரச்சாரப் பயணம் தொடர்பான லோகோ மற்றும் பாடலை ராயப்பேட்டையில் உள்ள கட்சி தலைமை கழக அலுவலகத்தில் நேற்று வெளியிடப்பட்டது.

இது குறித்த வீடியோவை அ.தி.மு.க. தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளது.

அதில், "மக்களைக் காப்போம். தமிழகத்தை மீட்போம்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

### நானே முதல்வர் வேட்பாளர்:

# அ.தி.மு.க. தலைமையில்தான் கூட்டணி; எடப்பாடி பழனிசாமி மீண்டும் உறுதி

சென்னை, ஜூலை 06-

2026 தேர்தலில் அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணியில் நானே முதல்வர் வேட்பாளர் என்று அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

2026 சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி அ.தி.மு.க. பொதுச் செயலரும் எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி பழனிசாமி தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொள்ள இருக்கிறார். ஜூலை 7-ம் தேதி கோவை மேட்டுப்பாளையத்தில் இருந்து பயணத்தைத் தொடங்குகிறார். இந்த சுற்றுப்பயணத்திற்கான லோகோ மற்றும் பாடலை நேற்று வெளியிட்டார்.

பின்னர் செய்தியாளர்களுடன் பேசிய இபிஎஸ், நான் மக்களைச் சந்திக்கவில்லை என்று முதல்வர் கூறுகிறார். நான் எப்போதும் மக்களுடன் இருப்பவன். மக்களோடு தான் பயணிக்கிறேன். எனது சுற்றுப்பயணம் மூலம் அ.தி.மு.க. மிகப்பெரிய மக்கள் ஆதரவை பெற்று மாற்றத்தை ஏற்படுத்தும். இந்த பயணத்திற்கு மிகப்பெரிய நோக்கம் இருக்கிறது. திமுக ஆட்சியின் கொடுமைகளை மக்களிடம் எடுத்துரைத்து மாற்றத்திற்கான நம்பிக்கையை விதைப்பது. திமுக ஆட்சியை வேரோடு அகற்ற வேண்டும் என்பதே இந்த பயணத்தின் நோக்கம்.

'2026 பேரவைத் தேர்தலில் அ.தி.மு.க. தலைமையில் தான் கூட்டணி, அ.தி.மு.க.தான் ஆட்சி அமைக்கும். இபிஎஸ்தான் முதல்வர் வேட்பாளர்' என்று அமித் ஷா சென்னை வந்தபோது செய்தியாளர்கள் மத்தியில் தெளிவாகக் கூறிவிட்டார். அதனால் அதில் எந்த மாற்றமுமில்லை. கூட்டணியில் உள்ளவர்களை தேர்தல் பிரசார சுற்றுப் பயணத்துக்கு அழைப்பு விடுத்திருக்கிறோம்" என்று தெரிவித்துள்ளார்.

# பிரதமர் மோடிக்கு அர்ஜென்டினாவில் பாரம்பரிய முறையில் உற்சாக வரவேற்பு

பியூனோஸ் அயர்ஸ், ஜூலை 06-

பிரதமர் மோடிக்கு அர்ஜென்டினாவில் பாரம்பரிய முறையில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

பிரதமர் மோடி கானா, டிரினிடாட் அண்டு டுபாகோ, அர்ஜென்டினா, பிரேசில் மற்றும் நமீபியா ஆகிய 5 நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு உள்ளார். இதன் ஒரு பகுதியாக கானா மற்றும் டிரினிடாட் அண்டு டுபாகோ ஆகிய 2 நாடுகளுக்கு பயணம் மேற்கொண்ட அவர் அந்த இரு நாடுகளின் தலைவர்களை சந்தித்து பேசினார்.

அப்போது அவருக்கு 2 நாடுகளிலும் அந்நாடுகளின் உயரிய விருது வழங்கி கவுரவிக்கப்பட்டது. இந்நிலையில், டிரினிடாட் அண்டு டுபாகோ நாட்டில் பிரதமர் மோடியின்



பயணம் நிறைவடைந்ததும், அவர் அர்ஜென்டினாவுக்கு புறப்பட்டு சென்றார்.

அர்ஜென்டினாவில் 2 நாள் பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் மோடி, அந்நாட்டின் எஜீஜா சர்வதேச விமான நிலையத்தில் நேற்று காலை சென்றிறங்கியதும் பாரம்பரிய முறைப்படி அவருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. இதன்பின்னர் அவர் தங்க இருக்கும் ஓட்டலுக்கு சென்றபோது, மோடி மோடி என்றும் பாரத் மாதா கி ஜெய் என்றும் இந்திய வம்சாவளியினர் கோஷங்களை எழுப்பினர். அவர்களுடன் பிரதமர் மோடி உரையாடினார். அவரை வரவேற்கும் வகையில் கலாசார நடனம் ஒன்றும் நடத்தப்பட்டது.

57 ஆண்டுகளில் இந்திய பிரதமரின் முதல் இருதரப்பு பயணம் இதுவாகும். அவருடைய வருகையை முன்னிட்டு, இந்திய சமூகத்தினர் அவருக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர் என மத்திய வெளிவிவகார அமைச்சக செய்தி தொடர்பாளர் ரன்தீர் ஜெய்ஸ்வால் அவருடைய எக்ஸ் தளத்தில் பதிவிட்டு உள்ளார்.

இந்த பயணத்திற்கு பின்னர், பிரேசில் நாட்டில் நடைபெற உள்ள 17-வது பிரிக்ஸ் உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காக அவர் அந்நாட்டுக்கு செல்வார். இதன்பின்னர், இறுதியாக நமீபியா நாட்டுக்கு அவர் பயணம் மேற்கொள்வார்.



மதுரை மாவட்டம் சின்ன சொக்கிகுளத்தில் ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டத்தின் கீழ் ரூ.5.90 கோடி மதிப்பீட்டில் மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றிய அலுவலக புதிய கட்டிட பணிகளுக்கான பூமிபூஜையில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி நேற்று கலந்து கொண்டு தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன்குமார், சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் அ.வெங்கடேசன் ஆகியோர் உள்ளனர்.